REGISTERED AS NEWSPAPER

# உதயன்

பக்கங்கள் - 16+16 விலை - 40 ரூபா செய்தி: 021 493 0000 விளம்பரம்: 021 493 1111

சுடர் :36
கதிர் : 010

கார்த்திகை 21
ஞாயிற்றுக்கிழமை

06 டிசெம்பர் 2020
வள்ளுவர் ஆண்டு 2051

## யாழ். நகரிலேயே அதிகூடிய மழை பதிவு

யாழ்ப்பாணம், டிசெ. 6
யாழ்ப்பாண மாவட்டத்தில் அதிகளவான மழைவீழ்ச்சியாக யாழ்ப்பாண நகரில் 173.4 மில்லிமீற்றர் பதிவாகியுள்ளது 15

## நீரேரி தடுப்பு அணை கதவுகள் திறப்பு

அச்சுவேலி, டிசெ. 6
யாழ்ப்பாணக் குடாநாட்டில் தேங்கி நிற்கும் மழை வெள்ளத்தை வெளியேற்றுவதற்கு குடாக் கடல் நீரேரி தடுப்பு 13

## முல்லைத்தீவில் 9 குளங்கள் வான் பாய்கின்றன

முல்லைத்தீவு, டிசெ. 6
முல்லைத்தீவு மாவட்டத்தில் இதுவரை 703 குடும்பங்களைச் சேர்ந்த 2 ஆயிரத்து 151 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். மாவட்டத்தின் 9 13

## கிளிநொச்சியில் 3 குளங்கள் வான் பாய்வு

கிளிநொச்சி, டிசெ. 6
கிளிநொச்சி மாவட்டத்தில் இதுவரை 3 பிரதான குளங்கள் வான் பாயத் தொடங்கி 13

## 73,000 பேர் யாழ்ப்பாணத்தில் பாதிப்பு

யாழ்ப்பாணம், டிசெ. 6
யாழ்ப்பாண மாவட்டத்தில் நேற்றுமுன்தினம் இரவு தொடக்கம் பெய்த கன மழையால் மாவட்டத்தில் பாதிக்கப்பட்டவர் 13



## யாழ். போதனா மருத்துவமனையும் வெள்ளத்திலிருந்து தப்பவில்லை!!

யாழ்ப்பாணம், டிசெ. 6
யாழ்ப்பாணத்தில் நேற்றுமுன்தினம் இரவு தொடக்கம் நேற்று அதிகாலை வரையில் தொடர்ந்த கனமழை 13

## அங்கஜனின் படத்துக்காக அலைந்த அச்சுவேலி பொலிஸ்

யாழ்ப்பாணம், டிசெ. 6
வலி.கிழக்கு பிரதேச சபையின் ஆளுகைக்கு உட்பட்ட வீதியில், 13

### இடரில் சிக்கிய யாழ்ப்பாணத்துக்கு

# நிவாரணத்துக்கு கோரிய நிதியின் அரைவாசியே அரசு வழங்கியது!

யாழ்ப்பாணம், டிசெம்பர் 6
புரேவி புயல் மற்றும் கனமழையால் பாதிக்கப்பட்ட யாழ்ப்பாண மாவட்டத்துக்கு நிவாரணத்துக்கு உடனடியாக 19 மில்லியன் ரூபா தேவை என்று யாழ்ப்பாண மாவட்டச் செயலகத்தால் கோரிக்கை முன்வைக்கப்பட்டபோதும் ராஜபக்ச அரசு 10 மில்லியன் ரூபாவையே வழங்கியுள்ளது. 13




## 7 பேர் சாவு

கொழும்பு, டிசெ. 6
கொரோனாத் தொற்றால் மேலும் 7 பேர் உயிரிழந்துள்ளனர் என்று சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் அசேல குணவர்தன நேற் 15

### பருத்தித்துறையில்

## ஒரே குடும்பத்தவர் மூவருக்கு கொரோனா

ஒன்றரை வயது குழந்தையும் உள்ளடக்கம்

யாழ்ப்பாணம், டிசெ. 6
பருத்தித்துறை ஓடக்கரையில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த மூவருக்கு கொரோனா உள்ளமை 13

### நகர மறுக்கும் புரேவி

## இன்று மாலை வரை மழைக்கு வாய்ப்பு

**புவியியற்றுறை விரிவுரையாளர் விளக்கம்**

யாழ்ப்பாணம், டிசெ. 6
வடக்கு மாகாணத்தினூடாக கடந்து சென்ற புரேவி புயலானது வலுக்குறைந்து தீவிர தாழமுக்கமாக மன்னார் வளைகுடா கடற்பகுதியில் ஒரே இடத்திலேயே நிலை கொண்டுள்ளது. இந்த தாழமுக்கம் 13

கதிர்

## 85% மரக்கறி யாழில் அழிவு!!!

யாழ்ப்பாணம், டிசெ. 6
வடக்கைப் புரட்டியெடுத்த புரேவி புயல் மற்றும் கன மழை காரணமாக யாழ்ப்பாண மாவட்டத்தில் மாத்திரம் 13

## எத்தனை ஆண்டுகளானாலும் தமிழினத்தை அழிக்க முடியாது

நாடாளுமன்றில் சாணக்கியன் எம்.பி. சூளுரை

கொழும்பு, டிசெ. 6
எத்தனை வருடங்களானாலும் எமது இனத்தை எவராலும் அழிக்கவே முடியாது. இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன் தெரிவித்தார். நாடாளுமன்றத் 13

செலான் வங்கியிடமிருந்து
உங்கள் தங்கப் பவுணின் கரட் எதுவாயினும் அதிகூடிய முற்பணம்
அதிகபட்ச முற்பணத் தொகை
ரூ.68,000/-
0.79% மாதாந்த வட்டி வீதம் மட்டுமே
அதிகபட்ச இரகசியத் தன்மை
சிநேகபூர்வமான உடனடி சேவை
சிறந்த பாதுகாப்பு
செலான் தங்கக்கடன் 011 200 88 88 செலான் வங்கி

# தமிழ் அரசியல் கைதிகளை விடுவிக்க நடவடிக்கை தேவை

## ஆளுந்தரப்பின் தமிழ் எம்.பிக்கள்

## நீதி அமைச்சரிடம் கோரிக்கை!

**கொழும்பு, டிசெ. 6**

**நீண்டகாலம் தடுத்துவைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலையைத் துரிதப்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும் என ஆளும் கட்சியில் அங்கம் வகிக்கும் தமிழ் பேசும் உறுப்பினர்கள் நீதி அமைச்சர் அலி சப்ரியிடம் கூட்டாகக் கோரிக்கை விடுத்துள்ளனர்.**

தமிழ் அரசியல் கைதிகள் நீண்ட காலமாக தடுத்துவைக்கப்பட்டுள்ளனர். இவர்களை விடுவிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் சிறுபான்மை உறுப்பினர்கள் அனைவரும் இணைந்து ஜனாதிபதியுடன் சந்திப்பொன்றை ஏற்பாடு செய்தால், சட்டமா அதிபர் உள்ளிட்ட தரப்பினரையும் அழைத்து இதுபற்றிக் கலந்துரையாட முடியும் என்று நீதி அமைச்சர் இதன்போது சுட்டிக் காட்டியுள்ளார்.

அரசியல் கைதிகள் விடயத்தில் கொள்கை ரீதியான தீர்மானம் எடுக்கப்பட்டால் இது தொடர்பில் துரித நடவடிக்கை எடுக்க முடியும் என்றும் அமைச்சர் இங்கு குறிப்பிட்டிருந்தார். அது மாத்திரமன்றி புதிய அரசமைப்புத் தயாரிப்பு விடயத்தில் அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் தமிழ் பேசும் உறுப்பினர்களின் நிலைப்பாடுகளும் உள்வாங்கப்பட வேண்டும் எனக் கோரிக்கை விடுக்கப்பட்டதுடன், இது தொடர்பில் எழுத்துமூலமான யோசனைகளை முன்வைக்குமாறு அமைச்சர் கேட்டுக்கொண்டார்.

கைதிகள் விடுதலை மாத்திரமன்றி சிறுபான்மை மக்கள் எதிர்கொள்ளும் பல்வேறு பிரச்சினைகளை அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் தமிழ் பேசும் உறுப்பினர்கள் கூட்டாக இணைந்து ஜனாதிபதியிடம் எடுத்துச் செல்வதற்கு நீதி அமைச்சர் அலி சப்ரி தலைமை தாங்க வேண்டும் என்றும் கோரிக்கை விடுக்கப்பட்டது. இதற்கு அமைச்சர் இணக்கம் தெரிவித்தார். (ம - 159)



வாசிப்பு மாதத்தை முன்னிட்டு "எங்கட புத்தகம்" நிறுவனமும், சுன்னாகம் பொது நூலகமும் இணைந்து ஒழுங்கு செய்த நூலகக் கண்காட்சி கடந்த திங்கட்கிழமை முதல் நடைபெற்று வருகின்றது. கண்காட்சி எதிர்வரும் 8ஆம் திகதிவரை நடைபெறவுள்ளது. கண்காட்சியில் ஒரு நிகழ்வாக சுன்னாகம் சிவன் சிறுவர் கழக அங்கத்தவர்கள் பங்குபற்றலுடன் "அறிந்திரன்" சிறுவர் மாதச் சஞ்சிகை அறிமுகமும் நடைபெற்றது. (எ)

# பிரமுகர் பாதுகாப்புப் பிரிவுக்குள் 44 பேருக்குத் தொற்று உறுதி

கொழும்பு, டிசெ. 6

பிரமுகர் பாதுகாப்புப் பிரிவைச் சேர்ந்த 44 பேருக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. பொலிஸ் திணைக்களத்தின் உள்ளகத் தகவல்களை மேற்கோள்காட்டி, சிங்கள இணையத்தளமொன்று இந்தச் செய்தியை வெளியிட்டுள்ளது.

இதுவரை பொலிஸ் விசேட அதிரடிப் படையைச் சேர்ந்த 264 பேருக்கு கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

அதேவேளை, பொலிஸ் திணைக்களத்துக்குள் மொத்தமாக ஆயிரத்து 277 பேருக்கு கொரோனாத் தொற்று ஏற்பட்டுள்ளது.

நாடு பூராகவும் உள்ள 85 பொலிஸ் நிலையங்களில் கொரோனாத் தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர். (எ-22)

# ஈஸ்டர் விசாரணை நிறைவு

## சட்டமா அதிபரே வழக்குத் தாக்கல் செய்யவேண்டும் என்கிறார் சரத் வீரசேகர

கொழும்பு, டிசெ. 6

ஈஸ்டர் தற்கொலைக் குண்டுத் தாக்குதல்களுடன் தொடர்புபட்ட 8 சம்பவங்கள் தொடர்பான பொலிஸ் விசாரணைள் நிறைவடைந்து விட்டன.

இனி சட்டமா அதிபர்தான் வழக்குத் தொடுக்கவேண்டும். அதனை துரிதப்படுத்துமாறு அவரை நாளை திங்கட்கிழமை நேரில் சந்தித்து கோரிக்கை விடுக்கவுள்ளேன் என்று பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் சரத் வீரசேகர தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் எதிரணி உறுப்பினர்கள் நேற்று எழுப்பிய கேள்விகளுக்குப் பதிலளிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

" ஈஸ்டர் தாக்குதல் தொடர்பில் கைதுசெய்யப்பட்டவர்களில் சி.ஐ.டி.மற்றும் ரி.ஐ.டியின்கீழ் 171 பேர் தடுத்துவைக்கப்பட்டுள்ளனர். மொத்தமாக 257 பேர் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர். மனிதப் படுகொலை, சூழ்ச்சித்திட்டம் ஆகிய குற்றச்சாட்டுகளின் அடிப்படையில் அவர்களுக்கு எதிராக சட்டமா அதிபரே வழக்குத் தொடுக்கவேண்டும். ஜனாதிபதி ஆணைக்குழுவின் விசாரணை அறிக்கையும் வெளிவரவுள்ளது.

சட்டமா அதிபரை நாளை நேரில் சந்திக்கும்போது இதற்கான நடவடிக்கையை துரிதப்படுத்துமாறு கோரிக்கை விடுப்பேன். எஞ்சிய ஓர் ஆவணமும் ஒப்படைக்கப்படும். அவ்வாறு வழக்குத் தொடுக்கப்பட்ட பின்னர் பணம் வழங்கியவர்கள் யார், சூத்திரதாரிகள் யார் என்பவை தொடர்பான அனைத்து தகவல்களும் தெரியவரும். வழக்கு விசாரணைகள் நடைபெறுகையில் இந்த நாடாளுமன்றத்தில் உள்ளவர்கள்கூட கைதாகலாம். சில இரகசிய தகவல்களை வெளியிடமுடியாது. பேராயர் மெல்கம் ரஞ்சித் ஆண்டகையையும் நேரில் சந்தித்து நிலைமையைத் தெளிவுபடுத்தவுள்ளேன். அதேவேளை, கடந்த அரசு புலனாய்வுத் துறையை பலவீனப்படுத்தியதாலேயே இவ்வாறானதொரு சம்பவம் நடைபெற்றது." என்றார். (த-44)

# வீடு புகுந்து திருட்டு: இருவர் கைதாகினர்!

யாழ்ப்பாணம், டிசெ. 6

யாழ்ப்பாணம் மற்றும் கோப்பாய் பகுதிகளில் வீடு புகுந்து திருட்டில் ஈடுபட்டனர் என்ற குற்றச்சாட்டில் நேற்று இருவர் யாழ்ப்பாணம் குற்றத் தடுப்புப் பிரிவுப் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

கைதுசெய்யப்பட்டவர்களிடம் இருந்து 7 பவுண் நகைகள் கைப்பற்றப்பட்டுள்ளன என்று பொலிஸார் தெரிவித்தனர்.

வீடுகளில் உள்ளவர்கள் வெளியில் சென்ற போது, பட்டப்பகலில் வீடுகளை உடைத்து நகைகள் திருட்டுப் போயுள்ளமை தொடர்பில் அண்மையில் யாழ்ப்பாணம் மற்றும் கோப்பாய் பொலிஸ் நிலையங்களில் முறைப்பாடுகள் செய்யப்பட்டிருந்தன. இந்தச் சம்பவம் தொடர்பில் யாழ்ப்பாணம் மூத்த பொலிஸ் அத்தியட்சகருக்கு கீழான மாவட்டக் குற்றத் தடுப்பு பொலிஸ் பிரிவு விசாரணைகளை முன்னெடுத்தது.

பிரிவின் பொறுப்பதிகாரி பிரதான பொலிஸ் பரிசோதகர் நிகால் பிரான்சிஸ் தலைமையில் முன்னெடுக்கப்பட்ட விசாரணைகளில் நாவற்குழி மற்றும் யாழ்ப்பாணம் புகையிர நிலைய வீதியைச் சேர்ந்த இருவர் கைதுசெய்யப்பட்டனர். அவர்களிடம் மேலதிக விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்று பொலிஸார் தெரிவித்தனர். (எ-26)

# இடி, மின்னலில் ஒரு வீடு சேதம்

சாவகச்சேரி, டிசெ.6

மின்னல் தாக்கியதில் தென்மராட்சி மிருசுவில் கெற்பேலியில் நேற்றுமுன்தினம் இரவு ஒரு வீடு சேதமடைந்துள்ளது என்று தெரிவிக்கப்பட்டது.

குடாநாட்டில் நேற்றுமுன்தினம் இரவு சில நிமிடங்களுக்கு மின்னல் தோன்றியது. அதனைத் தொடர்ந்து மின்னலுடன் முழக்கமும் சேர்ந்து தோன்றியது. மாரி காலத்தில், புயல் ஓய்ந்த நேரத்தில் இவ்வாறு மின்னலும் இடிமுழக்கமும் சேர்ந்து தோன்றியமையால் மீண்டும் இடர் வரவுள்ளதா என்ற அச்சம் ஏற்பட்டிருந்தது.

இந்த நிலையில், கெற்பேலியில் மின்னல் தாக்கியுள்ளது. அந்த வீட்டில் வெள்ளம் தேங்கியுள்ளது. வீட்டின் ஓர் அறையில் குடும்பத்தினர் தங்கியிருந்த வேளையில் மின்னல் தாக்கியுள்ளது. எனினும், தெய்வாதீனமாக எவருக்கும் பாதிப்பு ஏற்படவில்லை என்று தெரிவிக்கப்பட்டது. (த-9)

# ஈஸ்டர் தாக்குதல் விசாரணை திருப்திகரமானதாக இல்லை!

## எதிரணி எம்.பிக்கள் கடும் அதிருப்தி

கொழும்பு, டிசெ. 6

ஈஸ்டர் தற்கொலைக் குண்டுத் தாக்குதல் தொடர்பான விசாரணைகள் உரிய திசையை நோக்கிப் பயணிக்கவில்லை என்று ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் நாடாளுமன்றில் நேற்றுமுன்தினம் தெரிவித்தனர்.

லக்ஷ்மன் கிரியல்ல, நிரோஷன் பெரேரா, காவிந்த ஜயவர்தன, ஹெக்டர் அப்புஹாமி ஆகிய உறுப்பினர்களே இவ்வாறு சுட்டிக்காட்டினார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

" ஈஸ்டர் தற்கொலைக் குண்டுத் தாக்குதலுடன் தொடர்புடைய பிரதான சூத்திரதாரிகள் கண்டுபிடிக்கப்பட வேண்டும், குண்டு வைக்கத் தூண்டியது யார், நிதி உதவி வழங்கியது யார் என அனைத்து சூத்திரதாரிகளும் தண்டிக்கப்படவேண்டும். ஆனால் இவற்றைக் கண்டுபிடிப்பதற்கான திசையை நோக்கி விசாரணைகள் நடைபெறுவதாகத் தெரியவில்லை.

இதனால்தான் பேராயர் மெல்கம் ரஞ்சித் ஆண்டகையும் விசாரணை தொடர்பில் அதிருப்தி வெளியிட்டுள்ளார். எனவே, உரிய வகையில் விசாரணை நடத்துமாறு வலியுறுத்துகின்றோம்." என்றனர். (த-44)




Illustrated by
Shumaila Musafer

WOMEN IN NEED

UNDP

# சிறைச்சாலைக் கொலைகளை தடுத்து நிறுத்துவது அவசியம்!

## ஈ.சரவணபவன் வலியுறுத்து



யாழ்ப்பாணம், டிசெ.6

**சிறை அதிகாரிகளின் கட்டுப்பாட்டில் உள்ள கைதிகள் சிறை அதிகாரிகளாலும், சிறப்பு அதிரடிப் படையினராலும் கொல்லப் பட்டமை மற்றும், காயப்படுத்தப்பட்டமை ஏற்றுக்கொள்ள முடியாத சம்பவங்கள்.**

இவ்வாறு தெரிவித்துள்ளார் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் முக்கியஸ்தரும், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான ஈ.சரவணபவன்.

இது தொடர்பில் அவர் வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அந்த அறிக்கையில் உள்ளதாவது:

அண்மையில் மஹர சிறைச்சாலையில் நடந்த அசம்பாவிதங்களில் 11 கைதிகள் கொல்லப்பட்டும், 107 கைதிகள் மற்றும், 2 சிறை அதிகாரிகள் காயப்படுத்தப்பட்டும் உள்ளார். அவர்களில் 28 கைதிகள் ஆபத்தான நிலைமையில் உள்ளனர். இந்தச் சம்பவம் எம்மைப் பெரும் அதிர்ச்சிக்குள்ளாக்கியுள்ளது.

சிறைச்சாலையில் கொரோனாத் தொற்று ஏற்பட்டதை அடுத்து பி.சி.ஆர். வேண்டும் என்று கைதிகள் கோரினர் என்றும், அது மறுக்கப்பட்டதாலேயே அவர்கள் சிறையை விட்டு வெளியேற முயன்றனர் என்றும் கூறப்படுகின்றது.

அப்போது நடந்த குறைந்தபட்ச பலப் பிரயோகத்தில் கொலைகள் நடந்துள்ளன என்று சிறைச்சாலை உயர் அதிகாரி ஒருவர் கூறியிருக்கும்போது, அமைச்சர் விமல் வீரவன்ச, கைதிகள் குழப்பம் விளைவித்தமைக்கு கொரோனாத் தொற்று காரணம் அல்ல, மன நோய்க்குப் பாவிக்கும் மாத்திரையை உட்கொண்டு வெறிப்பிடித்தே வன்முறைகளில் ஈடுபட்டனர் என்று கூறியுள்ளார். அத்தகைய மாத்திரைகள் யாரால்? ஏன் கொண்டுவரப்பட்டன என்பது இதுவரை கண்டுபிடிக்கப்படவில்லை.

ஆனால் கொல்லப்பட்ட கைதிகளில் பலருக்கு கொரோனாத் தொற்று இருந்துள்ளது. காயமடைந்தவர்களில் பலருக்கும் தொற்று இருக்கின்றது. கைதிகள் கொரோனா உயிர் அச்சம் காரணமாகவே வன்முறைகளில் இறங்கினர் என்ற கூற்றை இலகுவில் மறுக்க முடியாது.

1983 இல் வெலிக்கடைச் சிறையில் அரசியல் கைதிகள் 53 பேர் படுகொலை செய்யப்பட்டமை மற்றும் 2012 இல் அங்கு இடம்பெற்ற கலவரத்தில் 25 கைதிகள் கொல்லப்பட்டமை போன்ற முறை மீறல்களுக்கு இன்றுவரை நீதி கிட்டாதா என்ற நிலையில், மற்றுமொரு சம்பவம் நடத்தி முடிக்கப்பட்டுள்ளது.

இந்த அசம்பாவிதங்களுக்கான மூல காரணங்களையும், அவற்றுக் காரணமானவர்களையும் இனங்கண்டு உரிய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்பதை வலியுறுத்துகின்றோம். அதன்மூலமே எதிர்காலத்தில் இவ்வாறான சிறைச்சாலைப் படுகொலைகள் நடப்பதைத் தடுக்க முடியும்- என்றுள்ளது. (எ)



## வடமராட்சியில்
# மீனவர்களது வாழ்வாதாரத்தை புரட்டிப்போட்டது புரேவி புயல்

வடமராட்சி, டிசெ.6

புரேவிப் புயல் காரணமாக வடமராட்சி மீனவர்களின் வாழ்வாதாரம் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளது என்று சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

வடமராட்சி கரையோரப்பகுதிகளில் வசித்துவரும் மீனவர்களது வாழ்வாதாரம் பெரும் அழிவுக்குள்ளாகியுள்ளது. ஆர்ப்பரித்த கடல் கொந்தளிப்பில் கடற்கரையில் கட்டப்பட்டிருந்த படகுகள் அடித்துச் செல்லப்பட்டும், படகுகளுக்குள் தண்ணீர் நிறைந்து தாண்டும் பலத்த சேதமேற்பட்டுள்ளன. அத்துடன் பல இலட்சம் பெறுமதியான மீன்பிடி வலைகளும் கடல் அலையில் அள்ளுண்டு போயுள்ளது. இரவிரவாக படகுகளை மேலிழுக்கும் நடவடிக்கையில் ஈடுபட்ட போதிலும் சில படகுகள் கடல் அலைகளால் இழுத்துச் செல்லப்பட்டு காணாமல் போயுள்ளன என பருத்தித்துறை சுப்பர்மடம் பகுதி மீனவர்கள் வேதனையுடன் தெரிவித்தனர்.

பருத்தித்துறை முனை பகுதி தொடக்கம் தொண்டைமானாறு வரையான கரையோரப்பகுதியில் சுமார் 25 க்கும் அதிகமான படகுகள் சேதமடைந்துள்ள நிலையில் அவற்றில் பெருமளவான படகுகள் மீளவும் பயன்படுத்த முடியாத வகையில் பலத்த சேதத்திற்குள்ளாகியுள்ளன.

புரேவி புயல் காரணமாக ஏற்பட்ட இந்தக் கடல் கொந்தளிப்பால் பருத்தித்துறை சுப்பர்மடம், வியாபாரிமூலை மயிலிட்டித்துறை, வல்வெட்டித்துறை ஆதிகோவிலடி மற்றும் தொண்டைமானாறு ஆகிய இடங்களைச் சேர்ந்த மீனவர்களது படகுகள், மீன்பிடி வலைகள் உள்ளிட்ட பல இலட்சம் பெறுமதியான உடமைகள் இவ்வாறு அழிவடைந்துள்ளன என்று சுட்டிக்காட்டப்பட்டுள்ளது (ப-20)

## தொழிற்பயிற்சிகளுக்கு விண்ணப்பம் கோரல்

இலங்கை தொழிற்பயிற்சி அதிகார சபையால் தொழிற்பயிற்சிகளை வழங்குவதற்கு புதிய மாணவர்களை இணைப்பதற்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. பயிற்சிகள் ஜனவரி 4ஆம் திகதி யாழ்ப்பாண மாவட்டத்தில் உள்ள ஆறு பயிற்சி மையங்களில் ஆரம்பிக்கப்படவுள்ளன.

தென்மராட்சி பிரதேசத்தைச் சேர்ந்தவர்கள் கைதடியில் உள்ள தொழிற்பயிற்சி நிலையத்தில். பின்வரும் இலவச பயிற்சி நெறிகளில் பங்குபற்றலாமென அறிவிக்கப்பட்டுள்ளது.

மோட்டார் வாகன திருத்துநர், கட்டட நிர்மாண உதவியாளர், முச்சக்கர வாகன திருத்துநர் இரு சக்கர வாகன திருத்துநர், பெண்கள்,சிறுவர்களுக்கான ஆடை வடிவமைப்பாளர், தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பவியலாளர்,தொழிற்சாலை மின்னினைப்பாளர் போன்ற பயிற்சிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. விண்ணப்பப் படிவத்தை பிரதேச செயலக தொழிற்பயிற்சி அதிகாரசபையின் அலுவலரிடம் பெற்று விண்ணப்பிக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-9)

## நாளை மின்தடை

யாழ்ப்பாணம்,டிசெ.6

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக வடக்கின் பல பகுதிகளில் நாளை திங்கட்கிழமை மின் தடைப்படும் என்று அறிவிக்கப்பட்டது.

இதன்படி காலை 8 மணியில் இருந்து மாலை 5 மணி வரை **வவுனியா மாவட்டத்தில்** ஜோசப் இராணுவ படை முகாம், விமானப்படை முகாம் றேடார், குளுமாட்டு சந்தி, இராஜேந்திரகுளம் கிராமம், கூடுவெந்தபுலவு கிராமம் ஆகிய இடங்களில் மின்சாரம் தடைப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)



# இன்றைய நாள்

**மேடம்:** அதிர்ஷ்டமான நாள். பிறரது எண்ணங்களுக்கு மதிப்பளிப்பீர்கள். சான்றோர்களின் நட்புக் கிடைக்கும். மகிழ்ச்சி அதிகமாகும். சுபநிகழ்ச்சியில் பங்கேற்பீர்கள். விமர்சங்களைத் தவிருங்கள்.

**இடபம்:** புதிய விடயங்களில் ஈடுபடும், கவனமும் தேவை.பணிகளில் கவனத்துடன் இருங்கள். முயற்சியால் பலன் உண்டு.எதிர்பார்த்துக் காத்திருந்த நல்ல செய்தி ஒன்று வரும்.

**மிதுனம்:** எதிர்பார்க்கும் மாற்றம் ஒன்று உங்களைத் தேடிவரும்.குடும்பத்தில் நிம்மதி பிறக்கும். உறவினர் தேடி வரக்கூடும்.நன்மை தரும் மாற்றங்கள் உருவாகும். பகைகள் தீரும்.

**கடகம்:** நண்பர்களுக்கு உதவி செய்வீர்கள். நன்மைகள் விளையும். தொழிலை விரிவுபடுத்துவதைக் கொஞ்சம் ஒத்தி வையுங்கள்.வியாபாரத்தில் இலாபம் உண்டாகும். மன நிம்மதி ஏற்படும்.

**சிம்மம்:** முன்னெச்சரிக்கையுடன் செயல்பட்டு வெல்வீர்கள். எதிர்ப்பு நீங்கும். உற்சாகமான நாள். நண்பர்களை சந்தித்து மகிழ்வீர்கள்.வியாபாரத்தில் விற்பனையும், லாபமும் சீராக இருக்கும்.

**கன்னி:** குடும்பத்தில் மகிழ்ச்சியான சூழ்நிலை காணப்படும்.சுறுசுறுப்பாகச் செயல்படுவீர்கள். மரியாதை கிடைக்கும். குடும்பத்துடன் தெய்வ வழிபாட்டில் ஈடுபடுவீர்கள்.நண்பர்களுக்காக உதவிகள் செய்வீர்கள்.

**துலாம்:** நெருக்கமானவர்களின் ஒத்துழைப்பு நன்றாக இருக்கும்.பிள்ளைகளால் சிறுசிறு சங்கடங்கள் ஏற்பட்டு இன்றே நீங்கும்.பெண்கள் குடும்பத்தினருடன் அனுசரித்துச் செல்வீர்கள்.

**விருச்சிகம்:** சுற்றியிருப்பவர்களுடன் விவாதம் செய்வதைத் தவிர்க்கவும். சக பணியாளர்களால் சில தற்காலிகப் பிரச்சினைகள் ஏற்படும். நல்லவர்களின் தொடர்பால் நலம் விளையும்.

**தனுசு:** திடீர் நட்பு உருவாகலாம். வேலைப்பளு அதிகரிக்கும். புதிய முயற்சிகளைத் தவிர்த்துவிடுங்கள். வம்பு வேண்டாம்.எதிலும் பொறுமையைக் கடைப்பிடிக்க வேண்டிய நாள்.

**மகரம்:** மனதில் தேவையற்ற கற்பனை, பயங்கள் ஏற்படும்.குடும்பத்தில் சிறு சங்கடம் உண்டு. பாதிப்பு இருக்காது. பணியாளர்களுக்கு உயரதிகாரி பயனுள்ள ஆலோசனை தருவார்.

**கும்பம்:** பணத்தை கவனமாக கையாளுவதால் பிரச்னைகள் இருக்காது. கவலைகள் முடிவுக்கு வரும். குழந்தைகளால் மகிழ்ச்சி ஏற்படும்.

**மீனம்:** முக்கிய பொருள்களை கவனமாகப் பார்த்துக்கொள்ளவும்.வெளியில் செல்லும்போது சாலையில் கவனம் தேவை.நேர்மறை எண்ணங்கள் அதிகரித்து தாழ்வு மனப்பான்மை நீங்கும்.



## மன்னாரில் 90 வீதமான நெற்செய்கை பாதிப்பு

### விவசாயிகள் கவலை

மன்னார், டிசெ.6

காற்றுடன் கூடிய மழை காரணமாக மன்னார் மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்டு வந்த 90 வீதமான பெரும்போக நெற்செய்கை பாதிக்கப்பட்டுள்ளது என்று விவசாயிகள் கவலை தெரிவித்துள்ளனர்.

மன்னார் மாவட்டத்தில் தற்போது வரை சுமார் 23 ஆயிரத்து 953.5 ஏக்கர் பெரும்போக நெற்செய்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. தொடர்ச்சியாக வெள்ளப் பாதிப்பு ஏற்படுமாயின் முற்றாக விவசாய செய்கை அழிவடையும் நிலை ஏற்படும் என்றும் அவர்கள் கவலை தெரிவித்தனர்.

மன்னார் பிரதேச செயலாளர் பிரிவில் 1,061 ஏக்கர் விவசாய செய்கையும், நானாட்டான் பிரதேச செயலாளர் பிரிவில் 4826.5 ஏக்கர் விவசாய செய்கையும்,முசலி பிரதேச செயலாளர் பிரிவில் 3274 ஏக்கர் விவசாய செய்கையும், மாந்தை மேற்கு பிரதேச செயலாளர் பிரிவில் 11925 ஏக்கர் விவசாய செய்கையும், மடு பிரதேச செயலாளர் பிரிவில் 2867 ஏக்கர் விவசாய செய்கையும் மேற்கொள்ளப்பட்டன.

இதேவேளை மடு பிரதேசச் செயலாளர் பிரிவில் சின்ன வலயன் கட்டு சிறிய நீர்பாசனக் குளம் உடைப் பெடுத்துள்ளதோடு,முருங்கன், நானாட்டான் இரணை இழுப்பைக்குளம், மறிச்சுக் கட்டி, பாலம்பிட்டி சிறிய நீர்பாசனக் குளங்கள் வான் பாய்ந்து வருவதாகவும் விவசாயிகள் தெரிவித்தனர். (ஜ-56)

## புயலால் பாதிக்கப்பட்டோருக்கு பால்மா

தென்மராட்சி பிரதேசத்தில் புரேவி புயல். மற்றும் பெருமழையால், பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு தென்மராட்சி அபிவிருத்தி ஒன்றியத்தினர் சாவகச்சேரி சுகாதாரப் பகுதியினருடன் இணைந்து பால்மா வகைகளை வழங்கி வருகின்றனர்.

இடைத்தங்கல் நிலையங்களில் தங்கியுள்ள கர்ப்பிணித் தாய்மார்,பாலூட்டும் தாய்மார், ஆறு மாதத்துக்கு உட்பட்ட குழந்தைகள் மற்றும் ஆறு மாதத்துக்கு மேற்பட்ட குழந்தைகள் போன்றோருக்கு இவ்வாறு பால்மா வகைகளை நிலையங்களுக்கு நேரடியாகச் சென்று வழங்கி வருகின்றனர் என்று தெரிவிக்கப்படுகிறது. (ப-9)

## தென்மராட்சியில் 358 பேர் பாதிப்பு

தென்மராட்சி பிரதேசத்தில் நேற்றுமுன்தினம் இரவு பெய்த பெருமழையால் மேலும் 90 குடும்பங்களைச் சேர்ந்த. 358 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். நேற்று மதியம் வரை 2 ஆயிரத்து 260 குடும்பங்களைச் சேர்ந்த 7 ஆயிரத்து 508 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

கொடிகாமம் மத்திப் பிரிவில் கொட்டில் வீடு நீரில் மூழ்கி முழுமையாகச் சேதமடைந்தது. வாகனம் திருத்தும் நிலையக் கொட்டகையும் பகுதியளவில் சேதமடைந்துள்ளது. இடைத்தங்கல் நிலையங்களில் 61 குடும்பங்களைச் சேர்ந்த 222 பேர் தங்க வைக்கப்பட்டு பிரதேச செயலகத்தால் பராமரிக்கப்பட்டு வருகின்றனர். (ப-9)






உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## குடத்து விளக்குகள் குன்றின்மேல்....!

சமூக வலைத்தள வெளியெங்கும் தற்போது இரு கிரிக்கெட் வீரர்களைப் பற்றிய பேச்சுத்தான் கொட்டிக்கிடக்கின்றது. ஒருவர் இந்தியாவின் தமிழகத்தைச் சேர்ந்த நடராஜன், இன்னொருவர் வடமாகாணத்தைச் சேர்ந்த வியாஸ்காந்த். இதுவரை குடத்துள் இட்ட விளக்காக மறைந்திருந்த இவர்களின் திறமை இப்போது குன்றிலிட்ட தீபமாக ஒளிரத் தொடங்கியுள்ளது.

இம்முறை நடந்த ஐ.பி.எல் தொடரில் ஹைதராபாத் அணிக்காக சிறந்த பெறுபேற்றை வெளிப்படுத்தியதை அடுத்து நடராஜன் இந்திய அணிக்குள் உள்வாங்கப்பட்டார். ஆஸ்திரேலியாவில் நடைபெற்றுவரும் இந்திய - ஆஸ்திரேலிய அணிகளுக்கு இடையிலான தொடரில் சிறப்பாக விளையாடி வருகின்றார் அவர். தமிழ் வீரர் ஒருவர் இந்தியாவில் சாதிக்க வேண்டுமாயின் பார்ப்பனியராக இருக்க வேண்டும் என்ற எழுதப்படாத விதியைத் தகர்த்து நடராஜன் மேலெழுந்து வந்தமைதான் அங்கு நடராஜனை பலரும் தூக்கிவைத்துக் கொண்டாடக் காரணம்.

இதே உணர்வுதான் வியாஸ்காந்த் விடயத்திலும் இடம்பெறுகின்றது. வடக்கு கிழக்கைச் சேர்ந்த தமிழன் ஒருவன்இலங்கை தேசிய அணிக்குள்இடம்பெறுவதென்பது எட்டாக்கனியாகவே இருந்தது . அதை முயன்று தோற்றுப்போன வீரர்கள் பலர். ஒரு சில வீரர்கள் அணிக்குள் உள்வாங்கப்பட்டாலும் அவர்கள் தங்கள் தமிழ் அடையாளங்களை மறைத்தே அணியில் இருந்தார்கள். உதாரணமாக ரசல் ஆர்னல்ட், அஞ்சலோ மத்தியூஸ் ஆகியோரும் வடக்கு, கிழக்கு பூர்வீகத்தை இழந்தே அணிக்குள் நுழைந்தார்கள். ஆனால் லங்கா பிறீமியர் லீக்கில் நேற்றுமுன்தினம் இரவு நடைபெற்ற கொழும்புக்கு எதிரான ஆட்டத்தில் யாழ்ப்பாண அணியின் சார்பாக வியாஸ்காந்த் களமிறக்கப்பட்டார். எதிர்பார்த்ததை விடவும் அவர் சிறந்த ஆட்டத்தை வெளிப்படுத்தினார். 4 பந்துப்பரிமாற்றங்களை வீசி 29 ஓட்டங்களை விட்டுக்கொடுத்து மத்தியூஸின் இலக்கைச் சாய்த்தார் வியாஸ்காந்த். இதையடுத்து வியஸ்காந்தின் வெற்றி ஒட்டுமொத்த தமிழ்த் தேசத்தின் வெற்றியாக மாறியுள்ளது. இதுகாலமும் இருந்த ஒட்டுமொத்த எதிர்பார்ப்புத்தான் தற்போது சமூக வலைத்தள வெளியெங்கும் பீறிட்டு வெளிப்படுகின்றது. நடராஜன், வியாஸ்காந்த் இருவரும் வேறுவேறு நாடுகள், வேறு வேறு அணிகள் ஆனால் உணர்வுகள் ஒன்று. அவர்களின் பின்னாலான உழைப்பும், எதிர்பார்ப்பும் ஒன்று.

வியாஸ்காந்த் மட்டுமல்ல அவரைப்போன்று பலநூறு வீரர்கள் வடக்கில் உள்ளனர். சங்கா, மகேல குறிப்பிட்டதைப்போன்று புதிய கிரிக்கெட் நகராக யாழ்ப்பாணத்தை உருவாக்க எடுத்த முயற்சி பாராட்டப்பட வேண்டியதுதான். ஆனால் அதற்கு போதிய வாய்ப்புக்கள் இங்குள்ள வீரர்களுக்கு வழங்கப்படுகின்றனவா? வீரர்களுக்கு உரிய வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளனவா? என்றால் அதற்குரிய பதில் இல்லை என்பதாகத்தான் இருக்கும். வசதிகள் இல்லாதவிடத்து, வாய்ப்புக்கள் வழங்கப்படாதவிடத்து திறமைகள் எவ்வாறு மதிப்பிடப்படுகின்றது என்பது புரியாத புதிர். அவ்வாறு உரிய வசதிகள், சந்தர்ப்பங்கள் அமையுமாயின் இன்னும் பல வியாஸ்காந்த்களை நம் மண் உருவாக்கக் காத்திருக்கிறது.

இலங்கை கிரிக்கெட்டைக் கட்டியாண்ட சங்கா, மகேல போன்ற ஜாம்பவான்கள் பெயர் குறிப்பிட்டு சில தமிழ் வீரர்களை அடையாளப்படுத்திய போதிலும் இதுவரைகாலமும் அவர்கள் மீது சிறப்புக் கவனம் செலுத்தப்படாதமை கவலைக்குரியதே. சங்கா, மகேலவின் ஓய்வின் பின்னர் இதுவரை காலமும் பலமற்றுக் கிடக்கும் இலங்கை கிரிக்கெட் அணியை மீண்டும் பலமாக்குவதற்கு மேற்கொள்ள வேண்டிய வழிமுறையும் அதுவே.

வடக்கிலும் சிறப்பான, தரமான வீரர்கள் உள்ளனர் என்பதை வியாஸ்காந்த் நிரூபித்துள்ளார். அவருக்கு தொடர்ந்து வாய்ப்புக்கள் வழங்கப்படுமா? இன்னும் இங்குள்ள ஏனைய குடத்து விளக்குகள் குன்றின் மேல் ஏற்றப்படுமா? அல்லது விமர்சனக் களைவுக்காகத்தான் வியாஸ்காந்த்துக்கான வாய்ப்பா? என்பனதான் தற்போதுள்ள கேள்விகள்.

# தேவையற்ற விடயங்களில் தலையிடுகிறது இராணுவம்

## ரவிகரன் குற்றச்சாட்டு

**முல்லைத்தீவு, டிசெ.6**

**இலங்கையினுடைய பாதுகாப்புத் தரப்பானது, நாட்டில் உள்ள சட்ட விரோத செயற்பாடுகளைக் கட்டுப்படுத்துவதை விடுத்து, தமிழ் மக்களுடைய அஞ்சலி நிகழ்வுகள் மற்றும், சமய நிகழ்வுகளைத் தடை செய்வதில் தேவையற்ற தலையீடுகளைச் செய்துவருகிறது என்று வடக்கு மாகாணசபை முன்னாள் உறுப்பினர் துரைராசா ரவிகரன் தெரிவித்தார்.**

முல்லைத்தீவு ஒதியமலைப் படுகொலை நினைவுநாளில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது;
இலங்கை அரசாங்கத்தின் ஏவல் படைகளுக்கு போதிய அறிவு இல்லை என நினைக்கின்றேன். எமது மக்கள் மாவீரர்களுக்காக விளக்கேற்றும்போது பயங்கரவாதம் என்று கூறிக்கொண்டு அதற்குத் தடைவிதிக்கின்றனர். இதேவேளை கார்த்திகை தீபம் ஏற்றும் நிகழ்வையும் தடை செய்கின்றார்கள். கார்த்திகை தீபம் என்பது சைவத் தமிழ் மக்களின் ஓர் பாரம்பரிய சமய நிகழ்வாகும். இந் நிகழ்வை எதற்காக அரச பாதுகாப்புத் தரப்பு தடை செய்யவேண்டும். அரசினுடைய பாதுகாப்புத் தரப்பானது தனது கடமைகள் எதுவோ, அதனை விடுத்து தேவையற்ற செயற்பாடுகளில் ஈடுபட்டுவருகின்றது என்றே கூறவேண்டும் - என்றார். (ஐ-246)

## பொலிஸ் ஆணைக்குழு உறுப்பினராக பரமேஸ்வரன்

கொடிகாமம், டிசெ. 6
தேசிய பொலிஸ் சேவை ஆணைக்குழு உறுப்பினராக கொழும்பு பம்பலப்பிட்டி தேசிய பாடசாலையின் ஓய்வுநிலை அதிபர் ரி.பி.பரமேஸ்வரன் நியமிக்கப்பட்டுள்ளார். உடனடியாக நடைமுறைக்கு வரும் வகையில் ஜனாதிபதி அவருக்கு நியமனம் வழங்கியுள்ளார் என்று தெரிவிக்கப்பட்டது.
இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசு யாப்பின் 41ஏ மற்றும் 155ஏ (1) சட்டப் பிரிவுகளுக்கு அமைவாக இந்த நியமனம் வழங்கப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது. (த-159)

## அபிவிருத்தியாலேயே இயற்கை இடர்கள்

### சாவகச்சேரி தவிசாளர் தெரிவிப்பு

கொடிகாமம், டிசெ.6
குடாநாடு முழுவதும் சரியான வடிகாலமைப்பு இல்லாத நிலையில், அபிவிருத்தி அபிவிருத்தி என்று திட்டங்களைக் கொண்டு செல்வதால் இயற்கை இடர்கள் ஏற்பட்டுள்ளன என்று சாவகச்சேரி பிரதேச சபைத் தவிசாளர் க.வாமதேவன் தெரிவித்தார்.
இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது;
ஒரு நாள் இரவு பெய்த கடும் மழை காரணமாக பல இடங்கள் துண்டிக்கப்பட்டன. கைதடி, நுணாவிலில் பல மக்கள் மற்றும் பிரதேச சபை உறுப்பினர்கள் என்னுடன் தொடர்பு கொண்டனர். சரியான முறையில் திட்டமிடப்படாமல் அமைக்கப்பட்ட வீதிகள் அனுமதி பெறாது கட்டப்பட்ட கட்டடங்கள் தொடர்பாக பல பிரச்சினைகள் ஏற்பட்டுள்ளன. மூன்று மதில்கள் உடைக்கப்பட்டு சீர் செய்யப்பட்டன. இது தற்காலிகமான தீர்வே தவிர நிரந்தரமானது அல்ல. அந்த முடிவுகள் எடுக்கப்பட்ட பின்னர் பல முறைப்பாடுகள் பொலிஸ் நிலையம் வரை சென்றுள்ளன - என்றார். (ப-159)

# பளையில் எல்.ஆர்.சி காணி சட்டவிரோதமாக அபகரிப்பு

## பொது மக்கள் கடும் எதிர்ப்பு

பளை, டிசெ. 6
கிளிநொச்சி - பச்சிலைப்பள்ளிப் பிரதேசத்தில் உள்ள எல்.ஆர்.சி காணிகளை சட்டவிரோதமாக சிலர் பிடித்து துப்பரவு செய்து வருகின்றமைக்கு எதிர்ப்புத் தெரிவித்து பொதுமக்கள் நேற்று எதிர்ப்பை வெளிப்படுத்தினர்.



பளை பேராலை எனும் இடத்தில் உள்ள எல்.ஆர்.சி காணியை துப்பரவு செய்வதற்கு எதிராக அந்தப் பகுதியைச் சேர்ந்த 50க்கும் மேற்பட்ட பொது மக்கள் நேற்று ஒன்று சேர்ந்து தங்களின் கடும் எதிர்ப்பை வெளிப்படுத்தினர்.
"பளைப் பிரதேசத்தில் பல பொதுமக்கள் இன்றும் குடியிருக்க காணியற்று உள்ளனர். இந்த நிலையில் இங்கு எமது கண்முன் உள்ள எல்.ஆர்.சி. காணிகளை இந்த மாவட்டத்துக்கு வெளியிலிருந்து வந்து சிலர் தங்களின் உயர் மட்ட செல்வாக்கைப் பயன்படுத்தி 50 ஏக்கர் மற்றும் 100 ஏக்கர் எனப் பிடித்து துப்பரவு செய்கின்றனர்." என்று தெரிவித்த மக்கள் இச் செயற்பாட்டை உடனடியாக நிறுத்தி இந்த பிரதேச மக்களுக்கு நியாயத்தைப் பெற்றுக் கொடுக்க வேண்டும் என்றும் அவர்கள் கோரிக்கை விடுத்தனர்.
எல். ஆர்.சி காணிகள் எமது கட்டுப்பாட்டுக்குள் இல்லாத காரணத்தால் எம்மால் உடனடியாக எவ்வித தீர்மானத்துக்கும் செல்ல முடியாதுள்ளது. இருப்பினும் எல்.ஆர்.சி ஆணைக்குழுவின் தலைவரிடம் இது தொடர்பில் தெரியப்படுத்தியிருக்கின்றேன் - என்றார். (ப-214)

## மரநடுகை

'விதையனைத்தும் விருட்சமே' அமைப்பு 'பசுமையான யாழ்' எனும் தொனிப்பொருளில் மேற்கொள்ளப்படும்செயற்றிட்டத்தின்மூன்றாம்கட்டமாக கீரிமலை ஆலய முன்றலில் இருந்து ஆலடிச்சந்தி வரையான பிரதான வீதியின் இரு மருங்கிலும் இன்று காலை 8.30 மணிக்கு 250க்கும் மேற்பட்ட மரக்கன்றுகள் நடுகைசெய்யப்படவுள்ளன. அமரர் கந்தசாமி கணேசலிங்கத்தின் ஞாபகார்த்தமாக அன்னாரின் குடும்பத்தினரின் அனுசரணையுடன் அவை நடப்படவுள்ளன என்று தெரிவிக்கப்பட்டது. (த-ரி4)



புரேவி புயலால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு மதிய மற்றும் இரவு உணவுகள் வழங்கப்பட்டு வருகின்றன. விதை அனைத்தும் விருட்சமே அமைப்பினர் இந்த உணவுப் பொருள்களை வழங்கி வருகின்றனர். குடாநாட்டில் இதுவரை 250க்கும் மேற்பட்ட குடும்பங்களுக்கு இவ்வாறு உணவுப் பொருள்கள் வழங்கப்பட்டுள்ளன. (ப-222)

## விடுதி நடத்திய முதியவருக்கு மீண்டும் விளக்கமறியல்

சாவகச்சேரி,டிசெ.6

எழுதுமட்டுவாழ் கரம்பகம் பகுதியில் சமூக சீர்கேடுகளுடன் விடுதி நடத்தினார் என குற்றஞ்சாட்டப்படும் முதியவரை மீண்டும் விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிடப்பட்டுள்ளது.

கடந்த மாதம் கொடிகாமம் பொலிஸாருக்கு கிடைத்த தகவலையடுத்து அப்பகுதியில் உள்ள வீடொன்றை சுற்றிவளைத்து தேடுதல் நடத்தியபோது அங்கிருந்த இரு பெண்களையும் விடுதியை நடத்திய முதியவரையும் கைதுசெய்து நீதிமன்றில் முற்படுத்தினர்.

மூவரையும் விளக்கமறியலில் வைக்க உத்தரவிட்ட நீதிமன்றம், அவர்களை சட்ட மருத்துவ அதிகாரி மூலம் பரிசோதனைகளை மேற்கொண்டு அறிக்கை தாக்கல் செய்யுமாறு பொலிஸாருக்கு உத்தரவிட்டது.

அடுத்த தவணையின்போது பெண்கள் இருவரையும் பிணையில் செல்ல அனுமதித்து முதியவரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிடப்பட்டது.

இந்த வழக்கு நேற்றுமுன்தினம் சாவகச்சேரி நீதிமன்றில் விசாரணைக்கு எடுக்கப்பட்டபோது முதியவரைத் தொடர்ந்தும் விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிடப்பட்டது. (ஜ-9)


# VACANCIES at a Leading Educational Institution in Jaffna



**Accounts Executive**

Job Requirments:
- Completed or following CMA/CIMA/ACCA/CA/AAT
- Experience in any administrative environment.
- Age 20 to 30 years.
- Knowledge in accounting packages
- Fluent in MS-office softwares

**Marketing Executive - Front Office**

Job Requirments:
- Age 18 to 30 years.
- G.C.E. A/L Qualification is preferred
- Prior experience in similar positions will be added an advantage.
- Should be able to work on weekends.

Preference will be given to those who reside in Jaffna District.
Send your detailed CV to
info.globaleducationsystems@gmail.com
with the position applied for in the subject line of your e-mail.


## கண்டியில் நிலநடுக்கம்

கண்டி, டிசெ. 6

கண்டி - திகன பகுதியில் நேற்று சனிக்கிழமை அதிகாலை சிறிய அளவில் நில அதிர்வு பதிவாகியுள்ளது என்று புவிச்சரிதவியல் மற்றும் சுரங்கப் பணியகம் தெரிவித்துள்ளது. ரிச்டர் அளவில் இரண்டுக்கும் குறைவான அளவைக் கொண்ட நில அதிர்வு பதிவாகியுள்ளது என்று பணியகம் தெரிவித்தது.

நேற்றுக் காலை 7.30 அளவில் இந்த நிலநடுக்கம் ஏற்பட்டுள்ளது.

இதனால் கண்டி மாவட்டத்தின் திகன, அம்பாக்கோட்டை மற்றும் கெங்கல்ல உள்ளிட்ட பகுதிகளில் இந்த நிலநடுக்கம் உணரப்பட்டுள்ளது. இந்த வருடத்தில் 4ஆவது தடவையாகப் பதிவாகிய நிலநடுக்கம் இதுவாகும்.

ஏற்கனவே ஓகஸ்ட் 29ஆம் திகதி இரவு ஏற்பட்ட நிலநடுக்கத்தைத் தொடர்ந்து நேற்றுவரை 4 தடவைகள் நிலநடுக்கங்கள் பதிவாகியிருக்கின்றன என்றும் பணியகம் தெரிவித்தது. (த-இ)





நிபந்தனைகளுக்கு உட்படும்

VISION CARE HEARING SOLUTIONS
10 years

**விஷன் கெயா ஒப்டிகல்ஸ் சேவிசஸ் (வரை) தனியார நிறுவனம்**
கிளைகள் : கொழும்பு, கொழும்பு ரேஸ்கோஸ், மகரகம, களுத்துறை, கம்பஹா, பாணந்துறை, காலி, மாலபே, குருநாகல், நீர்கொழும்பு, குளியாப்பிட்டி, இரத்தினபுரி, பண்டாரவளை, கண்டி, மாத்தளை, தம்புள்ளை, அநுராதபுரம், திருகோணமலை, மொனராகலை, மன்னார், வவுனியா, மட்டக்களப்பு, யாழ்ப்பாணம், பொலன்னறுவை, கேகாலை, பதுளை

உங்கள் அனைத்து செவிப்புலன் தொடர்பான சேவைகளும் இப்போது சுகாதார பாதுகாப்பு நடைமுறைகளுடன் கூடியது.










# கொட்டித் தீர்க்கும் மழையால் தத்தளிக்கிறது யாழ்ப்பாணம்!


யாழ்ப்பாணம், நவ.6

யாழ்ப்பாணத்தில் பல பகுதிகளில் நேற்றுமுன்தினம் மாலை முதல் இடைவிடாத கொட்டித் தீர்க்கும் கன மழையால் தாழ்நிலப் பகுதி மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். பல பகுதிகளில் குடியிருப்புகள் தண்ணீர் சூழ்ந்துள்ளதால் பொதுமக்கள் வெளியேற முடியாமல் சிரமத்திற்குள்ளாகி உள்ளனர்.

யாழ்ப்பாணம் மாநகரில் பல வீதிகளில் வெள்ளம் தேங்கிக் காணப்படுகிறது. பல வீதிகளில் வெள்ளம் பாய்கிறது.

புரேவி புயல் கடந்த புதன்கிழமை இரவு வடக்கு மாகாணத்தை கடந்து சென்ற நிலையில் கடந்த 4 நாள்களாக மழை பொழிகிறது. நேற்று முன்தினம் காலை யாழ்ப்பாணத்தில் தெளிவான வானிலை காணப்பட்ட போதும் பிற்பகல் மழை பொழிய ஆரம்பித்தது. நேற்று முன்தினம் இரவு இடியுடன் கூடிய மழை ஆரம்பித்தது. நேற்று அதிகாலை கன மழை பொழிந்தது. (ஏ)
















## வெல்டர் தேவை

மல்லாகத்தில் இயங்கும் எமது ஸ்தாபனத்திற்கு ஒட்டு வேலை செய்வதற்கு வெல்டரும், உதவியாளரும் தேவை.
மாத சம்பளம் - ஆரம்ப வேதனமாக வெல்டருக்கு -ரூபா 40000/= இருந்து வழங்கப்படும். உதவியாளருக்கு - ரூபா 25000/= இருந்து வழங்கப்படும்.

**தொடர்பு: 074 049 0003**

## வாகனம் விற்பனைக்கு

Toyota KDH, 201,2008 Model 2011, Registered Manual gear Rotatable Seat DVD, Re /Camera 2nd Owner White, Co - Lour, 4 Door,Dual A/c, 57/L Negotiable.

**077 159 9215**

## மணிவிழா நாயகியை உளமார வாழ்த்துகின்றோம்




இன்றைய தினம் **(06.12.2020)**
**மணிவிழா** காணும் நாயகி

**திருமதி கேதாரேஸ்வரி குலராசசிங்கம்**

**பரிசாரகர் (Supra)**

ஆதார வைத்தியசாலை சாவகச்சேரி சுகாதாரத்துறையில் வருடகாலம் அளப்பரிய சேவையை ஆற்றி ஓய்வுபெறும் அவர்களை உளமார பாராட்டி வாழ்த்துவதுடன் ஓய்வுக்காலம் சிறப்பாக நீடூழி வாழ்க என வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்: **கணவர் - குலராசசிங்கம்**
**மகள், சகோதரர்கள், மைத்துனர்மார், மைத்துனிமார், பெறாமக்கள், மருமக்கள்.**

Best Wishes

## அமெரிக்க தூதரக காரியாலயம், கொழும்பு.

### தமிழ் மொழிபெயர்ப்பாளர்/உரைபெயர்ப்பாளர் [ஆண் / பெண்]

இந்தப்பதவிக்கு விண்ணப்பிக்குமாறு நாம் ஆண்களையும் பெண்களையும் ஊக்குவிக்கின்றோம். இன, நிற, மத, பால் நிலை அல்லது தேசியம், அரசியல் தொடர்புகள், பால்நிலை மாற்றங்கள், திருமண உறவு என்பனவற்றின் அடிப்படையில் பாரபட்சம் காட்டாது அனைவருக்கும் சமனான சந்தர்ப்பத்தை வழங்கும் வகையிலான பன்மைத்துவ தொழிற்படை ஒன்றை அமெரிக்க தூதரகம் எதிர்பார்க்கின்றது.

மொழிபெயர்ப்பாளர்/உரைபெயர்ப்பாளர் தொழில்நுட்ப, தொழில் நுட்பம் சாரா உத்தியோகபூர்வ ஆவணங்கள், உத்தியோகபூர்வ உரைகள், செய்திவெளியீடுகள் ஆகியவற்றின் தமிழ் மற்றும் ஆங்கில மொழி மூலமான மொழிபெயர்ப்பினை தொழில் முறை தரத்துடன் வழங்குபவராக இருத்தல் வேண்டும். கூட்டங்கள், நிகழ்வுகள் மற்றும் முக்கிய பிரமுகர்கள் வருகை புரியும் சந்தர்ப்பங்களில் சமகால உரைபெயர்ப்பை வழங்க வேண்டும்.

வேலைக்குரிய கால அட்டவணை: முழு நேரம் வாரத்தில் 40 மணித்தியாலங்கள்.
மாதாந்த கொடுப்பனவு: 127,373/-

**தேவையான தகைமைகள்:**

1. **கல்வி:** சமூக விஞ்ஞானத்தில் பட்டப்படிப்பை பூர்த்தி செய்திருத்தல். அல்லது மொழியியல் / மொழிபெயர்ப்பு கல்வி. தொழில் சார் மொழிபெயர்ப்பாளரின் சான்று அவசியம்.
2. **முன் அனுபவம்:** சமகால உரைபெயர்ப்பு மற்றும் எழுத்து மூல மொழிபெயர்ப்பு இரண்டிலும் குறைந்த பட்சம் இரண்டு வருட அனுவபம்.
3. **மொழி ஆற்றல்:** தரம் V (தொழில்முறை) வாசித்தல், எழுதுதல் மற்றும் அவசியமேற்படின் ஆங்கிலத்தில் உரையாடுதல். (பரீட்சிக்கப்படும்) தரம் V (தொழில்முறை) வாசித்தல், எழுதுதல் மற்றும் அவசியமேற்படின் தமிழில் உரையாடுதல்.
4. **தொழில் அறிவு :** சகல மொழி சார்ந்த வாதங்கள் தொடர்பில் நிபுணத்துவம் இருத்தல் வேண்டும். ஆங்கிலத்திலும் தமிழிலும் சட்ட மற்றும் ராஜதந்திர ரீதியான ஆளுமை இருப்பது அவசியம். கடித வடிவமைப்பு தெரிந்திருப்பது கட்டாயம். இலங்கையின் வெளிநாட்டு விவகாரம், அரசியல், பொருளாதாரம், கலாசாரம், இராணுவ மற்றும் வணிக விவகாரங்கள் தொடர்பான சொற்பிரயோகம் துல்லியமான மொழிபெயர்ப்புக்கு அவசியம்.
5. **திறன் மற்றும் இயலுமை:** பொருளடக்கமும் அர்த்தமும் வெளிப்படும் வகையில் மொழிபெயர்ப்பு / உரைபெயர்ப்பு செய்யும் திறன்.சமகால உரைபெயர்ப்பு திறன் அதிகமாக வரவேற்கப்படுகிறது.மொழி மற்றும் உரை பெயர்ப்பில் அடையாள வெளிப்பாடு. சொற்றொடர், வார்த்தைப் பிரயோகம் என்பவை அச்சொட்டாகப் பிரதிபலிக்க வேண்டும். அடிப்படை கணினி பயன்பாட்டுத்திறனுடன் தமிழில் மிகச்சரியாகவும் விரைவாகவும் தட்டச்சு செய்யும் திறனும் எதிர்பார்க்கப்படுகிறது.

**தேவைப்படும் ஆவணங்கள்:**

இந்த பதவிக்கு விண்ணப்பதாரி தனது விண்ணப்பத்தை இணையத்தளத்தின் ஊடாக பின்வரும் ஆவணங்களை மின்னனு பிரதிகளுடன் மின்னனு ஆட்சேர்ப்பு விண்ணப்ப அமைப்பு மூலமாக பூர்த்தி செய்து விண்ணப்பிக்கலாம். அவ்விதம் சமர்ப்பிக்காத விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

- குறிப்பிட்ட கல்விச்சான்றிதழ் (பட்டதாரி சான்றிதழ் மற்றும் வகுப்புச்சான்றிதழ்)
- தொழில் சான்றிதழ்
- குறிப்பிட்டசேவை.'.செயற்பாட்டு அனுபவச்சான்றிதழ்
- பிரஜாவுரிமைச்சான்றிதழ்
- (தேசிய அடையாள அட்டை.'.கடவுச்சீட்டு.'.அல்லது தொழில் சான்றிதழ்.

**அல்லது**

1. **கல்வி:** இரண்டாம் நிலைக்கல்வி (க.பொ.த.உயர்தரம்)முழுமையாகப்பூர்த்தி செய்திருப்பதுடன் பல்கலைக்கழகத்திலோ அல்லது உயர்கல்வி நிறுவனத்திலோ குறைந்தது இரண்டு வருடம் கல்வி கற்றிருத்தல் வேண்டும்.
2. **முன் அனுபவம்:** சமகால உரைபெயர்ப்பு மற்றும் எழுத்து மூல மொழிபெயர்ப்பு இரண்டிலும் குறைந்த பட்சம் நான்கு வருட அனுவபம்.
3. **மொழி ஆற்றல்:** தரம் V (தொழில்முறை) வாசித்தல், எழுதுதல் மற்றும் அவசியமேற்படின் ஆங்கிலத்தில் உரையாடுதல். (பரீட்சிக்கப்படும்) தரம் V (தொழில்முறை) வாசித்தல், எழுதுதல் மற்றும் அவசியமேற்படின் தமிழில் உரையாடுதல்.
4. **தொழில் அறிவு :** சகல மொழி சார்ந்த வாதங்கள் தொடர்பில் நிபுணத்துவம் இருத்தல் வேண்டும். ஆங்கிலத்திலும் தமிழிலும் சட்ட மற்றும் ராஜதந்திர ரீதியான ஆளுமை இருப்பது அவசியம். கடித வடிவமைப்பு தெரிந்திருப்பது கட்டாயம். இலங்கையின் வெளிநாட்டு விவகாரம், அரசியல், பொருளாதாரம், கலாசாரம், இராணுவ மற்றும் வணிக விவகாரங்கள் தொடர்பான சொற்பிரயோகம் துல்லியமான மொழிபெயர்ப்புக்கு அவசியம்.
5. **திறன் மற்றும் இயலுமை:** பொருளடக்கமும் அர்த்தமும் வெளிப்படும் வகையில் மொழிபெயர்ப்பு / உரைபெயர்ப்பு செய்யும் திறன். சமகால உரைபெயர்ப்பு திறன் அதிகமாக வரவேற்கப்படுகிறது. மொழி மற்றும் உரை பெயர்ப்பில் அடையாள வெளிப்பாடு, சொற்றொடர், வார்த்தைப் பிரயோகம் என்பவை அச்சொட்டாகப் பிரதிபலிக்க வேண்டும். அடிப்படை கணினி பயன்பாட்டுத்திறனுடன் தமிழில் மிகச்சரியாகவும் விரைவாகவும் தட்டச்சு செய்யும் திறனும் எதிர்பார்க்கப்படுகிறது.

**தேவைப்படும் ஆவணங்கள்:**

இந்த பதவிக்கு விண்ணப்பதாரி தனது விண்ணப்பத்தை இணையத்தளத்தின் ஊடாக பின்வரும் ஆவணங்களை மின்னனு பிரதிகளுடன் மின்னனு ஆட்சேர்ப்பு விண்ணப்ப அமைப்பு மூலமாக பூர்த்தி செய்து விண்ணப்பிக்கலாம். அவ்விதம் சமர்ப்பிக்காத விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

- குறிப்பிட்ட கல்விச்சான்றிதழ் (க.பொ.த.உயர்தர பெறுபேற்றுச்சான்றிதழுடன் பல்கலைக்கழகத்தில் குறைந்தது இரண்டுவருடகாலம் கல்விகற்றதற்கான சான்றிதழ் அல்லது வகுப்புச்சான்றிதழ் பிரதி)
- குறிப்பிட்ட சேவை.'.செயற்பாட்டு அனுபவச்சான்றிதழ்
- பிரஜாவுரிமைச்சான்றிதழ் (தேசிய அடையாள அட்டை.'.கடவுச்சீட்டு அல்லது தொழிற்சான்றிதழ்)

**விண்ணப்பிக்கும் முறை:**

**மேலதிக விபரங்களுக்கு https://lk.usembassy.gov/embassy/jobs/ என்ற எமது இணையத்தளத்தை பார்வையிடவும், உங்கள் விண்ணப்பங்களை இணையத்தளத்தின் ஊடாக மின்னனு ஆட்சேர்ப்பு விண்ணப்ப அமைப்பு [ERA] மூலம் பூர்த்தி செய்து விண்ணப்பிக்க முடியும். நீங்கள் விண்ணப்பிப்பதற்கு முன்னர் எமது இணையத் தளத்தில் தரப்பட்டுள்ள அறிவுறுத்தல்களை நன்கு வாசிக்கவும்.**

**நீங்கள் அனுப்பும் கடிதங்கள் அல்லது மின்னஞ்சல் மூலமான விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.**

**உங்கள் விண்ணப்பங்கள் 2020 டிசெம்பர் 18 ஆம்திகதி அல்லது அதற்கு முன்னர் எமக்கு கிடைக்கப்பெற வேண்டும். தெரிவு செய்யப்படுபவர்கள் மாத்திரமே நேர்முகப்பரீட்சைக்கு அழைக்கப்படுவார்கள்.**

## காணி தேவை

வவுனியா நகரிலிருந்து 10 kmற்கு உட்பட்ட பகுதியில் தனியார் நிறுவனம் ஒன்றுக்கு குறைந்தது 8 பரப்பு உறுதிக்காணி தேவைப்படுகிறது. அத்துடன் கனரக வாகனம் செல்வதற்கான வழிப்பாதை அவசியமாகும். விற்க விரும்புவோர் பின்வரும் நிறுவனத்தின் தொலைபேசி எண்களுடன் தொடர்பு கொள்ளவும்.

**Mr. T. Suresh - 0770036049**
**Miss. S. Kala - 0777126881**

## வீடு வாடகைக்கு தேவை

இயக்கச்சியில் இயங்கும் தனியார் நிறுவன மொன்றின் பாவனைக்கு சாவகச்சேரி, கொடிகாமம், பளை, பரந்தன், கிளிநொச்சிப் பகுதிகளில் உடனடியாக வீடு வாடகைக்கு தேவை. முற்பணம் வழங்கப்படும்.

**076 985 1044**

## மணமகள் தேவை

யாழ். இந்து கௌரவ குடும்பம். 36 வயது. அவிட்டம் 4ம் பாதம். கிரக பாவம் 37 3/4. ஆசிரியராக பணிபுரியும் மணமகனுக்கு பெற்றோர் பொருத்தமான மணமகளை எதிர் பார்க்கின்றனர்.

தொடர்பு:
**076 196 6047**

## வேலைவாய்ப்பு

**அரச மற்றும் தனியார் ஒப்பந்த வேலைத்திட்டங்களை நடைமுறைப்படுத்தும் எமது நிறுவனத்துக்கு தொழில்நுட்ப உத்தியோகத்தர் தேவை**

- இடம் : கிளிநொச்சி / அறிவியல்நகர்
- தகைமை : NCT (Civil or Qs) அல்லது ஏற்றுக்கொள்ளக்கூடிய தொழில்நுட்ப கல்வித்தகைமை
- அனுபவம் : 3 வருடங்கள் (நிர்மாணத்துறை)
- சம்பளம் : வினைத்திறனிற்கு ஏற்றவாறு பேசித்தீர்மானிக்கப்படும்.
- வேலையிலிருந்து விலகுவதாயின் ஒரு மாத கால முன் அறிவித்தல் வழங்க வேண்டும் or 1 மாத கால சம்பளத்தை நிறுவனத்துக்கு செலுத்தவேண்டும்.
- தொடர்புகளுக்கு - தங்களது CVஇனை அனுப்பவேண்டியது

**enterprisejathur@gmail.com**
**Viber No.: 076 824 5457**

## கணக்காளர் தேவை

இங்கிலாந்தை (U.K) தலைமை காரியாலயமாக கொண்டு இயங்கிவரும் Accounting Firm இன் யாழ்ப்பாணக் கிளைக்கு கணக்காளர்கள் (4) தேவை.



**தகைமை :**

1) குறைந்தபட்சம் 3 வருட UK Based Accounting Firm இல் வேலை பார்த்த முன்னனுபவம்
2) B.Com/B.mgt/CIMA/ACCA/CA/HND/AAT-Part/ Fully Qualified

**Roles**

- ★ Prepare and finalise company accounts
- ★ Preparation of company and Personal tax returns
- ★ Finalisation of VAT returns
- ★ PAYE / RTI Submission
- ★ Other day to day accounting activities

Salary depends on experience and qualification.
**(Minimum salary Rs.50,000/ month)**

ஆர்வமுள்ளோர் தங்கள் **'CV'** இனை
**inforpaper@protonmail.com**
எனும் மின்னஞ்சலுக்கு 15.12.2020 இற்கு முன்னர் அனுப்பவும்.

**காரியாலய இடம் : Jaffna Town**

## வீடு வாடகைக்குண்டு

கொக்குவில் கறுவப்புலம் வீதியில் 5 அறைகள், குளியலறை வசதிகளுடன் கூடிய வீடு வாடகைக்குண்டு. (சகல வசதிகளுடனும்)

தொடர்பு:0112730374, 0773652452

## சிறுநீரகம் தேவை

36 வயதுடைய நபரொருவருக்கு
$O^+$ வகையைச் சேர்ந்த
சிறுநீரகம் உடனடியாக
தேவைப்படுகின்றது

076 331 2306, 070 195 1124

## வேலையாட்கள் தேவை

சாவகச்சேரியில் அமைந்துள்ள பல்பொருள் அங்காடி ஒன்றுக்கு (Supermarket) கணினி அறிவுடைய வேலையாட்கள் தேவை. சாவகச்சேரி நகரை அண்மித்தவர்கள் விரும்பத்தக்கது.

மேலதிக தொடர்புகளுக்கு

T.P: 0776668739

Email:stcmahal.chava@gmail.com

## வேலைவாய்ப்பு

**அலுவலக உதவியாளர்**

பிரபல நிறுவனம் ஒன்றுக்கு அலுவலக உதவியாளர் பதவிக்கான விண்ணப்பம் கோரப்படுகின்றது.
தகைமை: G.C.E.(O/L) அல்லது (A/L)
வயது : 30 வயதிற்குட்பட்டவர்கள்
சம்பளம் : அடிப்படை 25000/= யிலிருந்து
தகைமையுடையவர்கள் சுயவிவரத்துடன் 07,08/12/2020 நேர்முகத்தேர்விற்கு 9-12 மணிக்குள் சமூகமளித்தல் வேண்டும்.

தொடர்பு: 077 9393 867

## விற்பனைக்கு

மாங்கன்று, தேசி, தோடை, ஈரப்பலா, ஒட்டுபலா, கயூ, கொய்யா, மாதுளை, கமுகு, யம்பு, பசன்புறுட், ரகன் புறுட், தென்னங்கன்று, செவிளை தென்னை, விலும்பி நெல்லி, முருங்கன், பப்பா, டொமினேசி மா, அல்போன்னசா மா, கோப்பி, பட்டர்புறுட், றம்பிட்டான், கறுவா, கராம்பு, மாங்குஸ்த்தான், ஏலக்கா, சிதா, அன்னமுன்னா, நாவல், இலுப்பை, பாலை, முதிரை, வாகை, சவுக்கு, தேக்கு, மலை வேம்பு, ஊர்வேம்பு, சித்திரவேம்பு, சமண்டலை, கருங்காலி, காயா கொண்டல்-கொன்றை, நாகமரம், அன்னாசி, பொக்ஸ்பிரல், ரெட்பாம், கேவி, கொழும்பு வெற்றிலை, மிளகு மேலும் பல இன பூங்கன்று வகை, சாடி வகை, துளசி மாடம் ஐந்தூரியம், மஞ்சள் கன்று விற்பனைக்கு உண்டு.


**தொடர்பு: நியூ லங்கா பாம்**
**பலாலி வீதி, ஊரெழு மேற்கு**
**பிள்ளையார் கோயில் வீதி,**
**கணேசா பாடசாலை அருகில்**
**077 612 9343**

**நியூ லங்கா பாம்**
**கிளை:**
K.K.S. வீதி, இணுவில்


உ கணபதிதுணை

## திருமதி பற்குணமலர் பாலசுப்பிரமணியம் அவர்களின் சிவப்பேறு குறித்து (05.12.2020)

### உடுவில் முருகமூர்த்தி தேவஸ்தான நிர்வாக சபையினர் வழங்கும் கண்ணீரஞ்சலி




உடுவிலைப் பிறப்பிடமாகக்கொண்ட திருமதி பாலசுப்பிரமணியம் அம்மையார், சிறந்த ஆசிரியராய் விளங்கிய தோடல்லாமல் உடுவில் முருகமூர்த்தி மேல் பேரன்பும், பக்தியும் கொண்டு உபயங்கள், திருப்பணிகள் போன்ற பெரும் பணிகளைச் செய்து ஆலய வளர்ச்சிக்குப் பெரும் பங்கு ஆற்றிய தாயாரது சிவப்பேறறிந்த நிர்வாக சபையினர் தாயாரின் ஆத்ம சாந்திக்காக முருகப் பெருமானை வேண்டி அஞ்சலி செலுத்துகின்றோம்.

**நிர்வாக சபையினர்**

## மரண அறிவித்தல்

தோற்றம்
15 . 05 . 1922



மறைவு
05 . 12 . 2020

### கார்த்திகேசு ஆறுமுகம்

கரணவாயைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கார்த்திகேசு ஆறுமுகம் நேற்று (05.12.2020) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கார்த்திகேசு இராமி தம்பதியரின் அன்பு மூத்த புதல்வனும் காலஞ்சென்ற நல்லம்மாவின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான வல்லிபுரம், பரமேஸ்வரி ஆகியோரின் அன்பு சகோதரனும், காலஞ்சென்ற நகுலேஸ்வரி மற்றும் சண்முகநாதன், யோகேஸ்வரி, செல்வராணி, கமலா, தேவகுமார் (கனடா), பிறேடானந்தன் (சுவிஸ்), காலஞ்சென்ற ஜெகதீஸ்வரி ஆகியோரின் அன்பு தந்தையும் ஆவார்.


அன்னாரின் இறுதிக்கிரியை இன்று (06.12.2020) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கிராய் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
**குடும்பத்தினர்.**

## மரண அறிவித்தல்

தோற்றம்
26 . 04 . 1940



மறைவு
05 . 12 . 2020

### திரு. கந்தன் பிள்ளையான்

சிறுப்பிட்டி மேற்கை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கந்தன் பிள்ளையான் நேற்று (05.12.2020) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தன்-கதிரி தம்பதியரின் இளைய மகனும், காலஞ்சென்ற சிவபாக்கியத்தின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான நல்லான்-நன்னி தம்பதியரின் மருமகனும், காலஞ்சென்றவர்களான சின்னம்மா, பொன்னர், மாணிக்கர், கிட்டினர் மற்றும் செல்வி ஆகியோரின் அன்புச் சகோதரனும், காலஞ்சென்றவர்களான தவசி, பாறி, சின்னத்தம்பி ஆகியோரின் மைத்துனரும், ருவேந்திரா (விவசாய சம்மேளன செயலாளர்), சேனாதிராஜா (நியூசிலாந்து), சுகந்தினி (ஆசிரியை, யா/புத்தூர் மெ.மி.த.க. பாடசாலை), தயேந்திரன் (மாவட்ட சமூர்த்தி கணக்காணிப்பு முகாமையாளர், மாவட்ட செயலகம், முல்லைத்தீவு), விஜிதரன் (அவுஸ்திரேலியா) ஆகியோரின் அன்புத் தந்தையும், பாமினி, கனகாம்பிகை (நியூசிலாந்து), அருமைத்துரை (உளவளத்துணை உத்தியோகத்தர் பிரதேச செயலகம், தெல்லிப்பளை), சர்மிளா (அபிவிருத்தி உத்தியோகத்தர் நகரசபை, பருத்தித்துறை) ஆகியோரின் அன்பு மாமனாரும், கிஷோரன், சஞ்ஜீத்தனன், சிரஞ்ஜீத்தனன், சாகித்தியா, அஜீத்தனன் சேனுஜன், சாருஜன், தார்மீகனன், சகீரசனன், அக்ஷியானி, கஜினா ஆகியோரின் அன்பு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (06.12.2020) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, தகனக்கிரியைக்காக சிறுப்பிட்டி தெற்கு காளையம்புலம் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
**சிறுப்பிட்டி மேற்கு, நீர்வேலி.**
**மகன்-பி.ருவேந்திரா (0776258785)**
**மகன்-பி.தயேந்திரன் (0774726781)**

## மரண அறிவித்தல்



### குணரத்தினம் சந்திரராணி

அரியாலையை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட குணரத்தினம் சந்திரராணி 05.12.2020 சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சரவணமுத்து-சின்னாச்சி தம்பதியரின் பாசமிகு மகளும், காலஞ்சென்றவர்களான சின்னப்பு-நாகியின் பாசமிகு மருமகளும், காலஞ்சென்ற கந்தசாமி என்று அழைக்கப்படும் குணரத்தினத்தின் பாசமிகு அன்பு மனைவியும், நாகராசா, காலஞ்சென்ற ஆனந்தராசா, யோகராசா, தர்மராசா (சுவிஸ்) ஆகியோரின் பாசமிகு அன்புச் சகோதரியும், காலஞ்சென்றவர்களான சரஸ்வதி, செல்லையா, பாலசிங்கம், அருளம்பலம் மற்றும் ராசமலர் ஆகியோரின் பாசமிகு மைத்துனியும், அனுஷா, அகிஷா (கனடா), பவிஷா, சிந்துஜன், யதுஷா ஆகியோரின் பாசமிகு தாயாரும், சற்குண நாதன் ராஜன் மதிச்சந்திரன் (கனடா) ஜெகன்ராஜ் சோபிஜா ஆகியோரின் பாசமிகு மாமியாரும் கிரிஷாந், ஜதிஷாந், றோனிஷா, அஸ்நிதன் (கனடா) ஷர்நிஷன் (கனடா) ஷஸ்மினா ஆகியோரின் பாசமிகு பேர்த்தியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இல. 53/32, பூமகள் வீதி, அரியாலை மேற்கில் அமைந்துள்ள அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக இன்று (06.12.2020) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணியளவில் செம்மணி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
**பிள்ளைகள்: (அனுஷா, அகிஷா(கனடா), பவிஷா, சிந்துஜன், யதுஷா)**
**மருமக்கள்: (சற்குணநாதன், மதிச்சந்திரன்(கனடா), ஜெகன்ராஜ், சோபிஜா),**
**பேரப்பிள்ளைகள்: (கிரிஷாந், ஜதிஷாந், றோனிஷா, அஸ்நிதன்(கனடா), ஷர்நிஷன் (கனடா), ஷஸ்மினா).**

**தொடர்பு: (மகன்-சிந்துஜன்) 0776474629**

# அன்னை நாகா

50% பூட் சிற்றியில் யாழ். கிளையில்



## விசேட விலைக்கழிவு

பண்டிகைகால விஷேட விலைக்கழிவு

- Fancy
- Kids Item
- Gift & Toys
- Party Item

up to 50% Discount

ரூ.3000 /= இற்கும் மேல் கொள்வனவு செய்பவர்களுக்கு 1 kg சீனி இலவசம்

இச் சலுகை வரும் (29.11.2020 தொடக்கம் 05.12.2020) வரை



அன்னை நாகா
பூட் சிற்றி

ANNAI NAGAA FOOD CITY
175, K.K.S.Road. Jaffna.
021 739 0192, 021 739 0194



## கொள்கலன் வீடு (Container Home) வாடகைக்கு தேவை

இயக்கச்சியில் இயங்கும் தனியார் நிறுவனமொன்றின் பாவனைக்கு மாதாந்த வாடகை அடிப்படையில் 20 ft / 40 ft கொள்கலன் வீடு உடனடியாகத்தேவை.

076 985 1044


## மரண அறிவித்தல்

### திருமதி மங்களம் சிங்கராசா
(மாவிட்டபுரம் மருந்துக்கடை)



மாவிட்டபுரத்தை பிறப்பிடமாகவும், கொக்குவில், கோண்டாவில் கிழக்கை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி மங்களம் சிங்கராசா 02.12.2020 புதன்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் நல்லதம்பி வேமாவதியின் புதல்வியும், காலஞ்சென்ற சிங்கராசாவின் (மாவிட்டபுரம்-R.M.S கடை) அன்பு மனைவியும், நடராசாவின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்ற கிரிஜா, அனுசா (ஜேர்மனி) புஸ்பவதி (ஆசிரியை-யா/இணுவில் இந்துக் கல்லூரி) வனஜா (யா/வயாவிளான் றோ.க.த.க-ஆசிரியை) சகஜா (கனடா), சலஜா (கனடா) சைலொளிபவன் ஆகியோரின் பாசமிகு தாயாரும், கணேசமூர்த்தி (ஜேர்மனி), பாலமுரளி (ஜேர்மனி) சிவகுமார் (திருநெல்வேலி-ஐங்கரன் களஞ்சியம்) சிவானந்தன் (கிராம சேவகர் சிவானந்தன் (கனடா) சிவரூபன் (கனடா) ஆகியோரின் அன்பு மாமியும், பொன்னுச்சாமி (கனடா) அரியமலர் (நோர்வே) செல்வமலர், புஸ்பமலர், அருளானந்தனின் மைத்துனியும், நித்திலன், கபிலன், அபிலாஷன், ஆதித்யா, பிருந்தாபன், யாகலன், யதுமதி, ரவிவர்மன், இசானி, சாதனா, தேனுசி, அபிஷேக், அஜய்ஷேக் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பி.ப 2.00 மணியளவில் அவரது இல்லத்தில் (கோண்டாவில்) நடைபெற்று கோண்டாவில் கிழக்கு இந்து மயானத்தில் நல்லடக்கம் செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார் உறவினர், நண்பர்பகள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**272/2, இருபாலை வீதி,**
**கோண்டாவில் கிழக்கு,**
**கோண்டாவில்.**

தகவல் :
**குடும்பத்தினர்.**

## அடங்க மறுக்கும் அட்டலுகம மக்கள்

*தொற்று 329 ஆக எகிறியது*

கொழும்பு, டிசெ. 6

களுத்துறை - அட்டலுகம பிரதேசத்தில் முதலாவது தொற்றாளர்கள் இனங்காணப்பட்டபோதே அந்த பிரதேசம் அபாயம்மிக்கது என்றும், அங்குள்ள மக்கள் கூடுதலான ஒத்துழைப்பை வழங்க வேண்டும் என்றும் வலியுறுத்தியிருந்தோம். ஆனால் முதலாவது தினத்திலேயே எதிர்ப்பை வெளிப்படுத்தினர். அதனால் நால்வரில் ஆரம்பித்து நேற்று (நேற்று முன்தினம்) 329 பேராக உயர்வடைந்துள்ளது என்று இராணுவத் தளபதி லெப்டினன் ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்தார். (கு-இ)




அவசர பணத்தேவையா?
அல்லது அடகு வைத்த நகைகள் அறுதியாக போகின்றனவா?

F.A.Ads

எந்தவொரு வங்கிகளில் அடகு வைத்த நகைகளுக்கு

**பவுண் ஒன்றுக்கு ரூபா 15000/= மேலதிகமாகவும்**

**70 சதமான அதி குறைந்த வட்டியில் பெற்றுக்கொள்ளுங்கள்**


உங்கள் தற்போதைய அடகுச்சீட்டினை எமக்கு 0776 445322 இலக்கத்திற்கு WhatsApp மூலம் அனுப்பிவையுங்கள்

ஏராளமான விசேட சலுகைகள்

| | | | |
|---|---|---|---|
| செங்கடி | 076 6227250 | மட்டக்களப்பு | 076 6227243 |
| சுன்னாகம் | 071 0870689 | ஹட்டன் | 077 8790372 |
| கிளிநொச்சி | 076 6226964 | யாழ்ப்பாணம் | 076 6226942 |
| பருத்தித்துறை | 076 6226980 | முல்லைத்தீவு | 071 1695101 |
| சாவகச்சேரி | 076 6226967 | சம்மாந்துறை | 077 8032233 |
| தலவாக்கலை | 071 0871009 | அக்கறைப்பற்று | 077 7783673 |
| நாவலப்பிட்டி | 071 0870706 | ஒட்டுச்சுட்டான் | 074 0929571 |
| புதுக்குடியிருப்பு | 071 0870633 | வவுனியா | 074 0920313 |
| கல்முனை | 071 0870663 | நெல்லியடி | 074 0920357 |
| ராகலை | 071 0870703 | சங்கானை | 074 0920317 |


## மரண அறிவித்தல்

தோற்றம் 02 . 05 . 1951



மறைவு 04 . 12 . 2020

### கந்தசாமி பாலசுப்ரமணியம் (விசயன்)

கொக்குவில் வண்ணார்பண்ணையை பிறப்பிடமாகவும் ஜேர்மனியை வதிவிடமாகவும் கொண்ட கந்தசாமி பாலசுப்ரமணியம் (விசயன்) அவர்கள் 04.12.2020 அன்று காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தசாமி ராசமணி (சாமி அம்மா) தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற சிவசம்பு மற்றும் செல்வபூபதி தம்பதியரின் அன்பு மருமகனும், அம்பிகா (ஜேர்மன்) அவர்களின் அன்புக் கணவரும், ஸ்ரானி, ஸ்ரீப் ஆகியோரின் அன்புத் தந்தையும், பாரத் அவர்களின் அன்பு மாமனாரும், கமலா, பாலசுந்தரம், சந்திரசேனா (ஜேர்மனி), சுசிலா (ஜேர்மன்), காலஞ்சென்ற யோகேஸ்வரன் ஆகியோரின் அன்பு சகோதரனும், விஜயராணி, தனநிரூபசிங்கம் (பிரான்ஸ்), யோகேஸ்வரி, மங்களேஸ்வரி, தனேஸ்வரி, நடேஸ்வரி (பிரான்ஸ்) ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரிகைகள் பற்றிய விபரம் பின்னர் அறியத்தரப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
**குடும்பத்தினர்.**

**தொடர்புகளுக்கு:**
**S.பாலச்சந்திரன் - 077 020 4113**
**அம்பிகா (மனைவி) - +4 915 734689974**

உதயன்
newuthayan.com

## மரண அறிவித்தல்



### வேலாயுதர் கனகநாதன்

( இளைப்பாறிய ஊழியர் - விற்பனைத் திணைக்களம்,
உரிமையாளர் - ஸ்ரீமுருகன் ரேடேர்ஸ்)

கைதடி கிழக்கைப் பிறப்பிடமாகவும் மட்டுவில் கிழக்கு, சாவகச்சேரியை வசிப்பிடமாகவும் கொண்ட ஸ்ரீமுருகன் ரேடேர்ஸ் (மக்கள் கடை) உரிமையாளர் வேலாயுதர் கனகநாதன் (இளைப்பாறிய ஊழியர், விற்பனைத் திணைக்களம்) 04.12.2020 வெள்ளிக்கிழமை இறைபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற வேலாயுதர் - முத்துப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும், நந்தினியின் அன்புக் கணவரும், அஜந்தன், சுஜீவன், தனுஜன் ஆகியோரின் பாசமிகு தந்தையும், அனுசியா, பிரியதர்ஷினி ஆகியோரின் அன்பு மாமனும், அனந்தாராவின் பாசமிகு பேரனும், சின்னப் பிள்ளை, ஞானம்மா, அன்னலட்சுமி, காலஞ்சென்ற பொன்னுத்துரை, ஞானமலர், ஞானாம் பிகை ஆகியோரின் அன்புச் சகோதரனும், காலஞ்சென்ற சுப்பிரமணியம், சாந்தம்மா தம்பதியரின் மருமகனும் ஆவார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (06.12.2020) ஞாயிற்றுக்கிழமை காலை 8.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக வேம்பிராய் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

மட்டுவில் கிழக்கு,
சாவகச்சேரி.

தகவல்.
குடும்பத்தினர்

## மரண அறிவித்தல்

தோற்றம்
23 . 07 . 1930



மறைவு
03 . 12 . 2020

### சரவணமுத்து அன்னபூரணம்

அளவெட்டியைப் பிறப்பிடமாகவும் கனடாவை வசிப்பிடமாகவும் கொண்ட சரவணமுத்து அன்னபூரணம் 03.12.2020 வியாழக்கிழமை இறைபதம் அடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை - அன்னம்மா தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான வைரவப்பிள்ளை - சின்னம்மா தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற சரவணமுத்துவின் பாசமிகு மனைவியும், காலஞ்சென்ற கௌசலாதேவி மற்றும் விமலாதேவி, ஸ்ரீகந்தவேல், ஸ்ரீரஞ்சன், ஸ்ரீமோகன், சாரதாதேவி ஆகியோரின் அன்புத் தாயும், கணேசரட்ணம், சந்தனேஸ்வரன், சுமதிராணி, வதனிஜெயா, திருச்செல்வநாதன் ஆகியோரின் அன்பு மாமியும், காலஞ்சென்ற ஐயாத்துரை மற்றும் செல்வராசா ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்ற அன்னலெட்சுமி மற்றும் புவனேஸ்வரி ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (07.12.2020) திங்கட்கிழமை கனடாவில் நடைபெறும், இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

நீலியம்பனை
மல்லாகம்.

தகவல்.
ச.ஸ்ரீகந்தவேல் (மகன்)

## மரண அறிவித்தல்



### திருமதி பற்குணமலர்-பாலசுப்பிரமணியம் (ஆசிரியை)

உடுவிலைப் பிறப்பிடமாகவும் தற்போது லண்டனை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பற்குணமலர்-பாலசுப்பிரமணியம் அவர்கள் (04.12.2020) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கனகரத்தினம்-பரிபூரணத்தின் அன்பு மகளும், யாழ். போதனா வைத்தியசாலை M.L.T கணபதிப்பிள்ளை பாலசுப்பிரமணியத்தின் மனைவியும், காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை-சின்னம்மாவின் மருமகளும், அவுஸ்திரேலியா சிவஞானத்தின் மைத்துனியும், காலஞ்சென்ற சிவயோகமலர், காலஞ்சென்ற பூமலர், ராணிமலர் (மாமலர்) ஆகியோரின் சகோதரியும், நிறஞ்சன், நிறஞ்சனியின் தாயாரும், சிறிப்பிரியா, சிவகுமாரின் மாமியும், அஞ்சலா, அகம்சியா அர்ச்சகன், அர்ச்சனா ஆகியோரின் பேர்த்தியும், காலஞ்சென்ற ரட்ணசிங்கம், காலஞ்சென்ற பொன்னம்பலம், நவரட்ணத்தினம் ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
திருமதி ராணிமலர்-நவரத்தினம்
குடும்பத்தினர்.

தொடர்பு:
ராணிமலர் - 021 224 0774

## மரண அறிவித்தல்

தோற்றம்
17 . 06 . 1937



மறைவு
05 . 12 . 2020

### சின்னையா குலரத்தினம் (குணம்)

இலகடி, கோப்பாய் வடக்கு கோப்பாயைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சின்னையா - குலரத்தினம் நேற்று (05.12.2020) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னையா - இராசம்மா தம்பதியரின் அன்பு மகனும், கந்தையா - ராசம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், அற்புதமலரின் அன்புக் கணவரும், இன்பராணி (MLT போதனா வைத்தியசாலை - மட்டக்களப்பு), புஸ்பராணி (லண்டன்) ஆகியோரின் அன்புத் தந்தையும், சாஹிர் (MLT போதனா வைத்தியசாலை - மட்டக்களப்பு), கருணாகரன் (லண்டன்) ஆகியோரின் மாமனும், காலஞ்சென்றவர்களான நாகரத்தினம், வல்லிபுரம், சுப்பிரமணியம், பரஞ்சோதி மற்றும் இலட்சுமியின் அன்புச் சகோதரரும், காலஞ்சென்றவர்களான சச்சிதானந்தம், மனோன்மணி, இராசலிங்கம், டில்லன்துரை மற்றும் பத்மாவதியின் மைத்துனரும், சஹானா (மருத்துவப் பீட மாணவி - யாழ். பல்கலைக்கழகம்), சனுஜா (மாணவி - மட்டு - வின்சன் மகளிர் உயர்தர தேசிய பாடசாலை), பரஜித் (லண்டன்), இயூஷா (லண்டன்) ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (06.12.2020) ஞாயிற்றுக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று முற்பகல் 10.00 மணிக்கு பூதவுடல் தகனக்கிரியைக்காக கோப்பாய் கந்தன் காடு இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இலகடி,
கோப்பாய் வடக்கு,
கோப்பாய்.

தகவல்.
குடும்பத்தினர்
077 600 7494

## நிவாரணத்துக்கு...

யாழ்ப்பாண மாவட்டத்தில் புரேவி புயல் மற்றும் கன மழையால் அதிகளவான பாதிப்புக்கள் ஏற்பட்டுள்ளன.
மக்களுக்கு உடனடியாக நிவாரணம் வழங்குவதற்கு 19 மில்லியன் ரூபா தேவை என்று யாழ்ப்பாண மாவட்டச் செயலரால் நேற்றுமுன்தினம் காலை கோரிக்கை முன்வைக்கப்பட்டது.
நேற்றைய தினம் 10 மில்லியன் ரூபாவே ஒதுக்கப்பட்டுள்ளது. அதில் 3 மில்லியன் ரூபா சமைத்த உணவுகளை வழங்குவதற்கு ஒதுக்கப்பட்டுள்ளது. எஞ்சிய நிதியில் உலர் உணவு வழங்கல் ஆரம்பிக்கப்படவுள்ளது.
கோரிய நிதி முழுமையாக விடுவிக்கப்பட்டாலே பாதிக்கப்பட்ட மக்கள் சகலருக்கும் உலர் உணவு வழங்க முடியும் என்று மாவட்டச் செயலக அதிகாரிகள் தெரிவித்தனர். (ஒ,5)

## 73,000 பேர் ....

களுடைய எண்ணிக்கை அதிகரித்துள்ளது. நேற்று இரவு வரையில் யாழ்ப்பாணத்தில் 21 ஆயிரத்து 884 குடும்பங்களைச் சேர்ந்த 72 ஆயிரத்து 410 பேர் வரையில் பாதிக்கப்பட்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது. அத்துடன் 42 முகாம்களில் 111 குடும்பங்களைச் சேர்ந்த 3 ஆயிரத்து 841பேர் தங்கவைக்கப்பட்டுள்ளனர். 66 வீடுகள் முழுமையாகவும், 2 ஆயிரத்து 886 வீடுகள் பகுதி அளவிலும் சேதமடைந்துள்ளன. (ஒ,த,5)

## யாழ். போதனா...

காரணமாக நகரப் பகுதி வெள்ளக்காடாகியது. இதற்கு யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையும் தப்பவில்லை.
யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் சில விடுதிகளுக்குள் வெள்ளம் புகுந்தமையினால் பல லட்சம் ரூபா பெறுமதியான சொத்துக்கள் மற்றும் மருந்துகள் என்பன சேதமடைந்துள்ளன.
இந்த விடுதிகளுக்குள் இதற்கு முன்னரும் சாதாரண மழைக்கே வெள்ளம் செல்லும் நிலைமை காணப்பட்டது. இது தொடர்பில் போதனா மருத்துவமனை நிர்வாகம் உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளத் தவறியிருந்தது. இதனால் நேற்றைய பெரு மழையில் மருத்துவ விடுதிகள் வெள்ளத்தில் முழுமையாக மூழ்கியுள்ளன.
இந்த விடுதிகளில் இருந்த நோயாளிகள் புரேவி புயல் எச்சரிக்கை விடுக்கப்பட்டவுடனேயே பொறுப்பு மருத்துவ அதிகாரிகளால் இடமாற்றப்பட்டிருந்தனர். இதன் காரணமாக நேற்றைய வெள்ளத்தால் நோயாளிகள் பாதிக்கப்படவில்லை. இதேவேளை, யாழ். நகரில் சரியான வடிகால் அமைப்பு வசதியின்மையாலேயே போதனா மருத்துவமனையின் சில விடுதிக் கட்டடங்களின் பகுதிகள் நீரில் மூழ்கியுள்ளன என மருத்துவமனைப் பணிப்பாளர் தனது முகநூலில் பதிவிட்டுள்ளார். (ஒ,5)

## அங்கஜனின்...

சபையின் ஒப்புதலின்றி நடப்பட்ட நாடாளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன் உள்ளிட்டோரின் படங்கள் அடங்கிய பலகையைப் பெற்றுக்கொள்வதற்கு அச்சுவேலி பொலிஸார், பிரதேச சபைக்கு நேற்றும் சென்றனர்.
'பிரதேச சபைக்குச் சொந்தமான வீதியை எமது சம்மதமோ அனுமதியோ பெறாது புனரமைப்பதற்காக முன்னேற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. அவ் அறிவித்தல் பெயர்ப்பலகையிலும் எமது பதிவுக்கு உட்பட்ட வீதியை புனரமைப்பதற்காக ஊரெழு அம்மன் கோவில் வீதியை புனரமைத்தல் என்ற தகவல் வெளிப்படுத்தப்பட்டுள்ளது. இந்நிலையில் பிரதேச சபை ஒன்றின் பகிரப்பட்ட அதிகாரத்தை நிலைநாட்டுவதற்காக அதனை அகற்றினேன்' என்று தவிசாளர் நேற்று வாக்குமூலம் வழங்கியுள்ளார். பெயர்ப் பலகை, சபையின் அனுமதியின்றி நடப்பட்டது. அதனை மேற்கொண்ட வீதி அபிவிருத்தி அதிகார சபைக்கு அகற்றுமாறு பிரதேச சபைத் தவிசாளர் கடிதம் அனுப்பியிருந்தும் நடவடிக்கை எடுக்கப்படவில்லை. இதனையடுத்து பிரதேச சபைத் தவிசாளர் அதனை அகற்றினார். வீதி அபிவிருத்தி அதிகார சபையினர் அச்சுவேலி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்தனர். பொலிஸார் நேற்று முன்தினம் வாக்குமூலம் பதிவு செய்தனர்.
இந்த நிலையில் நேற்றைய தினம் அகற்றப்பட்ட பெயர்ப் பலகையை தருமாறு தவிசாளரிடம் கேட்டனர். அதற்குரிய கடிதத்தைப் பெற்றுக் கொண்டு தவிசாளர் பெயர்ப் பலகையை வழங்கியுள்ளார். (ஒ,5,26)

## 85%...

85 சதவீதமான மரக்கறி பயிர்கள் அழிவடைந்துள்ளது என விவசாயத் திணைக்கள வட்டாரங்கள் தகவல் வெளியிட்டுள்ளன. 30 ஹெக்டேயரில் வெங்காயம் பயிரிடப்பட்டிருந்த நிலையில் 90 சதவீதம் அது அழிவடைந்துள்ளது. நெல் 2 ஆயிரத்து 100 ஹெக்டேயரில் பயிரிடப்பட்டிருந்த நிலையில் 400 ஹெக்டேயர் இதுவரை அழிவடைந்துள்ளது.
மரக்கறி 200 ஹெக்டேயரில் பயிரிடப்பட்டிருந்த நிலையில் 185 ஹெக்டேயர் அழிவடைந்துள்ளது.
அத்துடன் 56 ஆயிரம் விவசாயக் குடும்பங்களில் 18 ஆயிரம் விவசாயக் குடும்பங்கள் மீள முடியாத பொருளாதாரச் சிக்கலுக்குள் உள்பட்டுள்ளன எனவும் விவசாயத் திணைக்கள வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன. (ஒ,5,11)

## எத்தனை...

தில் நேற்று இரண்டு மொழிகளிலும் உரையாற்றியபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார். இதன்போது அவர் மேலும் தெரிவித்ததாவது,

**மாவீரர் நாள்**

மட்டக்களப்பில் இளைஞர்கள் சிலர் கைது செய்யப்பட்டுள்ளனர். கடந்த நவம்பர் 26, 27, 28ஆம் திகதிகளில் முகப்புத்தகத்தில் சில பதிவுகளை இட்டார்கள் என்ற குற்றச்சாட்டின் பேரிலேயே இவர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர். இவர்களில் 29 வயதான அரச ஊழியர் ஒருவரும் அடங்குகின்றார்.
தமிழீழ விடுதலைப்புலிகள் அமைப்பின் தலைவர் பிரபாகரனின் புகைப்படத்தையும், மாவீரர் நாள் பதிவுகளையும் முகப்புத்தகத்தில் பதிவிட்டார்கள் என்ற குற்றச்சாட்டின் கீழ் இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். அதுவும் பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் இவர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர். இவர்களைக் கைதுசெய்துள்ள அரசு, அவர்களின் எதிர்காலத்தைக் கேள்விக் குறியாக்கியுள்ளது. முகப்புத்தகத்தில் தலைவர் பிரபாகரனின் புகைப்படத்தை பிரசுரித்தவர்களைப் பொலிஸார் கைசெய்வது என்பது அரசின் இயலாமையை மூடி மறைக்கும்படியான செயலாகும். இவர்களைக் கைது செய்வதற்குப் பதிலாக போதைப்பொருள் வர்த்தகத்தில் ஈடுபடும் வர்த்தகர்களைக் கைது செய்து சிறையில் அடையுங்கள்.
அரசின் மீது குற்றச்சாட்டுக்களை வைக்க வேண்டும் என்பதல்ல எனது நோக்கம். நாட்டில் கொரோனா அச்சுறுத்தல் இருக்கின்றது என்பதை நான் ஏற்றுக்கொள்கின்றேன். அதேபோன்று அரசு ஏனைய விடயங்களை மறைப்பதற்காக இவ்வாறு அப்பாவி இளைஞர்களைக் கைதுசெய்வதை நிறுத்த வேண்டும்.

**கார்த்திகை விளக்கீடு**

கார்த்திகை விளக்கீடு என்பது ஒரு பண்டிகை. இப்படியான பண்டிகை நாளில் பொலிஸார் கார்த்திகை தீபம் ஏற்றத் தடை ஏற்படுத்தியுள்ளனர். இதனை ஒருபோதும் என்னால் ஏற்றுக்கொள்ள முடியாது. ஒருசில இடங்களில் மக்கள் விளக்குகளை தீபங்களை ஏற்றுவதற்காகச் சிறிய அலங்காரங்களைச் செய்திருந்தனர். இதனையும் பொலிஸார் எட்டி உதைத்துள்ளனர். நீங்கள் உண்மையான பௌத்தர் என்றால் மனிதத்துவத்துக்கு மரியாதை செலுத்த முதலில் பழகிக்கொள்ளுங்கள்.
உண்மையிலேயே இந்த நாட்டிலுள்ள சிங்கள மக்கள் பாவம். நாடாளுமன்றத்தில் கஜேந்திரகுமார் உரையாற்றிய போது, சரத் வீரசேகர உள்ளிட்டவர்கள் எதிர்ப்பு வெளியிட்டனர். கோத்தாபய ராஜபக்சவுக்கு வாக்களித்தமை காரணமாகவே இவ்வாறு எதிர்ப்பை வெளியிட முடிந்தது எனக் கூறி மக்களை ஏமாற்றுகின்றனர். இவ்வாறு செய்து கொண்டு நீங்களே நாட்டில் பிரச்சினைகளை உருவாக்குகின்றீர்கள்.
நீங்கள் முஸ்லிம் நாடாளுமன்ற உறுப்பினர்களைப் பார்த்து சஹ்ரானை உருவாக்கினர் எனக் கூறுகின்றீர்கள். நீங்கள் நாட்டில் பிரச்சினைகளைத் தோற்றுவிக்கின்றீர்கள். நீங்களே சஹ்ரானை உருவாக்கினீர்கள். நாட்டில் கொரோனாத் தொற்றால் உயிரிழக்கும் முஸ்லிம்களின் ஜனாஸாக்களைப் புதைப்பதற்குத் தொடர்ந்தும் மறுப்புத் தெரிவிக்கப்பட்டு வருகின்றது. அவர்கள் தங்களுக்கு இறுதியாகவுள்ள உரிமையையே கேட்கின்றனர். அதனை வழங்குவதற்குக் கூட இந்த அரசு தொடர்ந்தும் மறுத்து வருகின்றது. இவ்வாறான செயற்பாடுகளை ஒருபோதும் ஏற்றுக்கொள்ள முடியாது, என்றார். (ஒ,22)

## ஒரே குடும்பத்தவர்...

கண்டறியப்பட்டுள்ளது என்று வடமாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் ஆ.கேதீஸ்வரன் தெரிவித்தார்.
கொழும்பில் மருத்துவ சிகிச்சைக்காக ஒரு மாதம் தங்கியிருந்து வீடு திரும்பிய குடும்பத்தில் 34 வயதுடைய குடும்பத் தலைவருக்கு கொரோனாத் தொற்று உள்ளமை கடந்த வியாழக்கிழமை கண்டறியப்பட்டது. அவரது மனைவி (வயது 29), பிள்ளை (ஒரு வயதும் 7 மாதமும்) மற்றும் மாமியார் (வயது64) என்று மூவருக்கு கொரோனா உள்ளமை கண்டறியப்பட்டுள்ளது. (ஒ,26)

## இன்று...

கரையைக் கடக்கும் வரை வடக்கு மாகாணத்துக்கு மழை கிடைக்கும். இவ்வாறு யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மூத்த விரிவுரையாளர் நா.பிரதீபராஜா தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:
மன்னார் வளைகுடா ஒடுங்கிய கடற்பரப்பு. இதன் காரணமாக புரேவி புயல் வலுக்குறைந்து, நகர முடியாமல் உள்ளது. அது வங்காள விரிகுடாவிலிருந்து முகில்களை ஈர்ப்பதால் வடபகுதியில் மழைக்கான வாய்ப்பு காணப்படுகின்றது. இன்று மாலை வரையில் மழை பெய்யக் கூடும்.
இத்தாழமுக்கம் கரையைக் கடந்தால் வடக்கில் படிப்படியாக மழை குறையும். ஆனாலும் தற்போதைய நிலையின் படி தாழமுக்கம் அதே இடத்தில் தொடரவே வாய்ப்புண்டு. ஏற்கனவே மண், நீர் நிரம்பிய நிலையில் காணப்படுவதால் 50 மி.மீ. மழை கிடைத்தாலே வெள்ள அனர்த்தம் ஏற்பட வாய்ப்புண்டு, என்றார். (ஒ,5)

## கிளிநொச்சியில்...

யுள்ளன. அதேவேளை ஆயிரத்து 846 குடும்பங்களைச் சேர்ந்த 5 ஆயிரத்து 439 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். அத்துடன் 3 வீடுகள் முழுமையாகச் சேதமடைந்துள்ளதுடன் 273 வீடுகள் பகுதியளவில் சேதமடைந்துள்ளன.
வன்னேரிக்குளம், குடமுருட்டி, கனகாம்பிகைகுளம் என்பனவே வான் பாயத் தொடங்கியுள்ளன. இரணைமடுக் குளம் 36 அடி கொள்ளவைக் கொண்டது. இதுவரை 27.7 அடி நிரம்பி யுள்ளது. (ஒ,5)

## முல்லைத்தீவில்...

குளங்கள் வான் பாயத் தொடங்கியுள்ளன. தெணியான்குளம், ஐயன்கன் குளம், அம்பலப்பெருமாள்குளம், பழையமுறிகண்டி குளம், கோட்டைகட்டியகுளம், தேராங்கண்டல் குளம், கணுக்கேணி குளம், மருதமடுகுளம், தட்டயமலை குளம் ஆகியனவே வான் பாயத் தொடங்கியுள்ளன. (ஒ,5)

## நீரேரி தடுப்பு...

அணைகளின் 'நீர்தடுப்பு கதவுகள்' திறந்து விடப்பட்டுள்ளன. ஒரு சில தினங்களில் மழை வெள்ளம் குறைவடைந்துவிடும். மழை வெள்ளத்தை வெளியேற்றுவதற்கு தொண்டைமானாறு தடுப்பு அணையில் 25 கவுகளும் அரியாலைத்தடுப்பு அணையில் 35 கவுகளும் அராலித் தடுப்பணையில் 5 கதவுகளும் திறந்து விடப்பட்டுள்ளன. இவ்வாறு குடாக்கடல் நீரேரி நன்னீராக்க வேலைத்திட்டத்துக்கு பொறுப்பான பொறியியலாளர் கு.சுஜீபன் தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:
கடல்நீர்மட்டம் உயர்ந்த நிலையிலும் குடாக்கடல் நீர்மட்டம் தாழ்ந்த நிலையிலும் இருந்தமையால் மழை வெள்ளம் வெளியேறுவதில் தடங்கல் ஏற்பட்டது. தற்பொழுது கடல்நீரின் மட்டம் குறைவடைந்திருப்பதால் மழைநீர் எதிர்பார்த்த அளவுக்கு வெளியேறிக்கொண்டிருக்கின்றது.
மக்களுக்கு மழைவெள்ளத்தால் ஏற்படக் கூடிய பாதிப்புக்களைக்கருத்தில் கொண்டு தடுப்பு அணைகளின் நீர்த் தடுப்பு கதவுகள் திறந்து விடப்பட்டன. கடல்கொந்தளிப்பு மற்றும் காற்று அமுத்தத்தால் கடல்நீர்மட்டம் உயர்வாக இருந்தமையால் மழை வெள்ளம் கடலுக்கு செல்ல முடியாத நிலை காணப்பட்டது. தற்பொழுது நிலைமை சீரடைந்து கடல்நீர்மட்டம் குறைவடைந்திருப்பதால் மழை வெள்ளம் வெளியேறிக்கொண்டிருக்கின்றது.
மக்களுக்கு பாதிப்பு இல்லாத வகையில் மழை வெள்ளத்தை வெளியேற்றுவதற்கு வசதியாக தொண்டைமானாறு அரியாலை, அராலி தடுப்பணைகளின் நீர்த்தடுப்பு கதவுகள் பொருத்தமான அளவு திறந்து விடப்பட்டுள்ளன.
மழை வெள்ளத்தை வெளியேற்றுவது தொடர்பான பணிகள் தொடர்ச்சியான கண்காணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன-என்றார். (ஒ[illegible]

## மணமகன் தேவை

29 வயது இடபராசி செவ்வாய் இல்லை பட்டதாரி அரச உத்தியோகம் பார்க்கும் யாழ். கௌரவ குடும்ப இந்து மணமகளுக்கு பொருத்தமான மணமகன் தேவை. பெற்றோர் மாத்திரம் தொடர்புகொள்ளவும்.

**074 043 8300**

## சேவை

நீங்கள் அடகுவைத்து மீட்டெடுக்கமுடியாத நகைகளை எமது நிறுவனத்தின் ஊழியர்கள் மூலமாக நீங்கள் அடகு வைத்த நிறுவனத்திற்கு வருகை தந்து மீட்டு எடுத்து அதற்கான பெறுமதிப்பணம் அவ்விடத்திலேயே தரப்படும் நாடளாவிய ரீதியில் சினேக பூர்வமான சேவை.

**AAA Gold Center**

**076 568 4346**

## காணி விற்பனைக்கு

யாழ். வைமன் வீதியில் 2½ பரப்புக் காணியும். கொக்குவில் சந்திக்கு அருகில் 2½ பரப்புக் காணியும் வீடும். யாழ். பொஸ்கோ பாடசாலைக்கு அருகில் 10 பரப்புக் காணியும் வீடும். சுண்டுக்குழி பாடசாலைக்கு அருகில் 1 பரப்புக் காணியும். வீடும். யாழ். பிறவுண் வீதி. 2½ பரப்பு காணியும் விற்பனைக்குண்டு.

**077 723 2535**

## இலவச ஆங்கில, கணினி வகுப்புகள்

**ONLINE COURSES பிரிவு 30**
**(INDIVIDUAL/GROUP)**

*ENGLISH COURSES
- Foundation Diploma in English
- Diploma in English
- Diploma in Spoken English
- Diploma in Teaching English

*ICT COURSES
- Diploma in MS-Office
- Diploma in ICT
- Diploma in H/W & Networking

**காலம்: மூன்று மாதங்கள்**
**சான்றிதழ் வழங்கப்படும்.**

ஆரம்பம்: சனி, ஞாயிறு12.13/12/2020
10.00 AM- 01.00 PM

**கற்கைப்பிரிவில்:**
* பாடசாலை மாணவர்கள்
* உ/த பரீட்சைக்கு தோற்றிய மாணவர்கள்
* உத்தியோகத்தர்கள் அரச, தனியார் இணைய முடியும்.

மாணவர்கள் தமது பதிவினை அலுவல கத்தில் உறுதிப்படுத்தி **Zoom** வகுப்பில் இணைய முடியும்.

க.பொ.த (உ/த) பரீட்சைக்கு தோற்றிய மாணவர்களுக்கு மட்டும் விசேட பிரிவு ஆரம்பமாகின்றது. சுகாதார நடைமுறைகளை பின்பற்றி அலுவலகத்தில் பதிவுசெய்ய முடியும்.

**On-line IELTS வகுப்புகள் ஆரம்பமாகின்றன**

**பதிவு:**
**Type your Name , Course Name to**
**076 685 2529 /077 602 1794**

**IPS** பல்கலைக்கழகத்திற்கு அண்மையில் திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.

## பெயர் மாற்றம்

**உமாசரஸ்** ஆகிய நான் இன்று முதல் எனது பெயரை **உமாதேவி** என மாற்றம் செய்வதோடு இனிவரும் சகல ஆவணங்களிலும் **உமாதேவி** என்றே கையொப்பமிட்டு பயன்படுத்துவேன் என இலங்கை சோசலிச குடியரசிற்கு அமைவாக உறுதிப்படுத்துகின்றேன்.

## கடை வாடகைக்கு தேவை

நல்லூர் பிரதேசத்துக்குள் கடை வாடகைக்கு தேவை.

தொடர்பு:**077 640 2406**

## திருமண இணைப்புச் சேவை

1981, 1987, 1979, 1985, பிறந்த வெளிநாட்டு மணமகன்களுக்கும் 1988, 1991, டொக்டர் மணமகன்களுக்கும் 1989, 1978, 1985, 1992, 1990 அரச உத்தியோக மணமகன்களும் மற்றும் உங்களுக்குத் தேவையான சகல மணமக்களும்.

**077 604 0373, 077 532 5379**
**Viber- 077 946 4287**

## காணி தேவை

யாழ்ப்பாணம், கோப்பாய், நல்லூர் பிரதேச செயலக எல்லைக்குள் 20 பரப்பு தொடக்கம் 50 வரையான பரப்பளவு காணி தேவை, தரகர் தேவையில்லை.

தொடர்பு:**076 2212 037**

## வேலையாள் தேவை

யாழ்நகரில் இயங்கும் வியாபார நிலையத்துக்கு வேலையாள் தேவை.
வயது எல்லை 25 - 50

**077 2387397**

## உடனடி வேலை வாய்ப்பு

O/L, A/L எழுதிவிட்டீர்களா?
CORONA ஆல் வேலை இழந்துவிட்டீர்களா?

**077 241 7007**

## வீடு வாடகைக்கு தேவை

யாழ். மாநகர எல்லைக்குள் 5 அறைகள் மற்றும் இணைந்த குளியல் அறைகளை உடைய வீடு தேவை. Hotel (தூங்குமிடம்) ஆக நடத்திய வீடுகள் இருப்பினும் தொடர்புகொள்ளவும்.

**077 515 9448**

## தேவை

வட மாகாணம் முழுவதும் விற்பனை செய்யகூடிய ஆண் ஒருவர் தேவை. சம்பளத்துடன் கொமிசன் வளங்கப்படும்.

**076 826 7703**

## வாடகைக்கு இடம் தேவை

யாழ் நகரை அண்டிய பகுதியில் ( 5km இற்குள்) சிறிய நிறுவனம் ஒன்றுக்கு முற்பணமில்லாமல் வாடகைக்கு இடம் தேவை.

தொடர்பு: **076 300 5506**

## மேல் வீடு வாடகைக்கு

புன்னாலை வீதி ஓட்டுமடம் யாழ்ப்பாணம். தொழில் புரியும் பெண்கள், மாணவிகள் உட்பட தனித்தனி அறையாகவும் கொடுக்கப்படும்.

தொடர்பு: **076 9099 214**

## பெண் வேலையாட்கள் தேவை

மிக்ஷர் தயாரிக்ககூடிய பெண் வேலை ஆள்கள் தேவை. சாவகச்சேரி சிற்றுண்டிசாலையில், பணிபுரிவதற்கு பெண் வேலையாள்கள் தேவை. சம்பளம் பேசித்தீர்மானிக்கப்படும்.

தொடர்பு: **077 646 0970**

## தேவை

வாகன சுத்திகரிப்பு நிலையத்திற்கு 18-20 வயதிற்கு உட்பட்ட உதவியாளர் தேவை.
யாழ்ப்பாணத்தில் வசிப்பவர் விரும்பத்தக்கது.

தொடர்பு: **077 2323000**

## காணி விற்பனைக்கு உண்டு

யாழ்ப்பாணம் ராசபாத வீதி மெயின் றோட்டுடன் மேட்டு நிலம். 6 1/4 பரப்பு காணி விற்பனைக்கு உண்டு. பிரித்து கொடுக்கப்படும். 1 1/2 பரப்பாக. தரகர் தேவையில்லை.

**077 623 4204**
**077 288 0152**

(ராச வீதியிலிருந்து 300 மீற்றர் தூரம் மெயின் றோட்டுடன்)

## கண்ணீர் அஞ்சலி



எமது பாடசாலையில் கடமையாற்றும் ஆசிரியர் **திருமதி சுகந்தினி அருமைத்துரை** அவர்களின் பாசமிகு தந்தையார்

**திரு.கந்தன் பிள்ளையான்**

அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு, அவரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**ஆசிரியர் நலன்புரிக் கழகம்**
**யா/புத்தூர் மெ.மி.த.க. பாடசாலை**

## 5 கைக்குண்டுகள் திருமலையில் மீட்பு

திருகோணமலை சேருவில பொலிஸ் பிரிவுக்குட்பட்ட நீலபொல காட்டுப்பகுதியில், ஐந்து கைக்குண்டுகள் நேற்று முன்தினம் மீட்கப்பட்டுள்ளன என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

அந்தப் பகுதியில் கைக்குண்டுகள் காணப்படுகின்றன என்று சேருவில இராணுவப் புலனாய்வுப் பிரிவினருக்குக் கிடைத்த இரகசியத் தகவலையடுத்து அங்கு மேற்கொண்ட தேடுதல் நடவடிக்கையின்போது இந்தக் குண்டுகள் மீட்கப்பட்டுள்ளன. இவ்வாறு மீட்கப்பட்ட கைக்குண்டுகளை, திருகோணமலை சர்தாபுர விசேட பொலிஸ் அதிரடி படையினர் செயலிழக்கச் செய்துள்ளனர். இந்தக் குண்டுகள் வெளிநாட்டில் தயாரிக்கப்பட்ட எஸ்.எப்.87 வர்க்கத்தைச் சேர்ந்தன என சேருவில பொலிஸார் தெரிவித்தனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை பொலிஸார் முன்னெடுத்துள்ளனர். (ற-இ)

## அப்பக்கடை சந்தியை மூடியது மழை வெள்ளம்

சாவகச்சேரி, டிசெ.6

மீசாலை வடக்கு கமநல சேவைகள் நிலையத்துக்கு முன்பாக உள்ள அப்பக்கடைச் சந்தியிலிருந்து செல்லும் நான்கு வீதிகளும் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன. தொடர் மழையால் மூன்று அடிக்கு மேல் அப் பகுதிகளில் வெள்ளம் காணப்படுவதால் அங்கு வாழும் குடும்பங்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்கியுள்ளனர். அப்பக்கடைச் சந்தியில் இருந்து உட்செல்லும் ரயில் கடவை மூடப்பட்டதால் மக்கள் நீண்ட தூரம் பயணிக்கவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

இதனால் மழை வெள்ளம் மதகுகள் ஊடாக குடியிருப்புக் பகுதிகளுக்குள் வழிந்தோடியுள்ளது. வெள்ளம் வழிந்தோடக்கூடிய மாற்று ஏற்பாடுகள் இல்லாது மக்கள் செல்லும் அனைத்து வீதிகளும் வெள்ளத்தால் நிறைந்துள்ளன. (வ-9)

## மரண அறிவித்தல்

### முத்துராசா கமலாம்பிகை

**தோற்றம்: 29.06.1940** **மறைவு: 05.12.2020**



கரம்பொன் தெற்கு ஊர்காவற்றுறையை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி முத்துராசா கமலாம்பிகை நேற்று (05.12.2020) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பொன்னையா சிவக்கொழுந்து தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான கந்தையா நாகம்மா தம்பதியரின் மருமகளும், காலஞ்சென்ற முத்துராசாவின் மனைவியும், காலஞ்சென்ற ராசம்மா, அரசரத்தினம், கனகரத்தினம், யோகம்மா, காலஞ்சென்ற லோகேஸ்வரி, வசந்தாதேவி ஆகியோரின் அன்பு சகோதரியும், காலஞ்சென்ற வேலாயுதபிள்ளை, முத்துராசா, தவமணி, கனகரத்தினம் ஆகியோரின் மைத்துனியும், காந்திமதி, பாமதி, மதிவதனன், புனிதாம்பிகை, மலர்விழி, கலைவாணி ஆகியோரின் அன்புத் தாயாரும், பரமானந்தம், திருச்செல்வம், டில்லிமலர், செல்வநாயகம், தவபாலன், திருமருமகன் ஆகியோரின் மாமியாரும், பவ்வியா, காண்டீபன், ராஜேஸ்வரன், நிறோஜன், அனந்தராம், அனந்தசகானா, மயூரன், கிருஷ்ணவி, கேசிகா, பெலாஜி, றோஜே, இசைப்பிரியா, சண்முகராசா, பிரணவன் ஆகியோரின் பேர்த்தியும், கதிரவனின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (06.12.2020) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் கரம்பொன் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார் உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**கரம்பொன் தெற்கு, ஊர்காவற்றுறை.**
**தொ.இல: 077 597 2162**

**தகவல் :**
**குடும்பத்தினர்.**

## மரண அறிவித்தல்

### தம்பித்துரை இலங்கநாதன்



யாழ். தாவடியைப் பிறப்பிடமாகவும், கனடா Markham ஐ வதிவிடமாகவும் கொண்ட தம்பித்துரை இலங்கநாதன் 02.12.2020 புதன்கிழமை அன்று சிவபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தம்பித்துரை அன்னபூரணம் தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான அப்புத்துரை நல்லம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், ரதி (மலர்) அவர்களின் அன்புக் கணவரும், நிவேதா, ஐங்கரன், ஜீவிதா, வாகிஸ் ஆகியோரின் அன்புத் தந்தையும், காலஞ்சென்றவர்களான சரஸ்வதிதேவி, கமலாதேவி, திவநேசன் (சோதி) மற்றும் பேரின்பநாயகம் ஆகியோரின் அன்புச் சகோதரரும், அகிலா, பரமேஸ்வரலிங்கம், தயா, காலஞ்சென்ற சண்முகநாதன் ஆகியோரின் அன்பு மைத்துனரும், ஸ்ரீரங்கன், சுவீதா, மகிந்தன் ஆகியோரின் அன்பு மாமனாரும், டாழினி, டானியா ஜெனாத், பிரசாந் ஆகியோரின் அன்புப் பெரியப்பாவும், நித்திலா, சுயந்தன், நிசாந்-சிந்து, நினேஷ்-ஐசி ஆகியோரின் அன்பு மாமாவும், கிருஷான், கிஷானா, ஆதித்தியா, ஆதிரா, மிர்ஷகா, அக்சிகா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் எதிர்வரும் (08.12.2020) செவ்வாய்க்கிழமை கனடாவில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார் உறவினர், நண்பர்பகள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தாவடி தெற்கு, கொக்குவில்.**

**தொடர்புகளுக்கு:**
**ரதி (மனைவி)** : +19054725633
**ஸ்ரீரங்கன் (மருமகன்)** : +14163157626
**ஐங்கரன் (மகன்)** : +14167049303
**மகிந்தன் (மருமகன்)** : +16473304886
**வாகிஸ் (மகன்)** : +16477783591

**தகவல் :**
**இ.பரமேஸ்வரலிங்கம்**
**(மைத்துனர்).**

முதலாம் பக்கத் தொடர்ச்சி...

யாழ்.நகரிலேயே...

என்று யாழ். திருநெல்வேலி வளிமண்டலவியல் திணைக்களப் பொறுப்பதிகாரி த.பிரதீபன் தெரிவித்தார். நேற்றுமுன்தினம் காலை 8.30 தொடக்கம் நேற்று காலை 8.30 வரையான 24 மணித்தியாலங்களில் இவ்வாறு பதிவாகியுள்ளது.

யாழ்.நகருக்கு அடுத்த நிலையில் திருநெல்வேலியில் 153.2 மில்லிமீற்றர் பதிவாகியுள்ளது.

அச்சுவேலி 68.7, பருத்தித்துறை 40.1, நயினாதீவு 65.3, யாழ்ப்பாணக் கோட்டை 159, நெடுந்தீவு 38.6, சாவகச்சேரி 39.8, தெல்லிப்பழை, 35, அம்பன் 17, முல்லைத்தீவு வள்ளிபுனம் 10.6, ஒட்டுசுட்டான். 2.8, கிளிநொச்சி 13.9, ஆனையிறவு 145, அக்கராயன் 15.1, இரணைமடு 32.9 மில்லிமீற்றர் என்ற அளவில் மழைவீழ்ச்சி பதிவாகியுள்ளது. (ஒ.த)

7 பேர்....

நிரவு அறிவித்துள்ளார். கொரோனாவால் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 137 ஆக அதிகரித்துள்ளது.

நாட்டில் நேற்றும் 669 பேருக்கு கொரோனா உறுதிப்படுத்தப்பட்டுள்ளது என அரச தகவல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

மொத்தத் தொற்றாளர்களின் எண்ணிக்கை 27 ஆயிரத்து 228 ஆக அதிகரித்துள்ளது. இவர்களில் 20 ஆயிரத்து 90 பேர் குணமடைந்துள்ளனர். (ஒ,22)

## மருத்துவரை காவுவாங்கிய கொரோனா!

கொழும்பு, டிசெ. 6

நாட்டில் முதல்முறையாக கொரோனாவால் பாதிக்கப்பட்ட மருத்துவர் ஒருவர் கொழும்பு ஐ.டி.எச். மருத்துவமனையில் நேற்றுமுன்தினம் உயிரிழந்துள்ளார். கொழும்பு மட்டக்குளியில் வசிக்கும் 69 வயதுடையவரே உயிரிழந்துள்ளார். இவர் அரசசேவையிலிருந்து ஓய்வுபெற்று இரண்டு தனியார் மருத்துவ நிலையங்களில் நீண்டகாலமாக சிகிச்சையில் ஈடுபட்டு வந்தார் என்று தெரிவிக்கப்பட்டது. (ஒ.தஇ)

# தமிழ்த் தேசத்துக்கான அங்கீகாரம் புதிய அரசமைப்பில் வேண்டும்!!!

## கஜேந்திரன் முழக்கம்

கொழும்பு, டிசெ. 6

தமிழ் தேசத்தை அங்கீகரிக்கக் கூடிய வகையிலான புதிய சமூக ஒப்பந்தத்தின் அடிப்படையில் புதிய அரசமைப்பு உருவாக்கப்பட வேண்டும். இவ்வாறு தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் பொதுச்செயலரும் நாடாளுமன்ற உறுப்பினருமான செல்வராசா கஜேந்திரன் தெரிவித்தார்.

இதன்படி வடக்கு, கிழக்கிலுள்ள விமான நிலையங்கள், துறைமுகங்கள் எமது தமிழ்த் தேசத்தின் அபிவிருத்திக்கு பயன்படுத்தப்படக் கூடிய வகையில் அரசியல் அதிகாரக் கட்டமைப்பு மாற்றியமைக்கப்பட வேண்டும் எனவும் அவர் வலியுறுத்தினார். நாடாளுமன்றத்தில் நேற்று உரையாற்றும்போது அவர் மேலும் தெரிவித்ததாவது,

அரச கட்டமைப்பு மாற்றி அமைக்கப்பட்டு, தமிழர்களின் தேசம் அங்கீகரிக்கப்பட்டு, வடக்கு கிழக்கு தமிழ்த் தேசம் அதனை நிர்வகிக்கக்கூடிய சூழல் உருவாக்கப்பட வேண்டும். அதனூடாக மட்டும்தான் எங்கள் மக்களின் பொருளாதாரத்தை நாங்கள் கட்டியெழுப்பக்கூடியதாக இருக்கும்.

தமிழ்த் தேசத்தை அங்கீகரிக்கக் கூடிய வகையிலான புதிய சமூக ஒப்பந்தத்தின் அடிப்படையில் புதிய அரசமைப்பு உருவாக்கப்பட வேண்டும். இந்த விடயங்களை அரசு கருத்தில்கொண்டு எமது மக்களையும் இந்த மண்ணில் நிம்மதியாக வாழவிட வேண்டும், என்றார். (ஒ,22)

# அர்ஜுனவை நாடு கடத்தும் கோரிக்கை நிலுவையில்

## சட்டமா அதிபர் தெரிவிப்பு

கொழும்பு, டிசெ.6

மத்திய வங்கி பிணைமுறி மோசடியுடன் தொடர்புடைய மத்திய வங்கியின் முன்னாள் ஆளுநர் அர்ஜுன மகேந்திரனை நாடு கடத்தும் கோரிக்கை நிலுவையில் உள்ளது என்று சட்டமா அதிபர் சிங்கப்பூர் நீதி அமைச்சின் செயலாளருக்கு தெரிவித்துள்ளார். சட்டமா அதிபர் தப்புல டி லிவேராவால் இந்த தெளிவுபடுத்தல் அறிக்கை நேற்றுமுன்தினம் சிங்கப்பூர் நீதி அமைச்சின் செயலாளருக்கு சமர்ப்பிக்கப்பட்டது என்று சட்டமா அதிபரின் ஒருங்கிணைப்பு அதிகாரி அரச சட்டத்தரணி நிஷாரா ஜயரத்ன தெரிவித்துள்ளார்.

அர்ஜுன மகேந்திரனை நாட்டுக்கு அழைத்து வருவது தொடர்பான அறிக்கையை தம்மிடம் நீதி அமைச்சர் அலி சப்ரி கோரியுள்ளார் என சட்டமா அதிபர் சுட்டிக் காட்டியுள்ளார்.

முன்னாள் மத்திய வங்கி ஆளுநர் அர்ஜுன மகேந்திரனை கைது செய்யுமாறு உயர் நீதிமன்றத்தால் பிறப்பிக்கப்பட்ட உத்தரவுக்கமைய, அவரை ஒப்படைக்குமாறு சிங்கப்பூர் நீதி அமைச்சுக்கு சட்டமா அதிபர் கோரிக்கை விடுத்திருந்தார். (ற-இ)

**Sales Rep தேவை**


யாழ் பிரவுண் வீதியில் இயங்கும் Grocery நிறுவனம் ஒன்றுக்கு Sales Rep தேவை. அனுபவம் உள்ளவர்கள் விரும்பத்தக்கது.

தொடர்புகளுக்கு: 0777 15 7070

# மரண அறிவித்தல்

## சின்னையா பாலசுந்தரம்

**(முன்னாள் உதவி அரசாங்க அதிபர்-மட்டக்களப்பு, வவுனியா, நெடுங்கேணி)**



யாழ். கொக்குவிலைப் பிறப்பிடமாகவும், கொழும்பு, மட்டக்களப்பு, வவுனியா நெடுங்கேணி, இலண்டன் ஆகிய இடங்களை வதிவிடமாகவும் கொண்ட சின்னையா பாலசுந்தரம் அவர்கள் 01.12.2020 செவ்வாய்க்கிழமை அன்று இறைவனடி எய்தினார்.

இவர், இளவயதிலிருந்தே தமிழ் மக்களுக்காகவும், தமிழ் மண்ணுக்காகவும் அரும்பாடுபட்டவர். இவர் தாயகத்தில் இருந்தபோதே தமிழரசுக் கட்சி, **TNA UK branch, Tamil Action Committee (TAC), TELO, TIC** போன்றவற்றில் நிர்வாகசபை அங்கத்தவராகவும் பணிபுரிந்தவர். புலம்பெயர்ந்த பின்னரும், எம் தமிழ் மக்களுக்காக அயராது பாடுபட்டவர்.

அன்னார், காலஞ்சென்றவர்களான சின்னையா பாக்கியம் தம்பதிகளின் அன்புப் புதல்வரும், காலஞ்சென்றவர்களான கந்தசாமி இராசதிரவியம் தம்பதிகளின் அன்பு மருமகனும், ரதி அவர்களின் அன்புக் கணவரும், குமணன், திருவண்ணன் ஆகியோரின் அன்புத் தந்தையும், காலஞ்சென்றவர்களான துரைராஜா, கனகராஜா, மற்றும் மதியாவர்ணம், திலகவதி, காலஞ்சென்ற பரமசாமி(பஞ்சு) ஆகியோரின் அன்புச் சகோதரரும், பானுமதி, காயத்திரி ஆகியோரின் அன்பு மாமனாரும், கமலேஸ்வரி, காலஞ்சென்ற மகேஸ்வரன் ஆகியோரின் அன்பு மைத்துனரும், உரும்பிராய் கற்பக விநாயகர் கலாசார மண்டப உரிமையாளர்களான தர்மகுலசிங்கம், ஜெயவீரசிங்கம் மற்றும் குணரட்ணசிங்கம்(துறை), காலஞ்சென்ற நவரட்ணசிங்கம் (சந்திரன்), வாசுகி(சக்தி), யோகமலர்(யோகா), கலைமகள் செல்வி (ரோசா) ஆகியோரின் அன்பு மைத்துனரும், வேந்தன், தருண், ரேவியன், சவண்யா ஆகியோரின் அன்பு அப்பப்பாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியை நாளை (07.12.2020) திங்கட்கிழமை தற்போதைய அரச விதிகளுக்கு இணங்க லண்டனில் நடாத்தப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**தகவல்: கந்தசாமி - இராசதிரவியம் குடும்பத்தினர்.**






இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 06.12.2020 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

பக்கங்கள்: 16

சஞ்சீவி

Registered as a Newspaper

மலை 33: வள்ளுவர் ஆண்டு : 2051 கார்த்திகை 21 ஞாயிற்றுக்கிழமை (06.12.2020) சிகரம் : 25

கட்டடம் உயர ஊரிலுள்ள குளம் மறையும்
றோட்டு உயர நீரோடும் வடிகால் மறையும்
மோட்டு முடிவுகளால் எல்லாம் தொலையும்
வெள்ளம் உயர கட்டடம், வீதி மொத்தமாய் மறையுமே!

*-கொரோனாச் சித்தர்*



# புரேவி பறித்த உயிர்!

தர்சன்

நல்ல காத்து. கடலுக்குப் போனா ஏதாவது கிடைக்கும், ரண்டு நாளைக்கு சீவியதைப் போக்காட்டலாம், கடலுக்குப் போறன், இப்ப வருவன்... எண்டு சொல்லிட்டு போன மனுசன், மூண்டாவது நாள் பிணமாத்தான் வந்தார்" என்று சொல்லி அழுதார் 38 வயதேயான இளம் குடும்பத்தலைவியான செல்வக்குமார் வள்ளியம்மை. புரேவிப் புயலுக்கு தன் கணவரின் உயிரைப் பறிகொடுத்த பெண்ணின் அவலம் அந்த அழுகையினூடாக வெளிப்பட்டது.

கடந்த முதலாம் திகதி செவ்வாய்க்கிழமை வடக்கில் புரேவிப் புயல் நடத்திய அந்தக் கோரத் தாண்டவத்தில் பலியான முதல் உயிர் சுழிபுரம் பெரியபுலோவைச் சேர்ந்த மீனவரான செல்வக்குமாருடையது. 37 வயதுடைய இளம் குடும்பஸ்தரான செல்வக்குமார் வறுமையின் பிடியிலும், முன்னேறத்துடித்தார். நான்கு பிள்ளைகளின் தந்தையான அவரின் வருமானத்தில்தான் அவரது குடும்பம் மட்டும் அல்ல, பெண் தலைமைத்துவக் குடும்பத்தைச் சேர்ந்த அவரது சகோதரியின் குடும்பம், மற்றும், தாய் தந்தையரும் தமது வாழ்வாதாரத்தைப் போக்கி வந்தனர். கடந்த நான்கு ஆண்டுகளுக்கு முன்னர் செல்வக்குமார் விபத்து ஒன்றில் சிக்கினார். வயிற்றுப் பகுதியில் சத்திரசிகிச்சையும் செய்துகொண்டார், காலிலும் பெரிய காயம் ஏற்பட்டிருந்தது. கடலுக்குச் செல்வதற்கு முடியாத நிலையில், தன்னால் இயலுமான கூலி வேலைகளையே செய்துவந்தார். எப்படியாவது தனது குடும்பத்தை காப்பாற்ற வேண்டும் என்ற எண்ணம் மட்டுமே அவரது சிந்தனை முழுக்க நிறைந்திருந்தது. சில நாள்களுக்கு முன்னர்தான் மீண்டும் கடற்றொழில் நடவடிக்கைகளில் இறங்கினார். கடலில் வீச்சுத் தொழிலில் இறங்கிய செல்வக்குமார் ஓரளவு வருமானத்தை ஈட்டத்தொடங்கினார்.

புரேவிப் புயல் வருவதற்கு முன்னரே அது தொடர்பில் அரசாங்கம், வளிமண்டலவியல் திணைக்களம், ஊடகங்கள், வானிலை ஆராய்ச்சியாளர்கள், புவியியல் துறை நிபுணர்கள் போன்றோர் அது தொடர்பான எச்சரிக்கைகளை போதுமான அளவுக்கு வழங்கியிருந்தனர். மறுஅறிவித்தல்வரை மீனவர்கள் எவரும் கடலுக்குத் தொழிலுக்குப் போக வேண்டாம் என்று ஊடகங்கள் மூலமும் அது தவிர கடலோரக் கிராமங்களுக்கு ஒலிபெருக்கி மூலமாகவும் முன்னெச்சரிக்கை விடுக்கப்பட்டிருந்தது.



மீட்கப்பட்ட சடலம்

**விதி விடவில்லை**
**01.12.2020**
**செவ்வாய்க்கிழமை .**

புரேவிப் புயல் வடக்குக் கடலில் நிலைகொண்டிருந்தது. யாழ். குடாநாட்டையும் கடுமையாகத் தாக்கத் தொடங்கியது. செல்வக்குமாரின் மனைவி வள்ளியம்மை காலையில் வயலில் புல்லுப் பிடுங்குவதற்காகச் சென்றிருந்தார். போகும்போது,

" ஒருத்தரையும் கடலுக்குப் போகவேண்டாம் எண்டு அறிவிச்சிருக்கு. இண்டைக்கு கடலுக்குப் போகாமல் வீட்டில இருங்கோ"

என்று கணவரிடம் சொல்லிவிட்டே வேலைக்குப் புறப்பட்டிருந்தார் வள்ளியம்மை.ஆனால் விதி யாரை விட்டது? மதியம்வரை வீட்டுக்குள் இருந்த செல்வக்குமார், மாலையானதும் கடலுக்குப் போக முற்பட்டார். அப்போது வேலை முடிந்து வந்துவிட்ட வள்ளியம்மை மீண்டும் தடுத்தார். ஆனால் " போட்டு இப்ப வந்திடுவன். காத்துக்கு நல்ல மீன் படும்" என்று சொல்லிவிட்டு, வீட்டிலிருந்த செல்வக்குமார் தனது உறவினர் ஒருவருடன் மாலை 5 மணியவில் கடலுக்குப் புறப்பட்டார். புரேவிப் புயலால் கடலில் நீர்ப்பெருக்கு அதிகமாக இருந்தது. வழமையை விடவும் அதிகமாகக் கடல் கொந்தளித்தது. அப்படியிருந்தும் இருவரும் அசட்டுத் துணிச்சலோடு கடலில் இறங்கினர். கடல் அலையில் தள்ளாடித் தள்ளாடி நின்றபடி ஒருவாறு வலை வீசி மீன் பிடியில் ஈடுபட்டனர்.

இந்த நிலையில் செல்வக்குமாருக்கு முட்டு இழுக்க ஆரம்பித்தது. இனியும் தாங்கமுடியாதென்ற நிலை வர, களைத்துப்போன செல்வக்குமார் கரைக்குச் செல்ல ஆயத்தமானார். தன்னோடு கூடவந்த உறவினரின் கையைப் பிடித்தபடி செல்வக்குமார் கடலில் நடக்க ஆரம்பித்தார். ஆனால் புரேவியின் தாக்கத்தால் கடலில் எழுந்த பேரலைகள் செல்வக்குமாரை நடக்கவிடாமல் தடை போட்டன. செல்வக்குமாரை கைத்தாங்கலாக அழைத்துச் சென்றால் இருவருமே கடலில் மூழ்க வேண்டியதுதான் என நினைத்தார் கூடச் சென்ற அவரது உறவினர். அடுத்தகணமே செல்வக்குமாரை பற்றியிருந்த கையை விடுவித்து, தான் மட்டும் நீந்திக் கரையை அடைந்தார்.

கரைக்குச் சென்ற உறவினர் , தன்னைப் பின் தொடர்ந்து செல்வக்குமாரும் வந்திருப்பார் என நினைத்துத் திரும்பிப் பார்த்தார். ஆனால் அவர் வரவில்லை. கொஞ்சநேரம் காத்திருந்தும் செல்வக்குமார் மீளவில்லை.எப்படியும் சில நிமிடங்களில் வந்துவிடுவார் என்ற எண்ணத்தோடு , தன் வீட்டுக்கு நடையைக் கட்டினார்.

அப்போது வள்ளியம்மை தனியாக வரும் உறவினரைப் பார்த்து " எங்க அவர்?" என்று கேட்டார்.

"கடலில நிண்டவன். நான் வந்திட்டன், கரையளில எங்கயும் நிப்பான்" என்று கூறி அவர் தனது வீட்டுக்குச் சென்றுவிட்டார். இரவு 8.30 மணியாகியும் செல்வக்குமார் வீடு திரும்பவில்லை.அதன் பின்னரே உறவினர்களும், ஊரவர்களும் செல்வக்குமாரைத் தேட ஆரம்பித்தனர். கடற்கரை, கடலுடன் அண்டியுள்ள காட்டுப் பகுதியெங்கும் தேடியபோதும் செல்வக்குமார் கிடைக்கவில்லை. புரேவிப் புயலில் காணாமல் போன முதல் மீனவராக செல்வக்குமார் ஊடகங்களால் அறிவிக்கப்பட்டார்.

**வலையில் சிக்கிய சடலம்**

செல்வக்குமார் காணாமல் போய் மூன்றாவது நாளான கடந்த வியாழக்கிழமை இரவு (03.12.2020) காரைநகர் ஊரிக் கடலில் தொழிலுக்குச் சென்ற மீனவர்கள் தங்களுடைய வலையில் சடலம் ஒன்று ஒதுங்கிருப்பதை அவதானித்தனர். ஏற்கனவே செல்வக்குமார் காணாமல் போனது தொடர்பில் அந்த மீனவர்கள் அறிந்திருந்ததால் அது தொடர்பில் உறவினர்களிடம் தெரிவித்தனர்.

(12ஆம் பக்கம் பார்க்க)



# கஜனின் உரை: ஒரு இனமாகத் திரள்வது

O நிலாந்தன்



> தென்னிலங்கையில் தனிச் சிங்கள வாக்குகளால் தெரிவு செய்யப்பட்ட அரசாங்கம் என்று தன்னைக் கூறிக் கொள்ளும் ராஜபக்ச அரசாங்கம் அசுர பலத்துடன் காணப்படும் ஒரு சூழலில், தமிழ் மக்களைப் பொறுத்தவரை ஐக்கியம்தான் ஒரு புனிதமான, உன்னதமான கொள்கையாக இருக்க முடியும்.

நாடாளுமன்றத்தில் வரவு -செலவுத் திட்டத்தில் பாதுகாப்பு அமைச்சு மற்றும் ராஜாங்க அமைச்சுக்களுக்கான நிதி ஒதுக்கீட்டின் மீதான விவாதத்தின் போது கஜேந்திரகுமார் ஆற்றிய உரை அருமையானது. அந்த உரைக்கு சிங்கள பிரதிநிதிகள் மத்தியிலிருந்து கடும் எதிர்ப்புக் கிளம்பியது. அவர்களுடைய குறுக்கீட்டால் கஜனின் நேரம் சுருங்கியபோது சிறீதரன் தமது கட்சியின் நேரத்தை அவருக்கு வழங்குவதாக அறிவித்தார்.

இது விடயத்தில் சிங்களத் தரப்பு கட்சி வேறுபாடுகளை கடந்து ஓர் இனமாக திரண்டு நின்ற பொழுது தமிழ்த் தரப்பும் அவ்வாறு ஓர் இனமாக திரண்டு நின்றது. பின்னர் நடந்த வாக்கெடுப்பில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி எதிர்த்து வாக்களித்தது. டெலோ இயக்கம் எதிர்த்து வாக்களித்தது. ஏனைய கூட்டமைப்புப் பிரதிநிதிகள் வாக்களிப்பில் பங்கேற்கவில்லை. விமர்சனங்களோடும் இந்த ஒற்றுமை பரவலாகப் பாராட்டப்படுகிறது.

கஜேந்திரகுமார் ஒரு இனத்தின் குரலாக அந்த இடத்தில் நின்றார். அதை ஆதரித்து ஏனைய தமிழ்ப் பிரதிநிதிகளும் அவருடன் நின்றார்கள் என்பது இங்கே முக்கியம். தமிழ்ப் பிரதிநிதிகள் இவ்வாறு அபூர்வமாக ஒன்றுபட்டு நின்றமை பரவலாக பாராட்டப்படுகிறது.

உண்மைதான். குறைந்த பட்சம் இது போன்ற ஐக்கியங்களையாவது கட்டியெழுப்ப வேண்டும் என்று கடந்த ஐந்து ஆண்டுகளுக்கும் மேலாக பல்வேறு வகைப்பட்ட தரப்பினரும் முயற்சித்தார்கள். ஆனால் அப்படி ஒரு ஐக்கியத்தைக் கட்டியெழுப்ப முடியவில்லை . குறைந்தபட்சம் மாற்று அணி என்று அழைக்கப்பட்ட கஜேந்திரகுமார் விக்னேஸ்வரன் ஆகிய இரண்டு அணிகளுக்கும் இடையிலாவது ஐக்கியம் ஒன்றைக் கட்டியெழுப்புவதற்காக நாட்டுக்கு உள்ளேயும் வெளியேயும் பல்வேறு தரப்புக்கள் உழைத்தன. ஆனால் அப்படி எந்த ஐக்கியத்தையும் ஏற்படுத்த முடியவில்லை. முடிவில் கடந்த நாடாளுமன்றத் தேர்தலின்போது தமிழ் வாக்குகள் சிதறிப் போயின.

ஆனால் கிட்டத்தட்ட ஓராண்டுக்கு முன், அதாவது கடந்த ஆண்டின் இறுதியில் நடந்த அரசுத் தலைவருக்கான தேர்தலின்போது தமிழ் மக்கள், கட்சிகளைக் கடந்து ஓரினமாக திரண்டிருந்தார்கள். ராஜபக்சக்கள் ஆட்சிக்கு வரக்கூடாது என்று தமிழ் மக்கள் ஓரினமாகத் திரண்டு வாக்களித்தார்கள் அந்த இனத் திரட்சியை கூட்டமைப்பு சஜித் பிரேமதாசவை நோக்கி மடை மாற்றியது. எனினும் அது ஓர் திரட்சி. தமிழ் மக்கள் இனரீதியாக ஒன்று திரளக்கூடியவர்கள் என்பதனை வெளிக்காட்டிய ஒரு வாக்களிப்பு அது. ஆனால் ஏழு மாதங்களின் பின் நடந்த நாடாளுமன்றத் தேர்தலில் தமிழ்க் கட்சிகள் தமிழ் மக்களைச் சிதறடித்தன. அந்தத் தோல்வியின் விளைவாக மறுபடியும் மாவை சேனாதிராஜா கட்சிகளுக்கிடையே ஒரு தற்காலிகக் கூட்டை உருவாக்கியிருக்கிறார். இக்கட்டுரை எழுதப்படும் இந்நாள் வரையிலும் அந்தக் கூட்டு உடைபடவில்லை.

ஆனால் அது ஒரு அற்புதமான கூட்டு என்றும் கொள்கை அடிப்படையிலானது என்றும் ஏற்றுக் கொள்ள இக்கட்டுரையாளர் தயாரில்லை. அது ஒரு சமயோசிதக் கூட்டு; தோல்வியிலிருந்து பெற்ற படிப்பினைகளின் அடிப்படையில் ஏற்பட்டது. அது ஒரு கொள்கைக் கூட்டாக இன்னமும் உருவாகவில்லை. ஆனால் தேர்தல் மையக் கட்சிகளுக்கிடையிலான கூட்டு எனப்படுவது அதிகபட்சம் அப்படித்தான் இருக்க முடியும்.

கொள்கைக் கூட்டுக்கள் அபூர்வமானவை ; அற்புதமானவை; அரசியல் கூர்ப்புக்கு அவசியமானவை. தமிழ்த் தரப்பில் அவ்வாறு கொள்கை கூட்டுக்கள் ஏற்பட்ட சந்தர்ப்பங்கள் மிகக் குறைவு. திம்புப் பேச்சு வார்த்தைகளின்போது நான்கு இயக்கங்கள் இணைந்து ஐக்கியமாக நின்றன. அது ஒரு தேவை கருதிய கூட்டு. அப்படித்தான் தமிழ் தேசியக் கூட்டமைப்பும். அதுவும் ஒரு தேவை கருதிய கூட்டு. அதனால்தான் கடந்த 10 ஆண்டுகளாக தமிழ் அரசியல் சீரழிந்து கடந்த நாடாளுமன்ற தேர்தலில் தமிழ் வாக்குகள் சிதறின. தோல்விக்குப் பின் மறுபடியும் ஒரு கூட்டு. அதுவும் தேவை கருதியதே.

இப்பொழுது கஜேந்திரகுமாருக்கு ஆதரவாக கூட்டமைப்பினர் நின்றார்கள் என்பதும், கூட்டமைப்பு தனது நேரத்தை கஜேந்திரகுமாருக்கு கொடுத்தமை என்பதும் கொள்கை அடிப்படையிலானது என்று கருதி மயங்கத் தேவையில்லை. ஆனால் அந்த இடத்தில் அந்த நேரத்தில் இனரீதியாக தமிழ்ப் பிரதிநிதிகள் ஒன்றுபட்டார்கள் என்பது உண்மை. அந்த நேரத்தில், அதுவே சரி. எனவே, இனிமேலும் ஐக்கியம் என்று வரும்பொழுது கொள்கை தூய்மையான அளவுகோல்களை வைத்துக் கொண்டு ஐக்கியத்தை தேடமுடியாது. தேடவும் கூடாது. மாறாக விவகாரங்களை மையமாகக் கொண்டு ஐக்கியத்தை கட்டி எழுப்பலாம். இப்போதைக்குச் சாத்தியமானது விவகார மைய ஐக்கியம்தான். முடியுமானால் அந்த விவகார மையக் கூட்டை ஒரு கொள்கைக் கூட்டாக மாற்றுவதற்கு முயற்சிக்கலாம். திலீபன் நினைவுநாளை முன்னிட்டு ஏற்பட்ட கூட்டும் அப்படித்தான். விவகார மையக் கூட்டுத்தான். எனவே தமிழ்த் தரப்பு முதலில் விவகார மையக் கூட்டுக்ககளையாவது ஏற்படுத்த வேண்டும்.

தென்னிலங்கையில் தனிச் சிங்கள வாக்குகளால் தெரிவு செய்யப்பட்ட அரசாங்கம் என்று தன்னைக் கூறிக்கொள்ளும் ராஜபக்ச அரசாங்கம், அசுர பலத்துடன் காணப்படும் ஒரு சூழலில் தமிழ் மக்களைப் பொறுத்தவரை ஐக்கியம்தான் ஒரு புனிதமான உன்னதமான கொள்கையாக இருக்க முடியும். அதாவது மக்களை ஆகக்கூடிய பெரிய திரள் ஆக்குவது. அவ்வாறு தமிழ் மக்களைத் திரள் ஆக்கும் எல்லாத் தலைவர்களும் போற்றப்பட வேண்டியவர்களே. எனவே கஜேந்திரகுமாரின் உரைக்கு சிங்கள பிரதிநிதிகள் ஓர் இனமாகத் திரண்டு எதிர்ப்பு காட்டிய பொழுது தமிழ்ப் பிரதிநிதிகளும் அவ்வாறு ஓர் இனமாகத் திரண்டமை அபூர்வமானது; போற்றப்பட வேண்டியது.

கஜனின் உரை பரவலாகக் கவனத்தை ஈர்த்துள்ளது. கடந்த பத்தாண்டுகளில் நாடாளுமன்றத்தில் அது போன்ற உரைகளைக் கேட்க முடியவில்லை. விக்னேஸ்வரனின் உரைகளும் கவனிப்புக்குரியவை. அண்மையில் சுமந்திரனும் ஒரு நல்ல உரையாற்றியிருந்தார். ஆனால் பிரச்சினை என்னவென்றால், இந்த உரைகளோடு மட்டும் தமிழ்த் தரப்பு நின்றுவிட முடியாது என்பதே. உரையாற்றினோம் எதிர்பைக் காட்டினோம் என்று திருப்திப்படுவதோடு நின்று விட முடியாது. 2009க்குப் பின்னரான தமிழ் அரசியலை உரைகளோடு சுருங்கிவிட முடியாது.

இந்த உரைகளால் ஒரு பொதுச்சுடரை ஏற்றி வைக்க முடியவில்லை என்பதைத்தான் நடந்து முடிந்த இரண்டு நினைவுகூர்தல்களும் நிரூபித்திருக்கின்றன. நினைவு கூர்வதற்கான பொதுவான கூட்டு உரிமையைக் கேட்டு தமிழ்க் கட்சிகள் போராட வேண்டியிருக்கிறது. இந்த உரைகள் மட்டும் போராடப் போதுமானவை அல்ல. நாடாளுமன்றத்துக்கு வெளியே கூர்மையான விதங்களில் அதேசமயம் தனிமைப்படுத்தல் சட்டங்களையும் கவனத்தில் எடுத்து மக்கள் மயப்பட்ட எதிர்ப்பைக் காட்டவேண்டியிருக்கிறது. முகநூலில் கிடைக்கும் கைதட்டல்களை வைத்துக்கொண்டு அடுத்த கட்ட அரசியலை மதிப்பீடு செய்ய முடியாது. தமிழ் மக்களின் அரசியல் இது போன்ற வீராவேசமான உரைகளைக் கடந்து எப்பொழுதோ வந்துவிட்டது. ஓர் இனப் படுகொலைக்குப் பின் இப்போது கேட்கும் போது கஜனின் உரை காயத்துக்கு வலி நிவாரணி போலத் தெரியலாம். ஆனால் காயம் இந்த மருந்தினால் ஆறக்கூடியது அல்ல. அது ஒரு கூட்டுக் காயம்; கூட்டு மனவடு. அதற்கு எதிராக கூட்டாகப் போராடினால்தான் நீதி கிடைக்கும். எனவே இப்பொழுது தமிழ் மக்களுக்குத் தேவையாக இருப்பது திரட்சி. திரட்சிதான் பலம். எவ்வளவுக்கு எவ்வளவு தமிழ் மக்கள் திரள் ஆகின்றார்களோ, அவ்வளவுக்கு அவ்வளவு பயமும் குறையும். பயம் தெளிந்தால்தான் தமிழ் மக்கள் வீட்டுக்கு வெளியே சுட்டிகளை ஏற்றுவார்கள். பயம் தெளிந்தால்தான் தமிழ் மக்கள் கோவில் மணிகளை ஒலிக்கச் செய்வார்கள். பயம் தெளிந்தால்தான் தமிழ் மக்கள் திரளாக வீட்டுக்கு வெளியே வருவார்கள் .டெல்லியில் வேளாண் மசோதாவை எதிர்த்து விவசாயிகள் அணிவகுத்து நிற்கிறார்களே? அப்படி. எனவே துணிச்சலான முன்னுதாரணங்க ளைத் தமிழ்ப் பிரதிநிதிகள் காட்ட வேண்டும். தமிழ் மக்கள் மத்தியில் உள்ள அச்சத்தை அகற்றி அவர்களைத் திரளாக்கும் துணிச்சலான முன்னுதாரணங்களைக் காட்ட வேண்டும்.

நடந்துமுடிந்த இரண்டு நினைவுகூர்தல்களின்போது எந்த ஒரு மக்கள் பிரதிநிதியும் அவ்வாறான கூர்மையான துணிச்சலான முன்னுதாரணங்களைக் காட்டியிருக்கவில்லை. அவ்வாறு கூர்மையான விதத்தில் இனத்தின் ஆன்மாவை இனத்தின் கோபத்தை இனத்தின் கூட்டுணர்வை வெளிப்படுத்தும் பிரதிநிதிக்குப்பின் தமிழ் மக்கள் இனமாகத் திரள்வார்கள். கிட்டத்தட்ட ஓராண்டுக்கு முன் அரசுத் தலைவருக்கான தேர்தலின் போது தமிழ் மக்கள் அப்படித்தான் யாரும் தலைமை தாங்காமலே ஓரினமாகத் திரண்டு நின்றார்கள். எனவே ஓர் இனமாகத் திரளக்கூடிய மக்களுக்கு தலைமை தாங்க யார் தயார்?





> முன்னர் விடுதலைப் புலிகளின் அச்சுறுத்தல் இருந்த போது இந்தியாவுடன் ஒட்டாக உறவாக இருந்த இலங்கை, இப்போது சீனாவுடன் சேர்ந்து தம்மைப் பார்த்துக் குரைப்பதை இந்தியா ரசிக்கவேயில்லை. எனவே மீண்டும் இலங்கைத் தமிழர் விடயத்தைக் கையிலெடுக்க இந்தியா தயாராகி விட்டதுபோல் தெரிகிறது.

○ ராஜ்குமார்

# பொறுத்தது போதும்!

பொறுத்துப் பொறுத்து பார்த்த இந்தியா பொங்கி எழத் தொடங்கி விட்டது போல் தெரிகிறது. தொடர்ந்தும் இந்தியாவை எரிச்சலுட்டும் நடவடிக்கையில் சீனா இயங்கி வரும் நிலையில் அடுத்து அதிரடியான சில நடவடிக்கைகள் மூலம் சீனாவை கொஞ்சம் அடக்கி வைக்க இந்தியாவும் அமெரிக்காவும் அடித்து ஆட தொடங்கியிருக்கின்றன. அதிலும் இந்தியாவைச் சுற்றியுள்ள பாகிஸ்தான், நேபாளம், மியன்மார், பங்களாதேஷ், இலங்கை ஆகிய நாடுகளைத் தனது கட்டுப்பாட்டில் வைத்துக்கொண்டு சீனாவை அடக்கி வைக்கும் முயற்சிகளை இந்தியா ஆரம்பித்திருப்பது கண்கூடாகத் தெரிகிறது.

சீனாவை கட்டுக்குள் கொண்டுவர இந்தியா எடுத்த முடிவுதான் அண்மையில் கொழும்பில் நடைபெற்ற முத்தரப்பு கடல்சார் ஒத்துழைப்பு மாநாடு. கடந்த 6 வருடங்களாக நடத்தப்படாதிருந்த இந்த மாநாட்டை நவம்பர் 27 ஆம் 28ஆம் திகதிகளில் இலங்கையில் நடத்தியிருந்தது இந்தியா. இதில் இந்தியா, இலங்கை, மாலைதீவு ஆகிய நாடுகள் பங்குபற்ற சீஷெல்ஸ், மொறீஷியஸ் பங்களாதேஷ் ஆகிய நாடுகள் பார்வையாளர்களாகக் கலந்து கொண்டன. இதில் கடல்சார் பாதுகாப்பு கடல் சார் சுற்று சூழல் தகவல் பரிமாற்றம் கடல் கொள்ளை ஆயுதக் கடத்தல், மருந்து கடத்தல், போதைப்பொருள் கடத்தல் என்பவற்றை பற்றி ஆராயப்பட்டதாகச் சொல்லப்பட்டாலும் இந்தோ பசுபிக் கடற்பரப்பிலும் இந்திய பெருங்கடல், பகுதியிலும் சீனாவின் ஆக்கிரமிப்பை தடுத்து நிறுத்துவதே முக்கிய பேசுபொருளாக இருந்தது. இந்தியா-இலங்கை மாலைதீவு கடல்சார் பாதுகாப்பு திட்டங்களை ஒருங்கிணைக்கவென கொழும்பில் ஒரு கடல்சார் பாதுகாப்பு செயலகத்தை அமைப்பதற்கு இந்த மாநாட்டில் முடிவு செய்யப்பட்டுள்ளது. இதன் மூலம் குறிப்பிட்ட கடற்பகுதியில் சீனா தனது வாலை ஆட்டாமல் நறுக்கிவிட இலங்கையையே கத்தியாக பாவிக்க இந்தியா தீர்மானித்துள்ளது.

இலங்கையைப் பொறுத்தமட்டில் சீனாவை தலையிலே தூக்கி வைத்துக் கொண்டாடும் அதேவேளை இந்தியாவை காலிலே போட்டு மிதிப்பது போலவே நடந்துகொண்டது. அம்பாந்தோட்டை துறைமுகத்தை சீனாவுக்கு 99 வருட குத்தைக்கு இலங்கை வழங்கிய போது அதற்கு அருகிலே இருந்த மத்தள விமான நிலையத்தை தமக்கு தரும்படி கேட்டது இந்தியா. ஆனால் இலங்கை மறுத்துவிட்டது.

பின்னர் கொழும்பு துறைமுகத்தின் ஒரு பக்க முனையத்தை சீனா கேட்டபோது மறுபேச்சுப் பேசாமல் தூக்கிக் கொடுத்த இலங்கை, அதன் கிழக்குப் பக்க முனையை தமக்கு தரும்படியும் அதனை ஜப்பானுடன் சேர்ந்து அபிவிருத்தி செய்ய போவதாகவும் இந்தியா கேட்டபோது தொழிலாளர்களின் எதிர்ப்பைக் காட்டி தரமறுத்து வந்தது. இலங்கை . சீன அரசுக்கு ஒருபக்க முனையத்தை கொடுத்தபோது எதிர்க்காத தொழிலாளர்கள் இந்திய அரசுக்கு மறுபக்க முனையத்தை கொடுப்பதற்க்கு எதிர்ப்புத் தெரிவிப்பதென்பது இலங்கை அரசின் நாடகமே என்று சந்தேகிக்கிறது இந்தியா. இது தவிர திருகோணமலை யில் உள்ள எண்ணெய்க் குதங்கள் சிலவற்றை இந்திய அரசின் கட்டுப்பாட்டிலுள்ள நிறுவனமொன்றுக்கு வழங்கியிருந்த இலங்கை இப்போ அவைகளை திருப்பித் தரும்படி கேட்டிருக்கிறது. இவைகளும் கைமாறிவிடுமோ என்ற சந்தேகம் இந்தியாவுக்கு ஏற்பட்டிருப்பது தவிர்க்கமுடியாததே.

மேலும் சீனாவிலிருந்து பொருள்களை தாரளமாக இறக்க அனுமதிக்கும் இலங்கை அரசு, இந்தியாவிலிருந்து மேற்கொள்ளப்படும் இறக்குமதிகளை கட்டுப்படுத்தி வருகிறது. உதாரணமாக மீன் வளம் நிறைந்த இலங்கைக்கு 10 இற்கும் மேற்பட்ட கொள்கலன்களில் 25 லட்சத்துக்கும் மேற்பட்ட ரின்மீன்கள் அண்மையில் சீனாவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டிருக்கின்றன. ஆனால் இந்தியாவிலிருந்து இங்கு வந்த 36 கொள்கலன்களில் உள்ள 10 இலட்சம் மெட்றிக்தொன் மஞ்சள் இந்தியாவுக்கே திருப்பி அனுப்பப்பட உள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. இது தொடர்பில் இந்திய தூதரக வட்டாரத்தில் பேச்சு நடத்தப்பட்டபோதிலும் பலன் கிடைக்கவில்லை. கூடவே தாம் திருப்பி அனுப்ப உள்ள மஞ்சளுக்கு இந்திய ஏற்றுமதியாளர்களிடமிருந்து நட்டஈடும் கோரியிருக்கிறது இலங்கைச் சுங்கம்.



இவ்வாறாக இந்தியாவைச் சீண்டும் வேலைகளில் இலங்கை தொடர்ந்து ஈடுபட்டு வரும் நிலையில் இலங்கையையும் கொஞ்சம் அடக்கி வைக்கும் தேவை இந்தியாவுக்கு ஏற்பட்டுள்ளது.

இதனால் முன்னர் இலங்கை தொடர்பான விடயங்களில் மென்போக்கைக் கையாண்ட இந்தியா இப்போது கொஞ்சம் வன்போக்குக்கும் திரும்பியிருப்பது சுட்டிகாட்டப்படுகிறது. இதற்கு உதாரணம் முன்னர் வெளிவிவகார அமைச்சர் ஜெய்சங்கரே இலங்கை விடயங்களைக் கையாண்டார். ஆனால் இப்போது இது தேசிய பாதுகாப்பு ஆலோசகர் அஜித் டோவலின் கைகளுக்கு மாற்றப்பட்டுள்ளது.

இந்தியாவிலே தேசிய பாதுகாப்பு ஆலோசகர் பதவி என்பது கிட்டத்தட்ட ஒரு அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சருக்கு ஈடான பதவியாகும். அதிலும் டோவாலைப் பொறுத்தமட்டில் இந்தியாவின் 'ஜேம்ஸ்பொன்ட்' என்று வர்ணிக்கப்படும் ஒருவர் . இதற்கு முன்னர் இந்திய உளவுப் பிரிவில் கடமையாற்றியவர். அப்போது இவரது நடிவக்கை எல்லாம் மயிர்க்கூச்செறியும் சாதனை நிறைந்தவையாக கருதப்படுகிறது. மிசோராம் தேசிய எஜன்சிக்குள் ஊடுருவி அதன் முக்கிய தளபதிகளின் நம்பிக்கையை பெற்று அந்த அமைப்பையே காலி செய்தவர். பாகிஸ்தானில் 7 ஆண்டுகள் 'றோ'உளவாளியாக இருந்து. பாகிஸ்தான் உளவுபிரிவு ஐ.எஸ்.ஐஎஸ்.ஆகியவற்றுக்கான நடவடிக்கைகள் ,தாக்குதல்கள்,ஆயுதங்கள் என்பவற்றை துல்லியமாக உளவு பார்த்தவர், டோவாலுக்கு ஓய்வின்பின் தேசிய ஆலோசகர் என்ற பதவியைக் கொடுத்து இந்திய பாதகாப்பின் முக்கிய விடயங்களைக் கையாளும் பொறுப்பையும் ஒப்படைத்துக் களமிறக்கியிருக்கிறது மோடி அரசு.

இலங்கையில் பேச்சுக்களை நடத்த இந்திய வெளிவிவகார அமைச்சர் ஜெய்சங்கர் விரைவில் கொழும்புக்கு வருவார் என்ற செய்திகள் வெளியான நிலையில் திடுதிப்பெனக் களமிறக்கப்பட்ட டோவால், இலங்கை வந்து பிரதமர், வெளிவிவகார அமைச்சர், பாதுகாப்புச் செயலர், ஜனாதிபதி என்று ஏற்கனவே திட்டமிடப்பட்ட பலரையும் சந்தித்த பின் திடீரென முன் திட்டமேதுமின்றி தமிழ்க் கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தனையும் 30 நிமிட நேரம் சந்தித்து இலங்கைக்கு ஒரு அதிர்ச்சி வைத்தியத்தைக் கொடுத்திருக்கிறார்.

இனியும் இலங்கை கட்டுக்குள் வராவிட்டால், சம்பந்தனை சந்தித்ததுபோல அதிரடியான திருப்பங்களுக்கு இடமுண்டு என பூடகமாக சில விடயங்களை இலங்கை அரசுக்கு சொல்லாமல் சொல்லிச் சென்றிருக்கிறார் டோவால். முன்னர் விடுதலை புலிகளின் அச்சுறுத்தல் இருந்தபோது இந்தியாவுடன் ஒட்டாக உறவாக இருந்த இலங்கை இப்போது சீனாவுடன் சேர்ந்து தம்மைப் பார்த்துக் குரைப்பதை இந்தியா ரசிக்கவேயில்லை. எனவே மீண்டும் இலங்கைத் தமிழர் விடயத்தைக் கையிலெடுக்க இந்தியா தயாராகி விட்டதுபோல் தெரிகிறது. இது தொடர்பில் ஏற்கனவே செப்ரெம்பர் மாதத்தில் பிரதமருடன் நடந்த இணையவழிக் கலந்துரையாடல் ஒன்றில் இந்தியப் பிரதமர் மோடி "ஐக்கிய இலங்கைக்குள் தமிழரின் அபிலாசைகள் நிவர்த்தி செய்யப்பட வேண்டும். 13ஆம் திருத்தம் அமுல்படுத்தப்பட்டு நல்லிணக்க செயற்பாடு முன்வைக்கப் பட வேண்டும் "என்றார். இப்போது சம்பந்தனுடனான சந்திப்பின் மூலம் மோடி போட்ட கோட்டை றோட்டாக்கியிருக்கிறார் டோவால்.

அடுத்த வருடத்தில் தமிழ்நாட்டில் சட்ட சபை தேர்தல் வர இருக்கிறது. அப்போது தனது பாரதிய ஜனதா கட்சியை தமிழ்நாட்டில் காலுன்றச் செய்ய வேண்டுமென்று விரும்புகிறார் மோடி. அதற்காகதான் உரையாற்றும் இடங்களிலெல்லாம் பாரதியாரின் கவிதை திருக்குறள் போன்ற தமிழின் பெருமைகள் பற்றி சொல்லி தமிழர்களுக்கு சொக்குப் பொடி போட்டு வருகிறார். இந்த நிலையில் இலங்கை தமிழர் பிரச்சினையை கையிலெடுத்தால் தமிழ்நாட்டு தமிழர்களிடம் இன்னும் கொஞ்சம் நல்லபிப்பிராயம் பெறலாம் என்பதுவும் மோடியின் திட்டமாக இருக்கிறது. எனவே அதற்கான சில முன்னாயத்த நடவடிக்கைகளே டோவால் -சம்பந்தன் சந்திப்பு என்றும் ஊகிக்கப்படுகிறது. இவ்வாறாக ஒரே கல்லில் பல மாங்காய்களுக்கு இலக்கு வைத்து செயற்படுகிறது இந்தியா.

ஆனால் இலங்கையோ இவைகளையெல்லாம் தெரியாததுபோல அல்லது தெரிந்தும் தெரியாதது போல "இந்தியாவை நம்பக்கூடாது. வேறுநாடுகளை தான் நம்ப வேண்டும் "என்று இப்போதும் அறிக்கைகளை விட்டு இந்தியாவின் வெறுப்பை மேலும் அதிகரித்துக் கொண்டிருக்கிறது.



# மாறும் இந்திய அணுகுமுறை!



○ அ.நிக்ஸன்

**விடுதலைப்புலிகளை முற்றாக ஒழித்த பின்னரே நிரந்தர அரசியல் தீர்வு என்ற உறுதி மொழியைப் போன்றுதான், இந்தப் பொருளாதார அபிவிருத்தி பற்றிய கதையும் இருக்குமென்று அமெரிக்க இந்திய அரசுகளுக்கும் புரியும்.**

இந்தோ - பசுபிக் பிராந்தியப் பாதுகாப்பு விவகாரத்தில் இலங்கை அரசு அமெரிக்க, இந்திய நலன்களுக்கு ஏற்றவாறு செயற்பட வேண்டுமென்ற ஆழமான பரிந்துரையை இந்தியப் பாதுகாப்பு ஆலோசகர் அஜித் டோவால் முன்வைத்திருக்கிறார். இலங்கை ஒற்றையாட்சி அரசின் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சவுடன் கொழும்பில் இடம்பெற்ற சந்திப்பில் முக்கிய மாக மூன்று விடயங்கள் உள்ளடங்கியிருந்ததை இந்திய வெளியுறவுத்துறை கூறிய கருத்துக்கள் காண்பிக்கின்றன.

ஒன்று,கடல்சார் கூட்டுப் பாதுகாப்பு ஒத்துழைப்பு, (Maritime Domain Awareness) (MDA) அதாவது இலங்கைக் கடற்படை வைத்திருக்கும் ராடர்கள் இந்தியக் கடற்படையின் ராடர்களில் தெரியவேண்டும் என்பது. இருநாடுகளும் ஒரே மாதிரியான ராடர் செயற்பாடுகளைக் கொண்டிருக்கவேண்டும் என்ற நோக்கிலானது. இரண்டாவது, பாகிஸ்தான் தவிர்ந்த இந்தியப் பெருங்கடலை மையப்படுத்திய பிராந்திய ஒத்துழைப்பு (Indian Ocean Rim Association) (IORA) அதாவது வர்த்தக ரீதியான செயற்பாடுகள் மற்றும் பிராந்திய நாடுகளை ஊக்குவித்தல் தொடர்பான விவகாரங்களில் இலங்கையின் கூட்டுச்செயற்பாடு.

மூன்றாவது, கொழும்புத்துறைமுகத்தின் கிழக்கு முனைய அபிவிருத்தி. அதாவது இந்திய, ஜப்பான், இலங்கை ஆகிய மூன்று நாடுகளும் ஒன்றிணைந்து மேற்கொள்ளும் அபிவிருத்தித் திட்டத்தை உடனடியாக ஆரம்பித்தல்.

இந்த மூன்று விடயங்கள் தொடர்பாகவும் இலங்கை முழுமையான ஒத்துழைப்பை வழங்குமென அஜித்டோவால் புதுடில்லியில் நம்பிக்கை வெளியிட்டுள்ளார். இலங்கையில் சந்திப்பை முடித்துக்கொண்டு புதுடில்லிக்குச் சென்ற அவர், இந்தோ-பசுபிக் பிராந்திய பாதுகாப்பு உள்ளிட்ட விவகாரங்களில் இலங்கையின் பங்களிப்புத் தொடர்பான வாக்குறுதிகளை பிரதமர் நரேந்திர மோடியிடம் கூறியிருக்கிறார். இது தொடர்பாக இலங்கை வெளியுறவு அமைச்சின் செயலாளர் பேராசிரியர் ஜெயநாத்கொலம்பகே இந்தியச் செய்தியாளர்களிடம் விபரமாகக்கூறியிருக்கிறார்.

குறிப்பாக கொழும்புத்துறைமுக கிழக்கு முனைய அபிவிருத்தித்திட்டம் இந்தியாவிடமே ஒப்படைக்கப்படும். அந்த விடயத்தில் இலங்கையிடம் மாற்றுக் கருத்தில்லை எனவும் ஜெயநாத் கொலம்பகே உறுதியாகக் கூறிருக்கி றார். ஆகவே கோத்தாபய ராஜபக்ச தலைமையிலான இலங்கை அரசாங்கம், இந்திய அமெரிக்க நலன்சார்ந்து செயற்படும் என்பது வெளிப்பட்டுள்ளது. அத்துடன் பொருளாதார விடயங்களில் சீனாவுடன் இணைந்து செயற்படுவதை இந்தியாவோ அமெரிக்காவோ எதிர்க்காது என்ற நம்பிக்கையும் இலங்கைக்குக் கிடைத்திருக்கிறது.

அமெரிக்க இராஜாங்கச் செயலாளர் மைக்பொம்பியோ செப்ரெம்பர் மாதம் 28ஆம் திகதி கொழும்புக்கு வந்து சென்றபோதும்கூட, இந்த நம்பிக்கையை அமெரிக்காவிடம் இருந்து இலங்கை பெற்றிருந்தது. ஆனால் இலங்கையின் இறைமை, சீனாவிடம் அடகு வைக்கும் நிலைக்குச் சென்றுவிடக்கூடாதென்ற எச்சரிக்கையும் மைக் பொம்பியோவினால் கொழும்பில் முன்வைக்கப்பட்டிருந்தது. அந்த எச்சரிக்கையை கோத்தாபய ராஜபக்ச இலங்கைக்கான புதியதொரு மாற்றமாகவே கருதுகிறார் போலும். ஏனெனில் மாலைதீவு அரசு அமெரிக்க, இந்திய அரசுகளின் நலன்களையே முதன்மைக் கொள்கையாக வகுத்துள்ளது. ஆனால் அப்படியொரு முதன்மைக் கொள்கை ஒன்றை இலங்கையும் வகுக்கவேண்டுமென அமெரிக்காவோ இந்தியாவோ இலங்கையிடம் கேட்டதாகத்தெரியவில்லை. மாலைதீவு ஜனாதிபதி சோலீ இப்ராஹிம் அரசாங்கத்தின் கீழ் மாலைதீவு அதன் வெளியுறவுக் கொள்கை அணுகுமுறை 'இந்தியா முதலில்' என்ற அடிப்படையில் அமையும் என்று வெளிப்படையாக அறிவித்திருக்கிறது. நரேந்திரமோடி இரண்டாவது தடவையாகப் பதவியேற்ற அடுத்த சில நாள்களில் மாலைதீவுக்குச் சென்றிருந்தார். அதன்பின்னரே அவ்வாறான கொள்கை ஒன்றை மாலைதீவு வகுத்ததெனலாம்.

இலங்கைக்கும் நரேந்திரமோடி வந்தபோது, மாலைதீவு அரசின் முன்மாதிரி பற்றிக் கூறப்பட்டிருந்தது. ஆனால் இந்தியா முதலில் என்ற அணுகுமுறை உத்தரவாதத்தை இலங்கையிடம் இருந்து பெற முடியவில்லை. இந்தியாவுக்கும் அப்படியொரு உத்தரவாதம் இலங்கையிடம் இருந்து உடனடியாகத் தேவைப்பட்டிருக்கவும் இல்லை. ஏனெனில் MDA எனப்படும் கடல்சார் பாதுகாப்பு ஒத்துழைப்பு IORA எனப்படும் இந்தியப் பெருங்கடல் பிராந்திய ஒத்துழைப்பு மற்றும் ஊக்குவிப்புத் திட்டங்களுக்கு ஏற்ப இலங்கை செயற்பட்டாலேபோதும் என்ற இலக்கு இந்தியாவிடம் இருந்தது.

ஆகவே இந்திய - அமெரிக்க அரசுகளின் இலங்கை தொடர்பான இந்த அணுகுமுறை கோத்தாபய ராஜபக்சவின் கொள்கைக்குப் பொருத்தமானதாகவும். இலங்கையின் இறைமை,தன்னாதிக்கம் என்பவற்றை நிலைநிறுத்த அதுவாய்ப்பாகுமெனவும் பொருளாதாரத்தை மேம்படுத்த முடியுமெனவும் இலங்கை நம்புகின்றது. அத்துடன் இந்த அணுகுமுறையின் ஊடே ஈழத் தமிழர்களின் அரசியல் விடுதலை குறித்த பேச்சுக்களையும் இலங்கை ஒற்றையாட்சி அரசமைப்புக்குள் உள்ளடக்கிவிடலாமெனவும் கோத்தாபய ராஜபக்ச உள்ளிட்ட சிங்களத் தலைவர்கள் எதிர்பார்க்கின்றனர்.

கடந்த வாரம் கொழும்பில் மூன்று நாள்கள் இடம்பெற்ற இந்தோ - பசுபிக்கடல் சார் பாதுகாப்பு மாநாட்டில் இலங்கை மாலைதீவு ஆகிய நாடுகளுக்கிடையேயான கடற்பாதுகாப்பை முழுமையாக அங்கீகரித்துச் செயற்படுத்த மாநாட்டில் உறுதியளிக்கப்பட்டதென்று மாலைதீவில் உள்ள இந்திய உயர்ஸ்தானிகர் சமூகவலைத்தளத்தில் கூறியுள்ளார். இலங்கை உடன்பட்டது என்பதுதான் அவருடைய பதிவின் பிரதான நோக்கமாக இருந்தது. இந்த மாநாட்டில் இலங்கையின் பாதுகாப்புச் செயலாளர் மேஜர் ஜெனரல் கமால் குணரட்ன மற்றும் மாலைதீவு பாதுகாப்புஅமைச்சர் மரியாடிடியும் பங்கேற்றனர். 2014ஆம் ஆண்டுக்குப் பின்னர் இடம்பெற்ற இந்த மாநாட்டில், மொரீசியஸ் சீஷெல்ஸ் ஆகிய இரு நாடுகளும் புதிதாக இணைந்து கொண்டன.

மாலைதீவைப் போன்று இலங்கையை அமெரிக்க - இந்திய அரசுகள் விரைவாகத் தமது கட்டுப்பாட்டில் கொண்டு வரமுடியாது. 2012ஆம் ஆண்டு ஜெனீவா மனித உரிமை சபையில் அமெரிக்கா முன்வைத்த இலங்கை தொடர்பான பிரேரணையைக்கூட மிகவும் புத்திசாலித்தனமாக இலங்கை கையாண்டது. 2015ஆம் ஆண்டு புதிய பிரேரணை ஒன்றை அதே அமெரிக்காவினால் சமர்ப்பிக்க வைத்து, அதற்கு இணைஅனுசரணைவழங்கி மிகக்குறைவானஅழுத்தம் உள்ள 301 தீர்மானம் நிறைவேற்றப்பட்டிருந்தது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் அதற்கு ஒத்துழைப்பு வழங்கியமை இலங்கை ஒற்றையாட்சி அரசுக்குக் கிடைத்த மிகப்பெரியவெற்றி. சென்ற புதன்கிழமை நாடாளுமன்றத்தில் உரையாற்றியிருந்த எதிர்க்கட்சி உறுப்பினர் லக்ஸ்மம் கிரியெல்ல, 301 தீர்மானத்துக்கு 2015 ஆம் ஆண்டு ஆதரவு வழங்கியதால் இலங்கை சர்வதேச அரங்கில் காப்பாற்றப்பட்டதாகப் பெருமையோடு கூறியிருந்தார்.

ஆனால் இந்த ஆண்டு மார்ச் மாதம் கோத்தாபய அரசாங்கம் 301 தீர்மானத்தில்இருந்து விலகியுள்ளது. அவ்வாறு விலகியதால் இலங்கைக்கு ஆபத்து ஏற்படும், போர்க்குற்ற விசாரணை தீவிரமாக இடம்பெறும், ஜோ பைடன் தலைமையிலான அமெரிக்காவின் புதிய நிர்வாகம் ஜெனீவா மனித உரிமை சபையில் மீண்டும் இணைந்து இலங்கைக்கு எதிராக மற்றுமொரு தீர்மானம் கொண்டு வரும் என்றெல்லாம் தற்போது சிங்கள எதிர்க்கட்சிகள் கூறுகின்றன. இதனை சில தமிழ் அரசியல் கட்சிகளும் நம்புகின்றன. சில ஆய்வாளர்களும் அப்படியே எழுதுகின்றனர்.

வெளிநாடுகளில் பணியாற்றும் சிங்கள இராஜதந்திரிகள், இந்த விவகாரத்தை ஈழத்தமிழர்களுக்குச் சார்பின்றிச் சிறப்பாகக் கையாள்வார்கள் என்ற நம்பிக்கை சிங்கள எதிர்க்கட்சிகளுக்கு உண்டு. கோத்தாபயவுக்கு எதிரான அரசியலுக்காக ஆபத்து என்று அவர்கள் சும்மா பேசக்கூடும். ஆனால் தமிழ் அரசியல்கட்சிகளும் அதனை அப்படியே நம்பி புவிசார் அரசியலில் என்ன நடக்கின்றது என்பதை அறியாமல், தமிழ் மக்களைத் தவறான வழிக்குக் கொண்டு செல்கின்றனர். அஜித் டோவாலின் கொழும்பு வருகையும் கொழும்பில் நடந்த கடல்சார் பாதுகாப்பு மாநாடும் இலங்கை குறித்த அமெரிக்க, இந்திய வெளியுறவுக் கொள்கைகளை புடம்போட்டுக் காண்பித்துள்ளன.

2009ஆம் ஆண்டு இந்தோ - பசுபிக் பிராந்திய நலன் சார்போட்டியைச் சாதமாகப் பயன்படுத்தி இராணுவ உதவிகள், தொழில்நுட்பங்களை பெற்று, இலங்கை எவ்வாறு ஈழப் போரை இல்லாதொழித்ததோ, அதே போன்று 2020இல் ஏற்பட்டுள்ள இலங்கையின் பொருளாதார பலவீனங்களை இந்த புவிசார் அரசியலின் போட்டிகளைப் பயன்படுத்தி இலங்கை மீட்டெடுக்கும் வாய்ப்புகளே அதிகம். அவ்வாறு மீட்டெடுக்கும் போது வடக்குக் கிழக்கிலும் பொருளாதார அபிவிருத்தி என்றொரு கதையையும் இலங்கை முன்வைக்கும். அதனை அமெரிக்க இந்திய அரசுகள் நம்பும்.

ஆனால் அங்கே எதுவும் நடக்காது. விடுதலைப்புலிகளை முற்றாக ஒழித்த பின்னரே நிரந்தர அரசியல் தீர்வு என்ற உறுதிமொழியைப் போன்றதுதான் இந்தப், பொருளாதார அபிவிருத்தி பற்றிய கதையும் இருக்குமென்று அமெரிக்க இந்திய அரசுகளுக்கும் புரியும்.

எனவே பட்டறிவுடன் ஈழத்தமிழர்கள் தமது அரசியலை முன்னெடுக்க வேண்டும். மாறாக சீனாவோடு இலங்கை நிற்கிறது, ஆகவே அமெரிக்கா ஈழத்தைப்பெற்றுத் தரும் என்ற கற்பனைக் கதைகளோடு அல்ல.

**யுத்தம் முடிந்தபிறகு பல்லாயிரக்கணக்கான புலம்பெயர்ந்தோர் ஊருக்கு வந்து திரும்பியிருக்கிறார்கள். அவர்களில் மிகச் சொற்பமானவர்களே இங்கே முதலீடுகளைச் செய்யும் ஆர்வத்தைக் கொண்டவர்கள்.**

# காலடியில் சொர்க்கம்...!

சிக்மலிங்கம் றெஜினோல்ட்



வல்லவனுக்குப் புல்லும் ஆயுதம்". "புதியவை காணும் கனவுடையோருக்குக் காலடியில் சொர்க்கம்" என்பதைக் கடந்த வாரம் சித்தங்கேணியில் கண்டேன். தன்னுடைய காலடியிலேயே (சொந்த ஊரிலேயே) சொர்க்கத்தின் வாசலைத் திறந்து வைத்திருக்கிறார் சண்முகநாதன் சுகந்தன்.

எல்லோரும் கனடாவுக்குப் புலம்பெயரத் துடித்துக் கொண்டிருக்கும் போது, கனடாவிலிருந்து சித்தங்கேணிக்குப் புலம்பெயர்ந்து வந்திருக்கிறார் சுகந்தன். அதுவும் குடும்பத்தோடு. இவ்வளவுக்கும் சுகந்தனுக்கு வயது 45 தான். பதின்ம பருவத்திலுள்ள பிள்ளைகள் இப்பொழுது அயலில் படிக்கிறார்கள். புலம்பெயர் வாழ்க்கையை விடச் சொந்த நாட்டில், பிறந்து வளர்ந்த ஊரில் நல்லபடி வாழமுடியும் என்ற நம்பிக்கையே தன்னை இங்கே ஊருக்கு வரப் பண்ணியது என்கிறார் சுகந்தன்.

ஊருக்குத் திரும்பிய சுகந்தன், உற்பத்தி சார் தொழில்களோடு உள்ளூர் உற்பத்திகளைச் சர்வதேசச் சந்தைக்கு ஏற்றுமதி செய்யும் நிறுவனமொன்றை சித்தங்கேணியில் நடத்திக் கொண்டிருக்கிறார். இப்பொழுது வெற்றிகரமாக இயங்கிக் கொண்டிருக்கி றது அவரது VSS நிறுவனம்.

யுத்த காலத்தில் நாட்டை விட்டு வெளியேறிய சுகந்தன், யுத்தம் முடிந்த பிறகு பலரையும்போல ஊருக்கு வந்து சென்றார். ஆனாலும் அவருடைய மனம் ஊரிலேயே தங்கி விட்டது. ஊரில் தங்கிய மனதை கனடாவிலிருந்து கொண்டே எப்படி இயக்குவது என்று சிந்தித்த போதுதான் அவருக்குச் சொர்க்கத்தின் வாசல்களைத் திறக்கும் நம்பிக்கை பிறந்தது. அந்த நம்பிக்கையின்படி நான்கு ஆண்டுகளுக்கு முன் ஒருநாள் மனைவி, பிள்ளைகளையும் அழைத்துக் கொண்டு ஊருக்கே வந்தார் சுகந்தன். இந்த முடிவை எடுக்கும்போது அவருக்குப் பல விதமான யோசனைகள் வந்தன. ஆனால் மீண்டும் செல்வது, என்னுடைய ஊருக்குத்தானே என்ற உணர்வே தெம்பைக் கொடுத்தது. தெரியாத தேசங்களில், பழகாத சூழலில் வாழப் பழகிய எங்களுக்கு பிறந்த வளர்ந்த ஊரில் வாழ முடியாதா? என்று யோசித்திருக்கிறார். அந்த எண்ணமே ஊருக்குத் திரும்பும் தெம்பைக் கொடுத்தது.

வந்தவர், ஊரிலே உறவினர்களால் கைவிடப்பட்டு, இடித்தழிக்கப்படவிருந்த நாற்சார் வீடொன்றை எடுத்து அதிலேயே ஒரு சிறிய தொழில் நிலையத்தை உருவாக்கினார். ஆனால், அது அவர் எதிர்பார்த்ததைப்போல உடனடியாக வெற்றியைக் கொடுக்கவில்லை. அநேகமான புதுமுயற்சியா ளர்களுக்கு ஏற்படும் நெருக்கடிகளும் சவால்களும் சுதந்த னுக்கும் ஏற்பட்டன. என்றாலும் வெற்றி பெற வேண்டும் என்ற வேட்கையுடையோர் சளைத்து விடுவதில்லை அல்லவா.

முதலில் பனைசார் உற்பத்திகளைச் செய்து அவற்றை ஏற்றுமதி செய்யத் தொடங்கினார். பனை வெல்லம், பனம்பானம், பனம்பொருள்களினால் செய்யப்படும் புழங்கு பொருள்கள் என்று தொடங்கி, அப்படியே பனஞ்சாராயம் வரை இது வளர்ச்சியடைந்தது. இதற்காக பனைசார் நிறுவனங்களோடு தொடர்பு கொண்ட சுகந்தன், அவற்றைப் புதிய சந்தை வாய்ப்புகளுக்குரியவாறு உற்பத்திகளைச் செய்யத் தூண்டினார். சமவேளையில் உள்ளூரிலும் சுயாதீனமாக வெவ்வேறு தொழில் செய்வோரை அணுகி அவர்களைப் புதிய முறையிலான உற்பத்திகளை மேற்கொள்ள வைத்தார்.

கூடவே சுய உற்பத்திகளில் ஈடுபட்டிருக்கும் முயற்சியாளர்களுடன் ஒரு வலையமைப்பை ஏற்படுத்தினார். அது அவருக்கு அடுத்த கட்ட வளர்ச்சியைக் கொடுத்தது.

தங்களுடைய உற்பத்திகளுக்கான சந்தை வாய்ப்பைப் பற்றி யோசித்துக் கொண்டிருந்தோருக்கும் இது வாய்ப்பாகியது. இப்பொழுது ஏனைய பல உற்பத்தியாளர்களுக்கான சந்தை வாய்ப்பை வழங்கும் ஏற்றுமதி நிறுவனமாகவும் வளர்ச்சியடைந்துள்ளது சுகந்தனின் நிறுவனம்.

அந்த நிறுவனம் மூலமாக ஏராளம் பொருள்கள் பல நாடுகளுக்கும் ஏற்றுமதி செய்யப்படுகின்றன. மூலிகைகள், உணவுப் பொருள்கள், கைவினைப் பொருள்கள், அலங்காரப்பொருள்கள், புழங்கு




பொருள்கள், குடிவகைகள் என்று நீளும் பட்டியல் இது. இதில் இன்னும் புதிது புதிதாகப் பலதும் சேரக்கூடிய வாய்ப்புகளுண்டு. நான் பார்க்கும்போது ஆச்சரியமளித்ததில் ஒன்று, மண்பானைகளின் ஏற்றுமதி. நாங்கள் சாதாரணமாகக் காண்கின்ற, வாங்குகின்ற மண்பானைகளை ஐரோப்பாவுக்கும் அமெரிக்க, ஆஸ்திரிய நாடுகளுக்கும் ஏற்றவாறு வடிவமைத்திருக்கிறார் சுகந்தன். அதிகமாக ஒன்றுமில்லை. அதே மண்பானைகளில் பொங்கல் பண்டிகைகளுக்கு ஏற்றமாதிரி ஓவியங்களைத் தீட்டிச் சந்தை மதிப்பு (சந்தைக் கவர்ச்சி) ஏற்படுத்தப்பட்டுள்ளது. அதைப் பொதி செய்து அனுப்புகிறார்கள். இதில் பலருக்கான வேலை வாய்ப்புகளும் உண்டு.

இங்கே நாம் கவனிக்க வேண்டியது, நாம் எங்களுடைய சூழலிலிருந்து எதையும் செய்யலாம் என்பதையே. புதிதாக்கும் கற்பனைத்திறனே அதற்குத் தேவை. சாதனையாளர்களின் வெற்றியில் எப்போதும் புதிதாக்கும் உணர்திறனே அடிப்படையாக இருப்பதுண்டு. அதைக் கண்டடைவதே முதல் வெற்றியாகும். உங்களிடம் எவ்வளவு சொத்து இருக்கிறது? எவ்வளவு பணம் இருக்கிறது என்பது மதிப்பைக் கொடுப்பதல்ல. உங்களின் மனதிலும் மூளையிலும் எப்படியான சிந்தனையும் நம்பிக்கையும் உள்ளது என்பதே முக்கியம். அதற்கே மதிப்பு அதிகம். சுகந்தனின் புத்தாக்கத் திறன்களே அவரைச் சொந்த ஊரிலேயே சொர்க்கத்தின் வாசல்களைத் திறக்கச் செய்திருக்கிறது. இப்பொழுது அவருடைய கைகளில் பல உற்பத்தி நிறுவனங்கள். அவரோடு தொடர்பில் பல உற்பத்தியாளர்கள். இது ஒரு முன்மாதிரியான சாதனை.




எங்களுடைய சூழலில் பல அரசியல் தரப்புகள் உள்ளன. பொருளாதர்ரத் துறையில் படித்தவர்கள், பயிற்சி பெற்ற அதிகாரிகள், திட்டமிடல் பணிப்பாளர்கள், சிறுகைத் தொழில் முயற்சிக்கான அரச பணிமனைகள் எனப் பல தரப்புகள் உண்டு.

ஆனால், சமூகத்தில் உற்பத்தி நடவடிக்கைகளும் உற்பத்திசார் எண்ணப்பாங்கும் மிக மிகக்குறைவு. இதனால் வேலையில்லாப் பிரச்சினை தொடக்கம் பொருளாதாரப் பிரச்சினைகள் வரையில் ஏராளம் பிரச்சினைகள் சூழ வாழ வேண்டியிருக்கிறது. சரியான வழிப்படுத்துநர்கள் இல்லை என்பதே இதற்குப் பிரதான காரணம்.

யுத்தம் முடிந்த பிறகு பல்லாயிரக்கணக்கான புலம்பெயர்ந்தோர் ஊருக்கு வந்து திரும்பியிருக்கிறார்கள். அவர்களில் மிகச் சொற்பமானவர்களே இங்கே முதலீடுகளைச் செய்யும் ஆர்வத்தைக் கொண்டவர்கள். அவர்களிலும் அநேகர் செய்தது, பிரமாண்டமான அளவில் திருமண மண்டபங்களைக் கட்டியது. எரிபொருள் நிரப்பு நிலையங்களைத் திறந்தது. காணிகளை வாங்கித் தென்னைகளையும் மரமுந்திரியையும் நட்டது. கோயில்களைப் பெருப்பித்தது. மிகச் சிலரே சுகந்தனைப் போலச் சற்று வித்தியாசமான முறையிலான தொழில் முயற்சிகளிலும் உற்பத்தித்துறையிலும் ஈடுபட்டு, தாமும் வாழ்ந்து கொண்டு பிறரையும் வாழ வைக்கும் வகையில் தொழில் வாய்ப்புகளையும் தொழில் ஊக்கத்தையும் கொடுக்கின்றனர்.

இப்பொழுது நாம் கவனிக்க வேண்டியது, இவர்களைப் போன்றவர்களை முன்மாதிரியாகக் கொண்ட வேலைதிட்டத்தைப் பற்றிச் சிந்திப்பதேயாகும். அப்படிச் செய்யும்போதே நம்முடைய பொருளாதார நிலையை உயர்த்திக் கொள்ளலாம். அதற்கு என்ன செய்யலாம்? அதை எப்படிச் செயற்படுத்தலாம் என்பதிலேயே நம்முடைய கவனம் குவிவது அவசியம். அதை விட்டுவிட்டு அரசாங்கத்தைக் குறை சொல்வதாலும் பொருத்தமற்ற முதலீடுகளா லும் பயனேதும் விளையாது. சொந்த ஊருக்குத் திரும்பி வாழ விரும்புவோருக்கு இவ்வாறானவர்களின் அறிமுகங்கள் பயனூக்கத்தைத் தரும்.

பஞ்சமும் பசியும் ஆட்டிப் படைத்த காலத்தில் "திரைகடலோடியும் திரவியம் தேடு" என்று சொன்னார்கள் நம்முன்னோர். அப்படி பிறவூர்களுக்கும் பிற தேசங்களுக்கும் போனால்தான் பிழைத்துக் கொள்ளலாம். இல்லையென்றால் பசியே கொன்றுவிடும் என்ற நிலை. அப்படித் திரைகடலோடியும் பிழைக்கச் சென்றவர்களின் துயர வரலாற்றைச் சொல்லி மாளாது. பிழைத்துக் கொள்வதற்காகப் பிறதேசங்களுக்குச் சென்ற எல்லோரும் சிறப்பாக வாழ்ந்தனர் எனச் சொல்ல முடியாது.

நம்முடைய புலம்பெயர்ந்தோரின் கதைகளைக் கேட்டால் நமக்கும் கண்ணீர் பெருகும். அந்த அளவுக்கு வலியுடையது. அவ்வளவு வலிகளையும் தாங்கிக் கொண்டே அவர்கள் தங்களை அங்கெல்லாம் வேர் கொள்ள வைத்தனர். இன்னும் அவர்களுக்கு அந்தச் சூழல் முழுதாக இசைவானதென்றில்லை. இதனால்தான் "சொர்க்கமே என்றாலும் அது நம்மூரைப் போல வருமா..."? என்று இளையராஜாவின் பாடலைக் கேட்கும்போதெல்லாம் ஊரை நினைத்துப் பதறுகிறார்கள். ஒரு சிறு இடைவெளி கிடைத்தால் ஊருக்கு ஓடி வரத் துடிக்கிறார்கள். அப்படி வரத் துடிப்போ ருக்கான சொர்க்க வாசல் நம் மண்ணில் - சொந்த ஊரில் உண்டு. அதைக் காணும் கண்கள் தான் வேண்டும்.

# சூகியின் இரண்டாவது இன்னிங்ஸ்!



○ ஆர். பிரகாஷ்

அண்மையில் நடைபெற்ற மியன்மார் நாடாளுமன்றத் தேர்தலில் ஆங்சான் சூகி தலைமையிலான 'நஷனல் லீக் போ டெமோகிரஷி' கட்சி பெருவெற்றி பெற்றுள்ளது. 476 தொகுதிகளுக்கு இடம்பெற்ற அந்தத் தேர்தலில் 322 தொகுதிகளைக் கைப்பற்றும் தரப்புக்கு வெற்றி என்பது விதிமுறை. சூகியின் கட்சி 346 தொகுதிகளைக் கைப்பற்றி மீண்டும் இமாலய வெற்றியைப் பெற்றிருக்கின்றது. மியன்மார் மக்கள் தம்மை ஆளும்படி ஆங்சான் சூகிக்கு மீண்டும் ஆணையிட்டுள்ளனர். மியன்மாரில் இருக்கும் இராணுவக் கட்டமைப்பு மற்றும் சிந்தாந்தங்களுக்கு முடிவுகட்டி அந்த நாட்டை மீண்டும் ஜனநாயகம் நோக்கி சூகி உந்தித் தள்ளுவாரா என்பதுதான் தற்போது ஒட்டுமொத்த மியன்மார் மக்களிடமும் உள்ள எதிர்பார்ப்பு.

உலக்இலா

### இராணுவ ஆட்சிக்கு முற்றுப்புள்ளி

மியன்மாரில் கடந்த 50 ஆண்டுகளாக நடைபெற்ற இராணுவ ஆட்சிக்கு 2015ஆம் ஆண்டு முற்றுப்புள்ளி வைத்தார் சூகி. அந்த ஜனநாயகத் தேர்தலில் சூகியின் கட்சி பெருவெற்றி பெற்றது. இதையடுத்து சூகியை மியன்மாரின் மீட்பராக அதிலும் குறிப்பாக சிறுபான்மை மக்களின் மீட்பராக உலகம் கருதியது. மியன்மார் இராணுவத்தால் மியன்மாரின் ரக்கினே மாநிலத்தில் ரோஹிங்ய மக்களுக்கு எதிராக மேற்கொள்ளப்படும் அடக்குமுறைகள் சூகியால் முடிவுக்குக் கொண்டுவரப்படும் என்று எதிர்பார்க்கப்பட்டது. ரோஹிங்யர்களும் சூகியின் வெற்றியை அதிகமாகவே கொண்டாடினார்கள். அவரை நம்பினார்கள்.



### முதுகில் குத்திய சூகி

ஆனால்நடந்ததுஎன்னமோ தலைகீழாகத்தான். சூகியின் கையில் ஆட்சி இருந்த போதிலும் அந்த நாட்டின் பாதுகாப்பு உள்ளிட்ட பல முக்கிய துறைகள் இன்னும் இராணுவக் கட்டுப்பாட்டின் கீழ்தான் உள்ளன. சூகியின் ஆட்சியில்தான் ரக்கினே மாநிலத்தில் ரோஹிங்யர்களுக்கு எதிராக பெரும் இராணுவ நடவடிக்கையை மியன்மார் இராணுவம் ஆரம்பித்தது. இதையடுத்து 7 லட்சத்து 50 ஆயிரம் ரோஹிங்யர்கள் மியன்மாரை விட்டு வெளியேறி அருகில் உள்ள பங்களாதேஷில் அரசியல் தஞ்சம் புகுந்தனர். இஸ்லாமிய நாடான பங்களாதேஷ் முஸ்லிம்களான ரோஹிங்யர்களை வரவேற்று தஞ்சம் கொடுத்தது.

சூகியின் தூண்டுதலால் இந்த இராணுவ நடவடிக்கைகள் இடம் பெறவில்லை. ஆனால் இதற்கு எதிரான நடவடிக்கைகளை சூகி கண்டிக்காமல், கட்டுப்படுத்தாமல் கள்ள மௌனம் காத்தார். இதையடுத்து அவர் மீதான சர்வதேச பிம்பம் அப்படியே தலைகீழாக மாறியது. சூகிக்கு வழங்கிய கௌரவப் பட்டங்களை பல்கலைக் கழகங்கள் திரும்பப் பெற்றுக்கொண்டன.

### 2020 தேர்தல்

எனினும், 2020 தேர்தலில் சூகி வெற்றிபெற வேண்டும் என்றுதான் பலரும் விரும்பினார்கள். சிறுபான்மை மக்களின் விருப்பமும் அதுதான். மேற்கொண்டு இராணுவ நடவடிக்கைகளையும் நெருக்குவாரங்களையும் எதிர்கொள்ளாமல் இருக்க சூகியை விட்டால் வேறு தெரிவுகள் இல்லை என்பது அவர்களின் கருத்து. இதனால்தான் எந்த மக்களுக்கு எதிராக சூகி கள்ளமௌனம் காத்தாரோ அந்த மக்களே சூகிக்கு வாக்களித்துள்ளனர்.

### சூகி மீதான எதிர்பார்ப்பு

தனது இரண்டாவது ஆட்சிக் காலத்தை மிகப் பெரிய வெற்றியுடன் சூகி தொடங்கியிருக்கும் நேரத்தில் சவாலான கேள்விகளை அவர் எதிர்கொள்ள வேண்டிய நிலை எழுந்துள்ளது. வெறுமனே இராணுவத்துக்கும் மக்களுக்கும் இடையிலான பாலமாக அவர் இருக்கப் போகிறாரா, அல்லது நாட்டை முழுமையான ஜனநாயகத்தை நோக்கி அழைத்துச்செல்லப் போகிறாரா என்ற கேள்வி எழுந்துள்ளது.

மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட தலைவர் என்ற முறையில் அந்த நாட்டில் நடந்துகொண்டிருக்கும் இன அழிப்புத் தொடர்பான குற்றச்சாட்டுகளையும் அவர் எதிர்கொண்டு சிறுபான்மையின மக்களையும் அரவணைத்துச் செல்லும் தலைவராக அவர் மாற வேண்டும். அதுவே சூகி தொடர்பான சர்வதேச எதிர்பார்ப்புமாகும். ■



# வாய்ப்பில்லை ரஜினி!

○ மயூ

நான் வெற்றி பெற்றால் அது மக்களின் வெற்றி, நான் தோல்வியுற்றால் அது மக்களின் தோல்வி "என்ற கொக்கியுடன் தனது அரசியல் பிரவேச அறிவிப்பை வெளியிட்டுள்ளார் தென்னிந்திய நடிகர் சுப்பர்ஸ்டார் ரஜினிகாந்த். அடிக்கடி "சிஸ்டம் சரியில்லை என்று கூறும் ரஜினி, கட்சி ஆரம்பித்திருக்கும் "சிஸ்டமும்" சரியில்லை என்றே தோன்றுகின்றது.

நடிகர் ரஜினியின் அரசியல் பிரவேசம் இன்று நேற்றல்ல, 1992 ஆம் ஆண்டில் இருந்தே எதிர்பார்க்கப்பட்டு வந்தது. ஆனால் அரசியல் பிரவேசத்தை வாய்ப் பேச்சோடு நிறுத்திக் கொண்டார் ரஜினி. எதிர்பார்த்து, எதிர்பார்த்து சலித்துப் போன அவரது ரசிகர்களும், ரஜினியின் அரசியல் பிரவேசத்தை மறந்திருந்தனர்.

சில மாதங்களுக்கு முன்னர் ரஜினியின் பெயரில் வெளியான அறிக்கை ஒன்று மீண்டும் ரஜினி விவகாரத்தை கிளறியிருந்தது. ரஜினியின் உடல் நிலையைத் தொடர்புபடுத்தி அவரது பெயரில் வெளியான அறிக்கை, ரஜினி இனிமேல் அரசியலுக்கு வரமாட்டார் என்பதாக இருந்தது. உடனடியாக அந்த அறிக்கையை மறுத்திருந்தார் ரஜினி, ஆனால் அந்த அறிக்கையில் இருக்கின்ற தனது உடல் நிலைபற்றிய தகவல்கள் உண்மை என்றார். இம்முறை தேர்தலில் போட்டியிட்டாலே வாய்ப்பு என்ற நிலைமையில் ரஜினியின் உடல்நிலை, இப்போதைய கொரோனா நிலைமை என்பவற்றால் அவரது அரசியல் கனவு முடிந்துவிட்டது என்றே கூறப்பட்டது. இப்போது, திடீரென கட்சி ஆரம்பிக்கும் முடிவையும், தேர்தலில் போட்டியிடும் திட்டத்தையும் வெளியிட்டிருக்கிறார் ரஜினி. "அரசியல் மாற்றம் ரொம்பக் கட்டாயம். அது காலத்தின் தேவை. அது இப்போது இல்லைன்னா... எப்பவும் இல்ல. எல்லாத்தையும் மாத்தணும். தமிழகத்தின் தலையெழுத்தை மாத்த போற நாள் வந்தாச்சு!" என்று கூறியிருக்கும் அவர், எதிர்வரும் ஜனவரி மாதம் கட்சி ஆரம்பம், எதிர்வரும் சட்ட மன்றத் தேர்தலில் களமிறக்கம் என்று திட்டங்களை வரிசைப் படுத்தியிருக்கின்றார்.

சரி, தேர்தல் களம் ரஜினிக்குச் சாதகமாக இருக்குமா? இல்லை என்றே தோன்றுகின்றது. ரஜினி ஆரம்பத்தில் இருந்தே பாரதிய ஜனதாக் கட்சியுடன் இணைத்துப் பேசப்படுகின்றார். தமிழ் நாட்டில் காலூன்ற முடியாது தவிக்கும் பா.ஜ.க. ரஜினியை வைத்துக் காய்நகர்த்துகின்றது என்ற குற்றச்சாட்டுப் பரவலாக இருக்கின்றது. ரஜினி அதை மறுத்துவந்தாலும் இப்போது அவர் செய்திருக்கும் காரியம் அதை உறுதிப்படுத்துவதாகவே இருக்கின்றது.

ரஜினி கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளராக அர்ஜுனமூர்த்தி என்பவரையும், மேற்பார்வையாளராக தமிழருவி மணியன் என்பரையும் நியமித்திருக்கின்றார்.

அர்ஜுனமூர்த்தி, முரசொலி மாறனின் அரசியல் ஆலோசகராக இருந்தவர். முரசொலி மாறனின் மறைவுக்குப் பின்னர், தி.மு.கவிலிருந்து விலகிய இவர், தன்னை பா.ஜ.கவில் இணைத்துக்கொண்டார். பா.ஜ.கவின் அறிவுசார் பிரிவின் மாநிலத் தலைவராகப் பதவி வகித்துவந்தார். இப்போது நடிகர் ரஜினிகாந்தின் டுவிட்டர் பக்கம் உட்பட அவரின் அனைத்து தொழில்நுட்பப் பிரிவுகளையும் இவர் தலைமையிலான குழுதான் கவனிக்கின்றது. டெல்லி, தமிழக பா.ஜ.க. தலைமையுடன் நெருக்கமாக இருந்த இவர், ரஜினியின் புதிய கட்சியில் பொறுப்பேற்றதால், பா.ஜ.கவின் அனைத்துப் பொறுப்புகளிலிருந்தும் விலகுவதா கடிதம் மூலம் தெரிவித்திருந்தார்.

அதை உடனடியாகப் பா.ஜ.கவும் ஏற்றுக் கொண்டிருக்கின்றது. தமிழருவி மணியன் 'காந்திய மக்கள் இயக்கம்' எனும் இயக்கத்தைத் தொடங்கி, பின்னர் அதை அரசியல் கட்சியாக மாற்றியிருந்தார். 2014ஆம் ஆண்டு நாடாளுமன்றத் தேர்தலில், பா.ஜ.க. தலைமையிலான தேசிய ஜனநாயகக் கூட்டணியை ஆதரித்தார். 2016ஆம் ஆண்டு சட்டமன்றத் தேர்தலில் தனித்துப் போட்டியிட்டபோதும், எதிர்பார்த்த முடிவுகள் கிடைக்காததால் அரசியலில் இருந்து ஒதுங்கியிருந்தார். இப்போது ரஜினி ஆரம்பிக்கும் கட்சியின் மேற்பார்வையாளராக நியமிக்கப்பட்டிருக்கின்றார்.

தமிழகத்தில் "தாமரை" (பா.ஜ.க.) மலரக்கூடாது என்ற விடயத்தில் மக்களும், கட்சிகளும் ஒத்த போக்கில் இருக்கின்றன. பா.ஜ.கவினர் கடந்த தேர்தல்களில் தலைகீழாக நின்றும் ஒன்றும் கிடைக்கவில்லை. நிலைமை இப்படியிருக்க பா.ஜ.கவினருடன் இருந்தவர்களைக் கூட்டுச் சேர்த்துக் கொண்டு, புதிய கட்சி ஆரம்பித்து பதவியைப் பிடிப்பது என்பது பெரும் சவாலே. இவையெல்லாம் தெரிந்தும் ரஜினி ஏன் பா.ஜ.க. சார்ந்தவர்களோடு ஒட்டிக் கொண்டு விசப் பரீட்சையில் இறங்குகிறார் என்பது புதிர்தான்.

கட்சி ஆரம்பிக்க முன்னரே ரஜினி மீது சமூக வலைத்தளங்களில் தாக்குதல்கள் தொடங்கிவிட்டன. பா.ஜ.கவுடன் தொடர்புபடுத்திக் கருத்திடல்களும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. அதேநேரம் பா.ஜ.க. விடயத்தை ஏனைய கட்சிகள் கையிலெடுக்கும் என்பதும் உறுதி. இவை ரஜினியின் தேர்தல் முடிவுகளில் தாக்கம் ஏற்படுத்தும் என்பதை மறுக்கமுடியாது.

"நான் எப்போ வருவேன் எப்படி வருவேன்னு தெரியாது... ஆனா வரவேண்டிய நேரத்துல கரெக்டா வருவேன்..." என்று கூறிய ரஜினி இப்போது வந்திருப்பதே மிகத் தாமதம்தான். அதிலும் வரும்போதே கடும் எதிர்ப்புகளைச் சம்பாதித்திருக்கின்றார். அதனால் அவரது எதிர்பார்ப்புக்கள் நிறைவேறுவதற்கான வாய்ப்பு மிகக் குறைவாகவே இருக்கின்றன. ஆக தமிழ்நாட்டு வாக்குகள் சிதறடிக்கப்படவுள்ளனவே தவிர, ரஜினிக்கு "வாய்ப்பில்லை ராஜா "என்றுதான் கூறத் தோன்றுகின்றது. ■


# ஆள்கிறான் தமிழன்!




○ ஆர்.லயனல்

இந்தியக் கிரிக்கெட்டில் அறிமுகமாகியுள்ள நடராஜன்தான் தற்போது சமூக வலைத்தளவாசிகள் அனைவரினதும் நாயகன். இந்திய அணியின் பரம எதிரிகள்கூட அவனைத் தூக்கி வைத்துக் கொண்டாட ஆரம்பித்துள்ளனர்.
பொதுவாகவே தன் கடின உழைப்பால் முன்னேறிவரும் ஒருவன் இந்த உலகத்தால் அங்கீகரிக்கப்படுவதற்கு முன்னர் படும்பாடு துன்பத்திலும் பெருந்துன்பம். நடராஜனும் இதற்கு விதிவிலக்கல்ல.
இம்முறை ஐ.பி.எல் தொடர்தான் அவனது ஒட்டுமொத்த வாழ்க்கையையும் அவ்வாறு மாற்றி வைத்துள்ளது. ஏகப்பட்ட திருப்பங்களைக் கொடுத்துள்ளது. நடந்து முடிந்த ஐ.பி.எல்லில் தனது ஜோக்கர் பந்துவீச்சுக்களால் பலரையும் கவர்ந்தார் நடராஜன். ஆறு யோக்கர்களையும் ஆறு விதமாக வீசி பலரையும் வியக்கவைத்தார்.
இதையடுத்து அவரை நம்பிக்கை வீரராக வளர்த்தது ஹைதராபாத். இந்திய அணியிலும் இடம்கொடுக்கப்பட வேண்டும் என்று பலரும் வலியுறுத்தினர். உடனடியாக ஆஸ்திரேலியத் தொடரில் அவருக்கு வாய்ப்பு வழங்கப்பட்டது.
ஒருநாள் தொடரின் முதலிரு ஆட்டங்களிலும் நடராஜன் களமிறக்கப்படவில்லை. இந்த இரு ஆட்டங்களிலும் இந்தியா தோல்வியடைந்து தொடரை இழந்தது. அதன் பின்னர் மூன்றாவது ஆட்டத்தில் நடராஜன் சேர்க்கப்பட்டார்.
அந்த ஆட்டத்தில் லபுக்ஸ்சேனின் இலக்கை வீழ்த்தி திருப்பத்தை ஏற்படுத்தினார். கடைசிக்கட்டத்தில் அகரையும் வீழ்த்தினார். இந்த ஆட்டத்தில் இந்தியா வென்றது. நடராஜன் சர்வதேச மட்டத்தில் பேசுபொருள் ஆனார்.
நேற்றுமுன்தினம் ஆரம்பமான ரி20 தொடரிலும் நடராஜன் அணிக்குள் சேர்க்கப்பட்டார். இந்த ஆட்டத்தில் ஷோட், மக்ஸ்வெல், ஸ்ராக் ஆகியோரின் இலக்குகளை வீழ்த்தினார் நடராஜன். ஆக, இந்திய அணியின் சிறந்த பந்துவீச்சாளர்களில் ஒருவராக நடராஜன் உருவாகி வருகின்றார்.
ஏழ்மையிலும் வறுமையிலும் உழலும் ஒருவன் தன் திறமைகொண்டு மேலெழுந்து வந்தால் யார்தான் கொண்டாட மாட்டார்கள். நடராஜன் விடயத்தில் இலங்கை, இந்திய ரசிகர்கள் என்ற பேதம் இல்லை. அவன் பொதுமைப்பட்டவனாக ஆகிவிட்டான்.

**'ஆளப்போறான் அல்ல, ஆள்கிறான் தமிழன்'**



# யாழ். மாநகர சபையின் வரலாறு

பாகம் 24

(1906 - 1949)

○ ந.பரமேஸ்வரன்

மார்ச் 1947
சினிமா தியேட்டர்களில் 20வீத தமாஷா வரி அறவிடுவது என தீர்மானிக்கப்பட்டது.

ஒகஸ்ட் 1947
இலங்கையின் தேசியக்கொடியாக சிங்கக்கொடியை ஏற்றுக் கொள்ளக்கூடாது எனத் தலைவர் பொன்னம்பலம், தமிழ் அமைச்சரான சுந்தரலிங்கத்துக்கு தந்தி அனுப்பினார்.

டிசம்பர் 1948
யாழ்ப்பாண மாநகரசபைக்கான முதலாவது தேர்தல் நடைபெற்றது. இந்தத் தேர்தலில் முதல் தடவையாக முஸ்லிம் பெண்களும் வாக்களித்தனர். முஸ்லிம் பெண்கள் வாக்களிப்பதற்காக முஸ்லிம் பிரதேச வாக்குச்சாவடிகளில் பெண்களும் தேர்தல் கடமையில் ஈடுபடுத்தப்பட்டனர்.
இந்தத் தேர்தலில் தமிழ்க் காங்கிரஸ் பத்து ஆசனங்களைப்பெற்றுக்கொண்டது. ஐந்து சுயேச்சை உறுப்பினர்களும், தாழ்த்தப்பட்ட சமூகத்தைச் சேர்ந்த உறுப்பினர் ஒருவரும் தெரிவு செய்யப்பட்டனர். சாம் சபாபதி, R.R.நல்லையா, சி.பொன்னம் பலம், காசிப்பிள்ளை,S.விசுவலிங்கம், S.துரைராஜா, P.M.ஜோன், D.ஜேம்ஸ், S.R.தளையசிங்கம், J.செபஸ்தியாம்பிள்ளை, S.S.நவரத்தினம், S.M.அப்துல் காதர், புறூடி, ஹிச்கொக், காதி அபூபக்கர் ஆகியோர் உறுப்பினர்களாகத் தெரிவு செய்யப்பட்டனர்.
சாம் சபாபதி யாழ்ப்பாண மாநகரத்தின் முதலாவது முதல்வராக தெரிவு செய்யப்பட்டார். காதி அபூபக்கர் பதில் முதல்வராகத் தெரிவு செய்யப்பட்டார் .
**15.01.1949** அன்று யாழ்ப்பாண மாநகரசபையின் முதலாவது கூட்டம் நடைபெற்றது. இந்தக்கூட்டத்தில் மூன்று சபைகளும் தெரிவு செய்யப்பட்டன; அவையாவன நிதிக்குழு, சுகாதாரக்குழு,தொழிலாளர் நலன்பேணும் குழு.
நிதிக்குழு உறுப்பினர்களாக சாம் சபாபதி, R.R.நல்லையா, சி.பொன்னம்பலம், .காசிப்பிள்ளை,S.விசுவலிங்கம், S.துரைராஜா ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர்.
சுகாதாரக்குழு உறுப்பினர்களாக P.M.ஜோன், D.ஜேம்ஸ், S.R.தளையசிங்கம், J.செபஸ்தியாம்பிள்ளை,S.S.நவரத்தினம், S.M.அப்துல் காதர் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர்.
தொழிலாளர் நலன்பேணும் குழு உறுப்பினர்களாக சாம் சபாபதி, P.M.ஜோன், D.ஜேம்ஸ், S.துரைராஜா, ஹிச்கொக், புறூடி தெரிவு செய்யப்பட்டனர்.

(முற்றும்)

# நெட்டிசன்களிடம் சிக்கிய சஞ்சய்!



ஜடேஜா, பாண்டியா தொடர்பான கருத்துக்களுக்காக பிரபல வர்ணனையாளர் சஞ்சய் மஞ்ரேக்கரை பாடாய்ப்படுத்தி வருகின்றனர் நெட்டிசன்கள். சில நாட்களுக்கு முன்பு சஞ்சய் மஞ்சரேக்கர் வழங்கிய பேட்டியில், 'நான் இவ்வளவு வருடங்களாக பெற்ற அனுபவத்தை, கொள்கையை வைத்துத்தான் எனது சிந்தனைகளும் அணித் தேர்வும் இருக்கும். துடுப்பாட்டமோ, பந்துவீச்சோ ஏதாவது ஒரு விடயத்தில் நிபுணத்துவம் பெற்றவர்கள் இருந்தால் அவர்களை என் அணியில் தேர்வு செய்வேன்.
எனக்கு ஜடேஜாவுடன் எந்தத் தனிப்பட்ட முரண்பாடும் இல்லை. ஆனால், ஒருநாள் போட்டியில் அவரைப் போன்ற வீரர்கள் மீது எனக்கு எவ்விதப் பிடிப்பும் இல்லை. ஏன் ஹர்திக் பாண்டியாகூட என் அணியில் இருக்க மாட்டார். அவர்களெல்லாம் அணிக்கு மாயையான ஒரு மதிப்பையே கொண்டு வருகிறார்கள் என்று தெரிவித்திருந்தார்.
இதுபோதும்தானே நெட்டிசன்களுக்கு. மஞ்ரேக்கரெல்லாம் ஒரு விமர்சகரே இல்லை என்ற மட்டத்துக்குச் சென்று அவரைப் படுத்தியெடுத்து வருகின்றனர்.
நெட்டிசன்களிடம் சிக்குவது மஞ்ரேக்கருக்கு இது புதிதல்ல. ஒருதலைப்பட்சமாக வர்ணனை செய்கிறார் என்று நீண்டகாலமாகவே அவர் மீது முறைப்பாடு எழுந்துள்ளது. மேலும் அவர் விமர்சித்திருக்கும் வீரர்கள் அடுத்த போட்டியிலேயே சிறப்பாகச் செயல்படுவதும், அதை நெட்டிசன்களில் சிலர் அவரிடம் சுட்டிக்காட்டி மூக்குடைக்க முயல்வதும் வழமையான ஒன்றுதான்.

**'எப்போதாவது அசிங்கப்பட்டால் பரவாயில்லை. எப்பவுமே அசிங்கப்பட்டால் ?'**

# கொரோனா – சங்கார சங்கற்பம்



கொரோனாவே கொரோனாவே கொடிய அரக்கனே
கரந்துறைந்து கொல்லும் கயமைக் குணத்தோனே
பரந்து பார் வாழும் எம்மவரைக் கவர்ந்திடவே
விரைந்து நீ நுழையவோ விறல்மிகு எம் உடலிலே

வீரியம் உன்னிடம் தான் எனவெண்ணிப் பீத்தாதே
மூவிரு திங்கள் முழுதாய் முடியுமுன்னே
காரியம் முடிப்பர் எம்மவர்!
காலடியில் உனை அரைப்பர்!
வீறிட்டு நீ அலற விதைப்பர் உன் மீது விடமிருந்து!
முன்னரும் படையெடுத்து மாண்டது உன்குலம் மொத்தமாய்
பின்னரும் ஏனிந்தப் பேய்வெறியும் பேதமையும் உனக்கு
நுண்மதியும் நிறைதிறனும் மிக்க மானுடம் தன்நிலை விட்டு
உன்னடியில் வீழவோ! மூடனே!
ஓடிச்சேர் உன்னுலகு! உயிர்ப்பிச்சையிதோ!

*சி.கனகசிங்கம்*
*தொல்புரம்*

**தவிர்க்கமுடியாத காரணங்களால் இம்முறையும் சஞ்சீவி வார இதழின் பக்கங்களை குறைப்புச் செய்ய வேண்டி ஏற்பட்டதால் வழமையான பல அம்சங்கள் இடம்பெறவில்லை. வழமைபோல் அடுத்த வாரம் அவை பிரசுரமாகும்.**

*(ஆ-ர்)*



# கொரோனாவை அழிக்கும் வல்லமை மஞ்சளுக்கு உண்டா?

வாசகர்களுக்கு மருத்துவம் தொடர்பில் ஏற்படும் சந்தேகங்களுக்கு பதிலளிக்கிறார்:






**மருத்துவர் ப்ரியா கமலசிங்கம்**
(யாழ்.போதனா மருத்துவமனை, மாவட்ட பொது மருத்துவமனை, சிலாபம்)

**கேள்வி: மக்கள் இன்றைய நாள்களில் தொற்று நீக்கியாக மஞ்சளைப் பயன்படுத்த முனைகின்றார்கள். மஞ்சளை எல்லாவற்றிலும் சிறந்த கிருமித் தொற்று நீக்கி எனக் கருதுவது சரியா?**

த.பிரேமிலன், கிளிநொச்சி.

பதில்: எம்மவர்களின் செயல்கள், செயற்பாடுகளில் மஞ்சள் என்பது மனதோடு கலந்த விடயம். ஒரு விடயத்தைச் செய்யும்போது ஏன் செய்கிறோம்? எதற்குச் செய்கிறோம்? எப்படிச் செய்கிறோம் ? என்று ஆராய்ந்தாலே பல சிக்கல்கள் தீர்ந்துவிடும். மஞ்சளுக்கு வைரசுகளைக் கொல்லும் ஆற்றல் அறவே இல்லை. அதுவும் இங்கே உலகத்தையே உலுக்கிக் கொண்டிருக்கும் கொரோனா வைரசுக்கெதிராக போராடும் ஆற்றல் மஞ்சளுக்குக் கிடையாது என்பதே அறிவியல் உண்மை. மஞ்சளுக்கு பக்ரிறீயாக்களைக் கொல்லும் ஆற்றல் மட்டுமே உண்டு. அதற்கும் அதனை சரியான விகிதாசாரத்தில் கலந்து பயன்படுத்தினால் மட்டுமே பயனுண்டு.

மஞ்சளை உட்கொள்வதால் உட் காயங்களுக்கு எதிரான பாதுகாப்பு கிடைப்பது உண்மை. anti offammatory effectஎன்று அதனைக் கூறுவோம். ஆனால் அதை வெளிப்புற கிருமி நீக்கத்துக்கு (antiseptic effect) பயன்படுத்தும்போது வைரசுகளை அவை கொன்று பாதுகாப்பளிக்கும் என்று எந்த ஆய்வு முடிவுகளும் இதுவரை இல்லை.

---

## மௌன மொழி 24



# கவிதைகள்

வறுமையில் வாழும் எமக்கு
வாழ்வதற்கு வீடும் இல்லை எம்மை
வாழவைக்க ஆளும் இல்லை
கஷ்டத்தின் காரணமாக எமக்கு
உடுப்பதற்கு நல்ல உடையும் இல்லை
வயிற்றுப் பசியால் எம் ஊரைச் சுற்றி
ஊர்வலம் வரும்போது உருண்டதம்மா
நுங்கு ஒன்று
ஓடிவந்து நாம் இருவரும் ஒற்றுமையாய்
அதனை உண்டோம்

**வி.சேதுபதி**
முல்லைத்தீவு.

ஏழ்மைச் சிறுவர் இருவர்
இவர்களுக்கு
உணவு சின்னஞ் சிறிய நுங்கோ?
வறுமையினால்
உணவுக்கோ வழியில்லை
வாழ்வதற்காகப் பிறந்து
வயிற்றுக்காக போராடுவதே
இவர்களின் வாழ்க்கையா?

**சு.டேனுஷா,**
நெளுக்குளம், வவுனியா

**மௌனத்தின் தேடலிலே**
**அழகிய உணர்வு ஒன்று**
**கண்களிலே காணும்**
**கனவுகள் – நனவாகும்**
**நாட்களில் ஏக்கம் இன்று**
**வறுமையிலே இருக்கும்**
**மகிழ்ச்சி கண்டு – பறிபோனதம்மா**
**என் இதயம் என்று**
**உன் புன்னகையில்...**

*கோல்டாமேரி.மரிஸ்ரன்*
*அச்சுவேலி*

**பரிசு பெறும் கவிதை**

மட்டை இட்ட வரியலுக்குள்
மனதை வைத்த கொடிமலர்கள்
கற்பகத்தின் கனியை உண்டு
களிக்கும் கதிக்கு இணைகள் எங்கு
வட்டமிடும் இமைப் பறவை
பகையைத் தேடி இரையை மீட்டும்
பட்ட கொடும் துயர்கள் யாவும்
பசி முறிந்தால் மறந்து போகும்

***வேலணையூர் க.விஜயன்***

இடர்கள் கூறும் உன் முகம் கண்டு
இரக்கம் தோன்றியது என் நெஞ்சில்
விடியல் எனும் விளைநிலத்தில்
விளைந்திடுமோ உன்வாழ்வு
ஏழைகளிற்கோர் இனத்துணை இன்று
இல்லையோ இந்தத் தாயகத்தில்
அன்று தமிழர் தேசம் இருண்டது போல்
இன்றுன் வாழ்வதுவும்தான் இருண்டிடுமோ?

**ந.விதுஷன்**
யா/கற்கோவளம்
மெ.மி.த.க. பாடசாலை

## மௌன மொழி 25



கற்பகத்தருவாம் பனைதந்த
அருங்கொடையெனும் நுங்கதனைக் கண்ட
சகோதரர் இருவர் தம்கைகளால்
கிளறியெடுத்த சுவைத்தலில்
காணும் இன்பமும் நலனும் உண்டோ?
உலகோர் மோகித்திடும் நவீன பானந்தனில்
ஆதலால் பனை வளம் பெருக்கியே
சந்ததி காப்போமே

**ந.தனுபதன்,**
*வணிகர் கழகம், யாழ்ப்பாணம்*

**நம் ஊர் கற்பகத்தருவின் நுங்கு இனிது இனிது**
**அதனிலும் இனிது பாலகர் விழிகளும் புன்னகையும்**
**மேலான இனிது அக்கா தம்பி ஒற்றுமைக் கரங்கள்**
**பனைவளத்தின் அற்புதம் அறிவீரா?**
**மலரட்டும் இவர்களுக்கான இனிதானா நல்வாழ்வு**

இரு சின்னஞ்சிறு சிற்பிகள்
சிரத்தையின் மத்தியிலும் சிங்காரமாய் உட்கார்ந்து
வாஞ்சையுடன் தமது மழலை மொழிகளைப் பேசி
மகிழ்ந்து நுங்குதனை ருசித்து உண்டு
இனிமைதனை இனிமையாக களித்திடவே
என்ன தவம் செய்தார்களோ?

**ஆ.பாலமதுஜா**
யா/மெதடிஸ்த பெண்கள் உயர்தர பாடசாலை

சின்ன வயதில் வறுமை எம்மை
சிறைப்படுத்தினும்
பருவகால அன்னையவள்
மாறி மாறி தரும்
மாங்காயும், நுங்கும்,
புளியங்காயும், இலந்தையும் –எம்
பட்டினியிலும் பசிபோக்க....
எங்கள் முகங்கள் சிரிக்கும்....

*அவ்வை த.சிவா*

குதூகலத்துடன்
ஓடித்திரிய வேண்டிய
வாழ்க்கைப் பயணம்
முகவரிகள் தொலைத்து
வழி தெரியாமல்
தேங்கி நிற்கிறது
பயணப் பாதையில்....

சி.தக்ஷாயணி
கோண்டாவில்

**பள்ளியும் இல்லை**
**கொரோனாவால்**
**நேற்று வரை திண்ணையில்**
**கிடந்த நுங்கை**
**இன்றறுத்துண்ண**
**பனைவளம் தெரியாத**
**தலைமுறை**
**ஓர் நாள் வரும்!**
**கற்பகதரு கற்றுத் தந்த**
**பாடம் வேறு அன்றேயெமக்கு**
**என்று பாட்டி.......**

**கோ.சாதுசன்**, மல்லாவி

வெற்று நுங்கின் கோம்பைக்குள்
நுங்கிருக்குஞ் சுவைக்கலாமென்றெண்ணி
அக்கா தம்பி இருவரும் நுங்கின்
வெற்றுக் குழிகளுக்குள் எல்லாம்
உங்கள் கைகளால் தேடி யாரும் உங்களைப்
பார்த்திடுவரென்றோ எண்ணி
உங்கள் கண்களாற் பார்த்துக்
குறும்புச் சிரிப்பால் சிரிக்கின்றீர்

**வொ.சிவகாமி, சங்கானை**


**உங்கள் கவிதைகள் எங்கள் கதவைத் தட்ட வேண்டிய கடைசி நாள்:**

**12.12.2020**

கவிதைக்கு பரிசு 1000/=

இந்த ஒளிப்படத்தைப் பார்த்ததும் உங்கள் சிந்தனை யில் உதிக்கும் கவிதைகளை 8 வரிகளுக்கு மேற்படாமல் உடனே எழுதி அனுப் புங்கள். மிகச் சிறப்பான ஒரு கவிதைக்கு ரூபா. 1000/ பரிசாகக் காத்திருக்கிறது. பாராட்டுப் பெறும் ஏனையவை மௌனமொழி பகுதி யில் பிரசுரமாகும்.

*அனுப்ப வேண்டிய முகவரி:*
**உதயன் சஞ்சீவி**
**இல.361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.**
மின்னஞ்சல் முகவரி: sanjeevi@uthayan.com
0773165555



அனுப்புபவர் பெயர்:..........................................

முழுமையான தபால் விலாசம்: ..........................................

..........................................

கையொப்பம்:..........................................

ஒவ்வொரு போட்டியிலும் ஏராளமான வாசகர்கள் ஆர்வத்துடன் கலந்துகொள்வதுடன், அவர்களில் பெரும்பாலானோர் முற்றிலும் சரியான விடைகளை அனுப்பி வருகின்றமையால் பரிசுக்கும் பாராட்டுக்கும் உரிய அதிர்ஷ்டசாலிகள் குலுக்கல் முறைமூலம் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்.

# சொற்சிலம்பம் போட்டி 24

### சொற்சிலம்பம் போட்டி 22 க்கான விடைகள்

**இடமிருந்து வலம்**

1.அசம்பாவிதம் 6. பகு 7. தானாக 9. வானரம் 10. வகுதி 12. தம் 13. புதல்வர் 15. பயணி 16. கலம் 19. அல்வா 20. இன்பம் 22. கவின்கலை 23. சுமை.

**மேலிருந்து கீழ்**

1. அபவாதம், 2.சகுனம், 3.பாதாம்புயம், 4.வினா, 5.தகவல், 8.சதிர், 11.குவளை, 14.தணி, 15.பலவான், 16.கல்வி, 17.ஊன், 18.பொம்மை, 19.அக, 20.இலை, 21.பசு

## இடமிருந்து வலம்

1. தொற்றுநோய்களின் மூல காரணி, 4 பெண்களில் பெரும்பாலோர் இதில் நாட்டம் கொண்டவர்கள். 7. கடைசிக் காலத்தில் இங்கு செல்வதை புண்ணியம் எனக் கொள்பவர்கள் இந்துக்கள். 9. அரைப்புள்ளி. 14. கமலம் 16. உறுதிமிக்க மர வகையொன்று. 17. விளக்கறியலில் உள்ளோரை இதன் மூலம் வெளியில் எடுப்பர். 18. செல்வச் செருக்கு. 20. தொழில்முயற்சி கைவிடப்படுமளவுக்கான நிதித்தட்டுப்பாடு. 21. பணம் இதுவரை பாயும் என்பர்.

## மேலிருந்து கீழ்

1. மாதங்களில் ஒன்று. 2. கவர்ச்சி வசப்படுபவர். 3. காய்ந்த இஞ்சி. 5. புன்னகைகொள்ள / மகிழுமாறு. 6.பிரதியுபகாரம் 8. செய்யும் தொழிலால் சுட்டப்படுவது. 10. யுத்தம். 11. அரபு நாடுகளுள் ஒன்று. 12. சிவபெருமானுக்கு இப்படியும் ஒரு பெயருண்டு. 13. ஒரு காதணி வகை. 15. மணமக்கள் திருமணத்தின்போது அமரும் பீடம். 16. அளவுக்கு மிஞ்சிய ஆசை. 19. இணைக்கச் சொல். 21. வழி (கீழிருந்து மேலாக)

**சொற்சிலம்பம் போட்டி இல.24**

பூர்த்தி செய்யப்பட்ட கூப்பன்கள்

**உதயன் சஞ்சீவி**

**இல.361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.**

என்னும் முகவரிக்கு

**12.12.2020** இற்கு முன்னர் கிடைக்கத்தக்கதாக தபாலட்டையில் ஒட்டி அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

## போட்டி விதிகள்

- வாசகர் எவரும் சொற்சிலம்பம் போட்டியில் கலந்து கொள்ளலாம்.
- ஒருவர் எத்தனை கூப்பன்களையும் நிரப்பி அனுப்பலாம்.
- சஞ்சீவியில் பிரசுரமாகும் கூப்பன்களே போட்டிக்கு ஏற்கப்படும்.
- போட்டி தொடர்பாக ஆசிரியரின் தீர்ப்பே முடிவானதாகும்.
- வெற்றி பெறும் முதல் ஐந்து அதிர்ஷ்டசாலிகளுக்கு முறையே

ரூபா 300/=, ரூபா 250/=, ரூபா 200=, ரூபா 150/= ரூபா 100/=

பரிசாக வழங்கப்படும்.

சொற்சிலம்பம் போட்டியில் பரிசு பெற்றோருக்கான கொடுப்பனவுக் காசோலைகள் காலக்கிரமத்தில் அவரவர்களது விலாசத்துக்கு அனுப்பி வைக்கப்படும்.

**போட்டி இலக்கம் 22இல் வெற்றி பெற்றோர் விபரம்**

**1 ஆம் பரிசு**
**ச.அற்புதவிநாயகன்**
'திருத்தணிகை', அராலி தெற்கு, வட்டுக்கோட்டை.

**2 ஆம் பரிசு**
**திருமதி மதிவதனி சிவராஜகுமார்,**
44/2 சங்கிலியன் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்

**3 ஆம் பரிசு**
**கு.மீரா,**
66/16 கருவேப்புலம் வீதி, கொக்குவில் கிழக்கு, கொக்குவில்.

**4 ஆம் பரிசு**
**ந.போலிங்கம்,**
82/4 ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

**5 ஆம் பரிசு**
**து.மாணிக்கவாசகர்**
வேம்பன் வீதி, உரும்பிராய் தெற்கு, உரும்பிராய்

# மாணவர் கழகம்

141

**பெயர்:** அருமைச்சந்திரன் தர்சினி
**முகவரி:** வரணி வடக்கு, வரணி.
**பி. திகதி:** 22.06.2010
**பாடசாலை:** யா/ வரணி வடக்கு சைவப்பிரகாச வித்தியாலயம்.

142

**பெயர்:** கிருபராஜ் பிரகஷ்வினி
**முகவரி:** பாற்பண்ணைவீதி, திருநெல்வேலி.
**பி. திகதி:** 2011.06.16
**பாடசாலை:** யா/கொக்குவில் இந்து ஆரம்பப் பாடசாலை.

143

**பெயர்:** மயூரன் ஹரிணி
**முகவரி:** மீசாலை வடக்கு, கொடிகாமம்.
**பி. திகதி:** 10.01.2012
**பாடசாலை:** மீசாலை வீரசிங்கம் ஆரம்பப் பாடசாலை.

144

**பெயர்:** றமேஸ் அஜின்,
**முகவரி:** சித்திரமேழி, இளவாலை.
**பி. திகதி:** 2008.06.30
**பாடசாலை:** யா/ மகாஜனா கல்லூரி.

145

**பெயர்:** டேனுஷா சுதாகரன்
**முகவரி:** நெளுக்குளம், வவுனியா.
**பி. திகதி:** 2010.01.05
**பாடசாலை:** வ/ நெளுக்குளம் கலைமகள் மகா வித்தியாலயம்.

146

**பெயர்:** லிங்கேஸ்வரன் ஐஸ்வர்யா
**முகவரி:** 'குணவாசா' சுதுமலை தெற்கு, மானிப்பாய்.
**பி. திகதி:** 2009.06.02
**பாடசாலை:** யா/வேம்படி மகளிர் உயர்தர பாடசாலை.

147

**பெயர்:** நிதுர்ஷாயினி வரதன்,
**முகவரி:** லிங்கவாசம், மானிப்பாய் தெற்கு, மானிப்பாய்.
**பி. திகதி:** 2012.07.28
**பாடசாலை:** யா/மானிப்பாய் விவேகானந்த வித்தியாலயம்.

148

**பெயர்:** கி.பீட் ஜெயகரன் லிசா இயுதினி
**முகவரி:** வண்ணாங்குளம், முல்லைத்தீவு.
**பி. திகதி:** 2010.11.17
**பாடசாலை:** முல்லைத்தீவு றோ.க.த.க. பாடசாலை.

149

**பெயர்:** நடராசா பார்கவி
**முகவரி:** ஆதிசிவன் வீதி, குடமியன், வரணி.
**பி. திகதி:** 2006.11.21
**பாடசாலை:** யா/ சாவகச்சேரி இந்துக் கல்லூரி.

150

**பெயர்:** தர்மராசா தர்மிகன்,
**முகவரி:** இல.39. மூர்வீதி, மன்னார்.
**பி. திகதி:** 05.06.2006
**பாடசாலை:** மன்/ புனித சவேரியார் ஆண்கள் கல்லூரி.

**சஞ்சீவி**

**மாணவர் கழகம்**

1. முழுப்பெயர்: ..........................................
2. முகவரி: ..........................................
3. பிறந்த திகதி: ..........................................
4. கல்வி கற்கும் பாடசாலை: ..........................................
5. கற்கும் தரம்: ..........................................
6. தொலைபேசி இலக்கம்: ..........................................

மாணவர் ஒப்பம் .................... பெற்றோர் ஒப்பம் ....................

0773165555

அனுப்ப வேண்டிய முகவரி:

**உதயன் சஞ்சீவி**

**இல.361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.**

sanjeevi@uthayan.com

ஆரதி

# அரசியல் பேசும் அம்மன்!

**இரண்டு படங்களும் எமது சமகால வாழ்க்கையைச்சுற்றி நிகழ்ந்து கொண்டிருக்கும் பெரும் மத நாடகங்களை புதிய கோணத்தில் எமக்குக் காண்பிக்கின்றன. அதன் வழியாக சமகால எம்முடைய அரசியல் நெருக்கடிகளையும் உலகளாகிய போக்கையும் உணர்த்துகின்றன.**



மூக்குத்தி அம்மன்'' என மீண்டும் ஒரு பக்திப்படம். சாவித்திரி, கே.ஆர்.விஜயா, வாணிஸ்ரீ, ஜெயசித்திரா, ரோஜா, ரம்யா கிருஷ்ணன் என்று ஒவ்வொரு காலகட்டத்திலும் ஒவ்வொரு நடிகைகள் அம்மன் அல்லது தேவி ரூபமெடுப்பதற்கென்று தமிழ்ச் சினிமா அருள்பாலித்திருக்கிறது. பக்திப் பரப்பில் சிவகாமி, அபிராமி, சாமுண்டீஸ்வரி, காமாட்சி, மீனாட்சி, ராஜராஜேஸ்வரி, கண்ணகி, சீதை, துர்க்கை, சிவகாமி, ஈஸ்வரி என ஏராளம் அம்மன்கள் இருப்பதைப்போல, இவர்களின் வடிவிலும் பல அம்மன்கள். இப்பொழுது நயன்தாராவின் வடிவில் எழுந்தருளியிருக்கிறது மூக்குத்தி அம்மன். அதாவது இன்றைய அம்மன், நயன்தாரா.

ஒவ்வொரு காலகட்டத்திலும் சினிமா என்ற நவீன கலை வடிவம், நடிக, நடிகையரின் உடலினாலும், குரலினாலும் ஆண், பெண் இருபாலரிடத்திலும் கனவுப் பிம்பங்களை உருவாக்குகிறது. இவற்றை மையப்படுத்தி, அந்தந்தக் காலத்தில் வெளிவரும் திரைப்படங்கள், அந்தக் காலகட்டப் பார்வையாளர்களின் ரசனை உளவியலில் செல்வாக்குச் செலுத்தும் நடிக, நடிகையரைப் பயன்படுத்துகின்றன. இன்றைய பார்வைப்பரப்பில் செல்வாக்குடையவராக நயன்தாரா இருப்பதால், மூக்குத்தி அம்மனாக அவதாரம் எடுத்துள்ளார். வணிக உபாயத்தில் இதுவும் ஒன்று.

மூக்குத்தி அம்மன் சிறு தெய்வவழிபாட்டை முன்னிறுத்துகிறது. அதாவது, எளிய கிராமியத் தெய்வ வழிபாட்டை. மறுபக்கமாக அது வளர்ச்சியடைந்து வரும் பெருந்தெய்வ மயமாக்கலை நிராகரிக்கிறது. சிறு தெய்வ வழிபாட்டை முன்னிறுத்தும்போதே, அது பெருந்தெய்வ மயமாக்கலுக்கு எதிரானது என்றாகிறது. ஆகவே இது இன்றைய சமூக, அரசியல் சூழலில் கவனத்திற்குரிய ஒன்று.

இன்றைய சூழலானது சிறுதெய்வ வழிபாட்டையும் அதன் தனித்துவ அடையாளத்தையும் அழித்துக் கட்டமைக்கப்படுவது. இது அரசியலில் மட்டுமல்ல, வணிகம், மதம் எனச் சகலதிலும் நடக்கிறது. சிறு தெய்வக் கோயில்கள் அடையாள அழிப்புச் செய்யப்பட்டுப் பெருந்தெய்வக் கோயில்களாக்கப்படுவதையும் அவற்றின் செயற்பாட்டு எல்லைப்பரப்பு உலகளாவிய அளவில் விஸ்தரிக்கப்படுவதையும் காண்கிறோம். பெருந்தெய்வங்களின் வழியாக பெருங்கோயில்கள் உருவாக்கப்படுகின்றன. பிறகு அவற்றை மையமாக வைத்து உருவாக்கப்படும் ஆச்சிரமங்கள், தேவஸ்தான சபைகள் போன்றவை வளர்ச்சியடைந்து வரும் உலகமயமாக்கலில் வடிவமாக்கப்படுகின்றன. இவை பெரும் அமைப்புகளாக விஸ்தீரணம் பெற்று சமூகத்தில் செல்வாக்குச் செலுத்தத் தொடங்குகின்றன. பின்னர் இவற்றை நோக்கி சமூகத்தின் பிற அனைத்து அடுக்குகளும் இழுத்து வரப்படுகின்றன. இந்த இழுவிசையில் சிறுதெய்வங்கள் உருமாற்றப்பட்டு அழிக்கப்படுகின்றன. புதிய பண்பாடு ஒன்று உருவாக்கப்படுகிறது. உதாரணமாக ஈழத்தின் முக்கியமான பல கண்ணகி அம்மன் கோயில்கள், இப்போது ராஜராஜேஸ்வரி அம்மன் கோயில்களாக மாற்றப்பட்டு, உலகப் பரப்பில் புதிய விதமாக அறிமுகம் செய்யப்பட்டுள்ளன. இப்படிப் பல தெய்வங்களும் கோயில்களும் உருமாற்றம் செய்யப்பட்டுள்ளன. இன்னமும் செய்யப்பட்டு வருகின்றன. முப்பது ஆண்டுகளுக்கு முன்பு எம்முடைய சமூகத்தில் அறிமுகமே இல்லாத கடவுள்களும் விரதங்களும் இன்று நடைமுறையில் உள்ளன. பல புதிய தெய்வங்களின் அறிமுகத்தின் வாயிலாக உருவாகியிருக்கும் நேர்த்திக்காக, இந்தியாவை நோக்கிய யாத்திரைகளில் பல்லாயிரக்கணக்கானோர் செல்கின்றனர். பயண ஏற்பாடுகள், தங்குமிடங்கள், தரிசனம் என்று இதன் பின்னால் பெரிய வணிகமே நடக்கிறது. இதில் ஏராளமான தரப்புகள் சம்பந்தப்பட்டுள்ளன.



இந்தியச் சூழலில் இது இன்னும் வலுவுடன் நடக்கிறது. அங்கே வலுப்பெற்று வரும் பாரதிய ஜனதாக் கட்சியின் இந்துத்துவ மேலாதிக்கத்துக்கு ஏற்பப் பல தெய்வங்களும், வழிபாட்டுக் கலாசாரமும், அதையொட்டிய மையங்களும் விரிவாக்கப்படுகின்றன. இதை எதிர்கொள்ளவேண்டிய சூழலில் இதற்கு எதிரான தரப்பினர் உள்ளனர். இது அரசியலில் மட்டுமல்ல, கலை, இலக்கியம் போன்ற சகல துறைகளிலும் நடக்கிறது. அதன் ஒரு வடிவமாகவே மூக்குத்தி அம்மனும் உருவாக்கப்பட்டுள்ளது.

கடவுளின் பெயராலும் தொண்டு செய்யும் ஆசிரமம் ஒன்றின் பெயராலும் தன்னுடைய அடையாளத்தை அழித்து நிலத்தையும் சூழலையும் அபகரிக்க முற்படும் சாமியார் ஒருவரைத் தன்னுடைய பக்தனின் மூலமாக முறியடிக்கிறார் என மூக்குத்தி அம்மன். ஒரு வகையில் இது ஒரு எதிர்ப்புப் போராட்டமே. கடவுள்கூடத் தன்னைக் காப்பாற்றுவதற்காகப் போராட வேண்டியுள்ளது என்பதை ஒரு குறியீடாக்கி சமூக அரசியல் நிலையை விளக்க முற்பட்டிருக்கிறர் இயக்குநர் ஆர்.ஜே. பாலாஜி.




ஏறக்குறைய எம்முடைய அரசியல் சூழலில் நடப்பதை ஒத்தது இது. எமது வரலாற்றிடங்களும் வழிபாட்டிடங்களும் தொல்பொருள் அடையாளப்பகுதிகள் என்ற பெயரில் செய்யப்படும் உருமாற்றத்தின் வழியாக நிலம் அபகரிக்கப்படுகிறது. அடையாளம் அழிக்கப்படுகிறது. இவ்வாறான அபாயச் சூழலுக்குள் நாம் சிக்கியிருக்கிறோம். இதற்கு எதிராகப் போராட வேண்டிய நிலையில் உள்ளோம். ஆகவே எம்முடைய சமூக அரசியல் சூழலுக்கும் பொருத்தமான கவனத்தை ஏற்படுத்துகிறது மூக்குத்தி அம்மன். இதை ஒரு பக்திப்படமாகவே தட்டையாகப் பார்த்துக் கடந்து செல்வோருக்கு எல். ஆர். ஈஸ்வரியின் அம்மன் பாடல்களே போதும். இதைப்போல இங்கே இன்னொரு மதம் சார்ந்த படத்தையும் குறிப்பிடலாம். ட்றன்ஸ் (TRANCE). இது மலையாளப் படம். ஃபஹத் ஃபாசில், நஸ்ரியா, கௌதம் மேனன் ஆகியோர் நடித்துள்ளனர். அது வேறொரு கோணத்தில் விடயங்களைப் பேசுகிறது.

எளிய மக்கள் என்று கூறப்படும் அடித்தட்டு மக்கள் தொடக்கம் சகல அடுக்கிலுள்ளோரின் குறைகள், அவலங்களைப் பயன்படுத்தி மதமாற்றம் செய்வது, அவர்களைத் தமது கட்டுப்பாட்டுக்குள் வைத்திருப்பது என்பதைக் கண்டு வருகிறோம். தமது பிணிகளும் குறைகளும் தீர்க்கப்படும் என்ற நம்பிக்கையோடு இந்த மக்கள் விசுவாசிகளின் பின்னே திரண்டு கொண்டிருக்கிறார்கள். இதற்காகப் பல அழைப்புகள், நிறுவனங்கள் மீட்பர்களாகத் தம்மைக் காட்டிச் செயற்பட்டுக் கொண்டிருக்கின்றன. பல ஆயிரக்கணக்கானோர் ஊழியக்காரர்களாக ஊர்களெங்கும், தெருக்களெங்கும் நிறைந்து கிடக்கிறார்கள். இது எப்படி நடக்கிறது? இதன் பின்னால் செயற்படும் தரப்பினர் யார்? அவர்களுடைய நோக்கம் என்ன? சனங்கள் எப்படியெல்லாம் நம்பிக்கைச் சுரண்டலுக்குள்ளாகின்றனர்? என்பதையெல்லாம் பச்சையாக வெளிப்படுத்துகிறது ரெறன்ஸ். கோடிக்கணக்கானோரின் அல்லல்களைப் பயன்படுத்தி தாம் கோடீஸ்வரர்களாக வாழும் வித்தையும், அதற்குப் பயன்படுத்தப்படும் சுவிஷேசக் கூட்டங்களும் படத்தில் நாம் காணும் உச்சம். அடிப்படையில் இது ஒரு கிறிஸ்தவ மத அமைப்பை மையப்படுத்திய படமாகத் தோன்றினாலும், இந்த மாதிரிச்செயற்படும் அனைத்து மதப்பிரிவினருக்கும் இது பொருந்தக் கூடியதே. ஏனென்றால், உலகம் முழுவதும் உள்ள இந்த வகையான கடவுளின் தூதுவர்கள் அனைவரும் பின்பற்றும் ஃபார்முலா ஒன்றுதான். பின்னுள்ள அரசியலும் ஒன்றே. லாபம். நலன். ஆதிக்கம். அவ்வளவுதான்.

ஆனால், பிரசாரத் தன்மையே இல்லாமல், இதனை இயல்பான சினிமாவாக்கியுள்ளார் இயக்குநர் அன்வர் ரஸீத். கதை வசனம், வின்ஸன் வடக்கன். இசை, வினாயகன் ரி.கே. மற்றும் ஜக்ஸன் விஜயன். எல்லோரும் இணைந்த சிறப்பான கலவையை இதில் நாம் உணர முடிகிறது. படத்தில் நடிக்கும் ஒவ்வொருவரும் ஆச்சரியமூட்டும் வகையில் செயற்படுகின்றனர். குறிப்பாக ஃபஹத் பாஸில், நஸ்ரியா, கௌதம் மேனன் போன்ற முக்கியமான நடிகர்கள் மட்டுமல்ல, சுவிஷேசக் கூட்டத்தில் பங்குபற்றும் மக்கள் என ஒவ்வொருவரும் மெய்நிகர் வாழ்க்கையொன்றை வாழ்ந்து காட்டுகின்றனர். ஆயிரக்கணக்கானோரை இந்த மாதிரி நேர்நிலைக்காட்சிகளில் நடிக்க வைப்பது என்பது எளிதல்ல. காட்சிக்குப் பொருத்தமான ஒளியும் இசையும் அற்புதமாக இணைந்திருப்பது சிறப்பு. "அரக்கன், தேவன், ராட்சசன், கடவுள், சாத்தான், பெரும் காட்டு விலங்கு என எப்படி வேண்டுமானாலும் தூக்கி வைத்துக் கொண்டாடலாம்" என ஒரு விமர்சகர் குறிப்பிட்டுள்ளதைப்போல இந்தப் படத்தில் ஃபஹத் ஃபாசிலின் நடிப்பு, யாரிவர் என்றே கேட்க வைக்கிறது. அவ்வளவுக்கு ஆச்சரியமூட்டுகிறார்.

இரண்டு படங்களும் எமது சமகால வாழ்க்கையைச் சுற்றி நிகழ்ந்து கொண்டிருக்கும் பெரும் மத நாடகங்களை புதிய கோணத்தில் எமக்குக் காண்பிக்கின்றன. அதன் வழியாக சமகால நம்முடைய அரசியல் நெருக்கடிகளையும், உலகளாகிய போக்கையும் உணர்த்துகின்றன. இந்த வகையில் இவற்றைக் குறித்த உரையாடல்கள் நிகழ்வது நல்லது.



கீரிமலை நகுலேஸ்வரர் ஆலயத்தில் இடப்பெயர்வுக்கு முன்னர் நடைபெற்ற பிக்ஷடனர் திருவிழா பற்றி இந்தவாரம் விபரிக்கிறார் பொக்கிசன்.

○ பொக்கிசன்

# பிச்சையாண்டிக்கு அரோகரா!

"பிச்சையாண்டிக்கு அரோகரா", "வாறார் வாறார் பிச்சை யாண்டி" பாபு கத்த, எல்லாரும் கோரஸாகக் கத்தினார்கள். பிச்சையாண்டி வெளிக்கிட்டிட்டார் பிச்சை எடுக்கிறதுக்கு. இண்டைக்கு பிச்சையாண்டி (பிக்ஷடனர்) திருவிழா. சிவபெருமான் வீடு வீடாகப் போய்ப் பிச்சை எடுக்கும் திருவிழா.

சுவாமி வெளிக்கிட்டிட்டுது.

இப்பிடியே நகுலேஸ்வரா வீதியாலை கொஞ்சத்தூரம் போய்த் திரும்பி வந்து, பஸ் ஸ்ராண்ட் பக்கமா பாபுவின்ரை வீடு மட்டும் போய்த் திரும்பி, அப்பிடியே எங்கடை வீட்டு பக்கமா முத்தம்மா வீடு மட்டும் போய்வந்து, அப்பிடியே கவுணாவத்தை றோட்டாலை நாமுத்து மாஸ்டர் வீடு மட்டும் போய் , பிறகு கடற்கரைக்கு வந்து கே.கே.எஸ் றோட்டாலை சுந்தரம் வீடு மட்டும் போய் வந்து, கடைசியா எங்கடை கோயிலடியாலை சமாதி மட்டும் போய் திரும்பி வந்து கோயிலுக்கு போகும் சுவாமி.

இண்டைக்கு எல்லா வீட்டு வாசலிலையும் நிறைகுடம் வைச்சு பலகாரம் எல்லாம் குடுப்பினம். ரண்டு, மூண்டு வீடுகளோடை எல்லாருக்கும் வயிறு நிரம்பியிடும். பிறகு மற்றமற்ற வீடுகளிலை குடுக்கிற பலகாரங்களிலை ஒருத்தரும் அக்கறைப்படமாட்டினம். சில பெடியள் 'பாக்' கொண்டந்து அதுகளை வேண்டிக்கொண்டு போவங்கள். பாபு வீட்டடியிலை கொஞ்சநேரம் மினக்கெடுது சுவாமி, இனி முத்தம்மா வீட்டடியிலையும், முருகேசு வீட்டடியிலையும் சுவாமி கொஞ்சநேரம் மினக்கெடும். ரண்டு வீட்டிலையும் கன பலகாரம் படைப்பினம்.



மணியத்தார் வீட்டடியிலை சுவாமி வந்திட்டுது நான் போய்மேசை, குத்துவிளக்கு, நிறைகுடம் எல்லாத்தையும் தூக்கிக் கொண்டு வந்து வைச்சன். அம்மா கடலை அவிச்சு, பெரிய சருவச்சட்டியிலை போட்டு வாழை இலையலை மூடிவைச்சிருக்கிறா. அதையும் எடுத்துக் கொண்டு வந்து வைச்சிட்டு நிண்டன்.

சுவாமி முத்தம்மா வீட்டடிக்கப் போட்டுத்தான் வரும்.

' ஆ...சுவாமி வருகுது' நான் அரிச்சனைத் தட்டை எடுத்து வைச்சுக்கொண்டு நிண்டன். குமாரசாமி (ஐயரின் மூத்தமகன்) தட்டிலை கிடந்த பூவை அள்ளி எறிஞ்சு போட்டு கற்பூரத்தைக் காட்டிப் போட்டு வீபூதியையும் பூவையும் தட்டத்திலை போட்டார்.

"அரோகரா"

முருகேசு வீட்டுப் பக்கமா சுவாமி போகுது. நான் மேசையைத் தூக்கி உள்ளுக்கை வைச்சிட்டு கோயிலடிக்குப் போனன். கோயில்ல மாமா நிண்டார். கோயில் திறந்து கிடக்கு. சுவாமி வந்து சமாதிப்பக்கமா போகுது. சமாதி வாசலிலை திரும்பி , சமாதியைப் பார்த்தபடி சுவாமி நிற்க சமாதிச் சைவம் பஞ்சாலாத்தியை காட்டிச்சுது. சுவாமி திரும்பி வந்து எங்கடைகோயில் வாசலிலை நிற்க கோயில் மாமா பஞ்சலாத்தியை காட்டினார்."அரோகரா" சுவாமி புறப்பட்டது. சபாரட்ண குருக்கள் வீட்டு வாசலுக்குப் போனதும் சபாரட்ண குருக்கள் எல்லாரையும் இருக்கச் சொன்னார். சபாரட்ண குருக்கள் வாசலிலை பெரியவாங்கு போட்டு பலகாரம் எல்லாம் அடுக்கிக் கிடக்கு; மணி ஐயரும் மனிசியும் எல்லாரையும் இருக்கச் சொல்லிச்சினம்.

கோமதியம்மாவும் நிக்கிறா. அவாவும்" எல்லாரும் இருங்கோ" எண்டு சொன்னா. சுவாமியோடை வந்த ஆக்கள் பலகாரங்களை எடுத்துக் குடுத்தினம். பெரியவட்ட சருவச்சட்டிக்குள்ள கடலை வடை இருந்தது. மணிஐயர் "தம்பி இதையும் குடுங்கோ" எண்டு எடுத்து குடுத்தார். மணி ஐயரின் மனிசி பெரியவாளியிலை பால் கோப்பியையும், தகர மூக்குப்பேணிகளையும் கொண்டு வந்து வைச்சா. மணிஐயர் லிங்கனிடம் வாளியையும் மூக்குப்பேணிகளையும் எடுத்துக் குடுத்தார்.

"தம்பி லிங்கன், இதையும் குடுங்கோ" சபாரட்ணகுருக்கள் எல்லாத்தையும் வடிவா பாத்துக்கொண்டு நிண்டார். எல்லாருக்கும் வடை, கோப்பி எல்லாம் குடுத்தாச்சு .சபாரட்ண குருக்கள் வீடு தான் கடைசி. இனி இப்பிடியே கோயிலுக்கு போகவேண்டியதுதான்.

"அரோகரா "

எல்லோரும் எழுந்தனர்; சுவாமி கோயிலை நோக்கிப் புறப்பட்டது. ■



# II குழைக்காட்டு கதைகள்

○ கோகுலராகவன்



மார்க்கண்டு மாமா , அம்மா வழியில் எங்களுக்கு நெருங்கிய உறவினர். கிரந்தம் பிடித்த மனிதர். இதனால் பலரோடு பகைகளையும் சம்பாதித்து கொள்வார். ஆனால் நல்ல பிள்ளை மாதிரி நடந்து கொள்வார்.

ஒருமுறை மர்க்கண்டு மாமாவின் மூத்த சகோதரன் சுப்பிரமணியத்தின் ( மணியம் மாமாவின்) மகன் செல்வராசா கனடாவில் இருந்து வந்து நின்றிருந்தான்.

மார்க்கண்டு மாமாவுக்கும் மணியம் மாமாவுக்கும் காணிப்பங்குப் பிரச்சினையில் கதை .- போக்குவரத்து கனகாலமாக இல்லை.

ஆனால் செல்வராசா கலகலப்பான பேர்வழி.

"கனடாவால் ஒரு பெட்டி சேட் கப்பலில் வருகுது" என்று சொல்லியே இறைச்சிக்கடைக்காரன், மீன்காரன் இரண்டு பேரிடமும் இறைச்சியும் மீனும் வாங்கி கொண்டாட்டம் வைத்தவர். இறைச்சிக் கடைக்காரர் என்னிடம் ஒருநாள் கேட்டார்.

"செல்வராசா போட்டுதோ?"

"ஓம் போட்டார்"

"சேட் தரலாமெண்டவர்"

என்று அவர் என்னை ஏக்கத்தோடு பார்த்துக் கேட்டது வேறை கதை.

சேர்ட்டும் வரலில்லை. கப்பலும் வரவில்லை. நிறுவைக்கு மேலாக இறைச்சி கொடுத்ததுதான் மிச்சம்.

மார்க்கண்டு மாமா , தமையனோடு மீண்டும் உறவாகும் நோக்கில் செல்வராசா அத்தானை றோட்டில் மறித்து

''நாளைக்கு வீட்டை சாப்பிட வா'' என்று உரிமையோடு கூப்பிட்டார்.

"மாட்டேன்" என்றால் இந்தாள் றோட்டில நின்று பிலத்துக் கத்தும் என்பது செல்வராசாவுக்கு தெரியும்.

"சரி வாறன்"

தலையாட்டிவிட்டு செல்வராசாத்தான் போய்விட்டார்.

மார்க்கண்டு மாமா வீட்டில் நின்ற சேவல்களில் பெரிய சேவலாக பிடித்து கோழிக்கறியும் ஊர் அரிசிச் சோறும் சமைத்துவிட்டு செல்வராசா வருவான் எனக்காத்துக் கொண்டிருந்தார்.

செல்வராசாத்தானுக்கோ பழைய கோபம் மறக்காமல் இருந்தது. தகப்பனை மார்க்கண்டு மாமா தெருவில் வைத்து "மடையா பேயா" என்று பேசிய கோபம் இன்னும் தீராமல் இருந்தது. அவர் சாப்பிடப் போகவில்லை.

மூன்றாம் நாள் மார்க்கண்டு மாமா அம்மாவிடம் முறையிட வந்தார்.

"மணி, செல்வராசா செய்த வேலையை பார்த்தியோ?"

'அம்மா தெரியாத மாதிரி

"என்னணை பண்ணினவன்?"

"செல்வராசாவின் புண்ணியத்தால் எனக்கும் பொடியளுக்கும் மூண்டு நாள் கோழி இறைச்சியும் சோறும்"

அம்மா பேசாமல் இருந்தார்.

" ஆயிரம் ரூவாக் கோழி. பெத்த பொடியன் மாதிரி நினைச்சுக் கூப்பிட்டன். இப்படிச் செய்து போட்டான்" அதற்கும் அம்மா ஒன்றும் சொல்லவில்லை.

1995 .வன்னி இடம்பெயர்வு நடந்த காலம். மார்க்கண்டு மாமா, மனைவியையும் இரண்டு பிள்ளைகளையும் வன்னிக்கு அனுப்பிவிட்டு தனியே இருந்தார். இரவு எங்கள் வீட்டுக்கு படுக்கைக்கு வருவார்.

அவர் வீட்டில் நாலு கோழிகள் நின்றன. ஒருநாள் இரவு நாவி (காட்டுப்பூனை வகை) ஒரு கோழியைப் பிடித்துவிட்டது. இதனால் மற்ற மூன்று கோழிகளையும் மருமகள் முறையான செல்லம் வீட்டில் கொண்டு போய்க் கொடுத்துவிட்டார். கொஞ்ச நாள் நிற்கட்டும் என்று சொல்லித்தான் கொடுத்தார். சிலநாள் கழித்து மருமகள் செல்லம் வீட்டுக்கு ஒரு மதியம் போலை கோழிகளைப் பார்த்து வருவோம் என்று போய் இருந்தார். எல்லோரும் சாப்பிட்டுக் கொண்டு இருந்தார்கள்.

"மாமா சாப்பிடுங்கோ"

கனிவாக உபசரிப்பு. இவருக்கும் நல்ல பசி.

"சரி கொண்டா"

சாப்பாடு சோறும் கோழி இறைச்சிக் கறியுமாக இருந்தது. மாமா முதற் கவளத்தை அள்ளி வாயில் வைக்கும்போது " என்ரை கோழியோ?" என யோசிக்கவும் செய்தார்.

மருமகள் செல்லம், மாமா யோசிப்பதை நாடி பிடித்துவிட்டாள்.

''மாமா உங்கடை கோழிதான். இராத்திரி நாவி புடிச்சுப் போட்டுது. பறிச்சுப் போட்டம். கால் முறிஞ்சு போச்சுது. அதுதான்.. காய்ச்சிப் போட்டம்"

மாமா எதுவும் கதைக்கவில்லை. சாப்பிட்டு விட்டு கொஞ்ச நேரம் இருந்துவிட்டு நேரே எங்கள் வீட்டுக்கு வந்து அம்மாவிடம் விசயத்தை சொல்லிக் கவலைப்பட்டார்.

''சரி, என்ரை கோழியை எனக்குச் சொல்லாமல் காய்ச்சிப் போட்டாள்"

"சரி விடுங்கோண்ணை மருமோள்தானே"

''எனக்குத் தெரியும் மணி நாவி புடிக்கேல்லை. பொய். பச்சைப் பொய்"

"ஒரு கோழிதானே போகட்டுமண்ணை"

''இல்லை மணி என்ரை கோழி...''

இழுவை நீண்டது. ''சரி அண்ணை ஒளிச்சோ சாப்பிட்டவள். உங்களுக்கு தந்துதானே சாப்பிட்டவள்"

"இல்லை மணி என்ரை கோழியெல்லோ? இரவைக்கும் கொஞ்சம் கறி தந்திருக்கலாம் தானே..?"

■




வித்தியாசங்கள் 12



# விவேகானந்தர் பொன்மொழிகள்

1. சுமைகளைக் கண்டு நீ துவண்டு விடாதே. இந்த உலகத்தைச் சுமக்கும் பூமியே உன் காலடியில் தான்.
2. 'இல்லை' என்று ஒருபோதும் சொல்லாதே. 'என்னால் இயலாது' என ஒரு போதும் எண்ணாதே. ஏனெனில் நீ வரம்பில்லா வலிமை பெற்றவன்.
3. உண்மைக்காக எதையும் துறக்கலாம். ஆனால் எதற்காகவும் உண்மையைத் துறக்காதே
4. நேரத்தை வீணாக்கும்போது கடிகாரத்தைப் பார் ஓடுவது முள் அல்ல, உன் வாழ்க்கை
5. தோல்வி இல்லாத வாழ்க்கை பயனற்றது. போராட்டம் இல்லாத வாழ்வில் சுவை இருப்பதில்லை.
6. கடமை ஒவ்வொன்றும் புனிதமானது. அதைப் பக்தியுடன் செய்வது மிக உயர்ந்த தெய்வ வழிபாடு.
7. யாருடைய கை கொடுப்பதற்கு நீள்கிறதோ, அவன் மிக உயர்ந்தவன்.
8. உறுதியுடன் இரு. அதற்கு மேலாகத் தூய்மையானவனாகவும் முழு அளவில் சிரத்தை உள்ளவனாகவும் இரு.

மு.பிரியங்கா,
யா/ இந்து மகளிர் கல்லூரி.





# எல்லாம் அளவோடு இருக்க வேண்டும்

ஓர் ஊரில் கமலன் எனும் பணக்காரனும் விமலன் எனும் ஏழையும் வாழ்ந்து வந்தார்கள். அந்தப் பணக்காரனது வீட்டில் ஐம்பது வேலையாட்கள் இருப்பார்கள். அப்பணக்காரனது வேலை, சாப்பிடுவதும் நித்திரை கொள்வதும்தான். ஏனைய வேலைகளை வேலைக்காரர்கள் செய்து முடிப்பார்கள். தன்னிடம் பணம் அதிகமாக இருக்கிறது என்ற கர்வத்தால் எதற்கெடுத்தாலும் கமலன் அளவில்லாது செலழிப்பான். ஆனால் ஏழையான விமலனோ கூலி வேலை செய்து தான் தன் வாழ்க்கையை நடத்தினான்.

விமலன், தன் வேலைகளைத் தானே செய்வான். தனக்குக் கிடைக்கும் சம்பளத்தில் கால் பங்கு சம்பளத்தை சேமிப்பான். எதற்கும் அளவோடு செலவிடுவான். அதேபோல் மிகச் சிக்கனமாக வாழ்க்கையை வாழ்ந்து வந்தான். காலப்போக்கில் கமலன் எனும் அந்தப் பணக்காரனுக்கு உடல் உழைப்பின்மை, ஒவ்வாத உணவுப்பழக்கம், சோம்பேறித்தனம் மற்றும் உடற்பருமன் போன்ற காரணங்களால் நோய்கள் ஏற்பட்டன. வைத்தியசாலைக்கு அதிகமான பணத்தை வாரி இறைத்தான். அதிக பணம் செலவிட்டும் அவனது நோய்களைக் குணப்படுத்த முடியாது கடைசியில் இறந்துவிட்டான். ஆனால் விமலனோ எல்லாவற்றையும் அளவோடு பயன்படுத்துவதால் ஆரோக்கியமாக வாழ்ந்து வருகிறான்.

**த.துளசிகா**, தரம்-09, யாழ்.இந்து மகளிர் கல்லூரி.

# புரேவி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

"கறுத்தக் காற்சட்டை பனியனுடன் ஒரு ஆணின் சடலம்" இந்த அடையாளத்தை மீனவர்கள் உறவினர்களுக்கு கூறினர் .

பதறிப்போனார் வள்ளியம்மை.

செல்வக்குமார் தொழிலுக்குச் செல்லும்போது அந்த உடையைத்தான் அணிந்திருந்தார். வள்ளியம்மை வேண்டாத கடவுள் இல்லை. "அந்தச் சடலம் செல்வக்குமாருடையதாக இருக்கக் கூடாது "என்று நேர்த்தியும் வைத்தார்.

உடனேயே செல்வக்குமாரின் உறவினர்கள் காரைநகர், ஊரிப்பகுதிக்கு இரவோடிரவாக விரைந்தனர். அங்கிருந்து மீனவர்களின் படகில் ஏறிச் சென்று,கடலில் வலையில் சிக்கியபடி இருந்த சடலத்தை அவதானித்தனர்.

உடல் வீங்கி ..
நுர்நாற்றம் வீச...
அந்தச் சடலத்தை கூர்ந்து பார்த்தனர்.
அது செல்வக்குமாரேதான்!

வள்ளியம்மையின் நேர்த்திக் கடன் பலிக்கவேயில்லை. அத்தனை தெய்வங்களும் வள்ளியம்மையைக் கைவிட்டுவிட்டன. சடலத்தை அடையாளம் கண்ட உறவினர்கள் போனில் தகவல் சொல்ல, நிலை குலைந்தார் வள்ளியம்மை. கதறி அழுதார். ஆற்றொணாத் துயரத்தால் பேச்சு மூச்சற்றவளாக அமர்ந்துகொண்டார்.

சம்பவ இடத்துக்குச்(ஊரிப்பகுதி) சென்ற பொலிஸார், இரவானாதால் சட்டத்தின் பிரகாரம் சடலத்தை மீட்பதில் உள்ள சிக்கல்களால், அதை அங்கேயேகடலில்கட்டிவிட்டுகரைதிரும்பினர். மறுநாள் வெள்ளிக்கிழமை (04.12.2020) காலை நீதிவானின் அனுமதியுடன் சடலம் மீட்கப் பட்டது. மருத்துவ பரிசோதனைகளின் பின்னர் வள்ளியம்மையின் வீட்டுக்குக் கொண்டு செல்லப்பட்டு, மாலை இறுதிக் கிரியைகளின் பின்னர் செல்வக்குமாரின் சடலம் தகனம் செய்யப்பட்டது.





## கடற்படையின் அலட்சியம்

செல்வக்குமார் காணாமல் போனபோது, அது தொடர்பில் உறவினர்கள் உடனடியாகவே கடற்படையினருக்கு தகவல் வழங்கியிருந்தனர். எனினும் அது தொடர்பில் அலட்சியமாகவே கடற்டையினர் நடந்து கொண்டனர் என்று அந்தப்பகுதி மக்கள் ஆதங்கப்படுகிறார்கள். "புயல் அதிகமாக உள்ளதால், இப்போது கடலில் தேடுவதில் சிரமம், மேலதிகாரிகளுக்கு தகவலை வழங்கி அவர்களின் அனுமதியைப் பெற்ற பின்னரே தேடுவது தொடர்பில் முடிவு செய்வோம்" என்று கடற்படையினர் தெரிவித்தனர் என மக்கள் குற்றஞ்சாட்டுகின்றனர். செல்வக்குமார் காணாமல் போனதற்கு மறுநாளே கடற்படையினர் தேடுதலில் இறங்கினர். புயல் உக்கிரமடைந்ததால், மீனவர்களை கடலில் இறங்கி செல்வக்குமாரைத் தேடுவதற்கு கடற்படையினர் அனுமதித்திருக்கவில்லை. ஆனால் இந்த அவலச் சாவுக்கு முழுக்க முழுக்க செல்வக்குமாரே காரணம். இத்தனை அறிவிப்புகள் விடுக்கப்பட்டும், மனைவி திரும்பத் திரும்பத் தடுத்தும் புரேவியை ஒரு பொருட்டாகவே மதிக்காது கடலுக்குப் போனதால் தன்னுயிரை அவர் இழந்ததோடு, தன்னை நம்பியிருந்த மனைவி, பிள்ளைகளின் எதிர்காலத்தையும் கேள்விக்குறியாக்கிவிட்டார். செல்வக்குமாரின் இழப்பு, பேரிடர் அறிவிப்புக்களை உதாசீனம் செய்வோருக்கு ஒரு பாடமாக இருக்கட்டும். இனியாவது உரிய அறிவுறுத்தல்களை பின்பற்றி, வீணான உயிரிழப்புகளையும், சொத்தழிவுகளையும் தடுப்போம்.

# வித்துவான் பதில்கள்!



**கொரோனா ஒவ்வொரு நாளும் ஐந்து பேரைக் கொல்கிறதே? என்ன நினைக்கிறீர்கள்?**

*ப.சாதனா, உரும்பிராய்.*

*ஐந்து பேரையும் கொல்ல வேண்டும் என்று ஒவ்வொரு நாளும் துடித்துக் கொண்டிருந்த துரியோதனன்தான் கொவிட் 19 வைரசாக மறுபிறப்பு எடுத்தானோ?*



**நீங்களும் கேள்விகள் கேட்கலாம்... எழுதி அனுப்புங்கள்**

**வித்துவான் பதில்கள்**
உதயன் சஞ்சீவி
இல.361, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
0773165555
sanjeevi@uthayan.com

**கொரோனா இறப்புத் தொடர்பான செய்தி இரண்டு மூன்று நாள்களுக்குப் பின்னர் வெளியிடப்படுகிறதே? என்ன நடக்கிறது?**

*கே.காந்தரூபன், கிளிநொச்சி.*

*இறந்தவர் மீண்டும் எழுந்து விடுவாரோ என்று காத்திருந்து உறுதிப்படுத்தியபின் வெளியிடுகிறார்களோ?*

**மலையகத் தொழிலாளரின் நாளாந்தச் சம்பளம் ஆயிரம் ருபாவாக உயர்த்தப்பட்டுள்ளதே?**

*எஸ்.லூரசியா, கிளிநொச்சி.*

*உடலையும் உயிரையும் தமது மண்ணுக்கே கொடுக்கும் மலையகத் தொழிலாளரின் வாழ்க்கைத் தரம் உயர இது உதவும். வழங்கிய அரசைப் பாராட்டத்தானே வேண்டும்.*

**வித்துவான் அவர்களே உங்களுக்கு யூரியூப் பார்க்கும் வழக்கம் உண்டா?**

*சி.சிவஞானம், கொக்குவில்*

*ஐயையோ, அதெல்லாம் என்னிடம் இல்லை. என்னிடம் இருப்பவை சைக்கிள் ரியூப், அதற்குப் போடும் வால்ற் ரியூப்.*



**வித்தூ, கொரோனா, கொரோனா என்று நாள்களைக் கடத்திக் கொண்டிருக்கிறார்களே... பிள்ளைகள் எல்லாம் கட்டாயம் படிக்க வேண்டுமா? இல்லையென்றால் இப்படியே படிப்பை நிறுத்தணுமா?**

*சிந்துஜா, அராலி.*

*அதுக்காகத்தானே சூம் கிளாஸ் இருக்கிறது. ரீச்சர் வெங்காயம் உடைச்சு உடைச்சுப் படிப்பிக்க நீங்கள் சாப்பிட்டுச் சாப்பிட்டுப் படிக்கலாம்.*

# குரங்காட்டம்



நீள நினைத்

நானும் அவனும் ஒரே ஊரைச் சேர்ந்தவர்கள். ஒரே பாடசாலையில் சாதாரண தரம்வரை படிச்சனாங்கள். கொஞ்சக்காலம் புடவைக் கடை ஒன்றில வேலை செய்தோம். ஒரு நாள் வேலை முடிஞ்சு வீட்டுக்குப் போகும்போது அவன் சொன்னான்,

"எங்கட நாட்டிலை எங்களைப் போன்றவர்கள் உழைக்கிற உழைப்பு ஒரு குடும்பத்தின்ரை சாப்பாட்டுக்கும் குடும்பச் செலவுக்குமே காணாது. இதைவிட ஓய்வில்லாத வேலை. எந்தவிதமான சலுகைகளுமில்லை. எனக்கு இந்தக் கடை வேலை வெறுத்துப் போச்சு. நான் வெளிநாட்டுக்குப் போகப் போறன். எங்கடை மாமா ஜெர்மனியிலை இருக்கிறார். அவர் என்னைக் கூப்பிடுகிற அலுவல்களை பார்க்கிறார். வாற கிழமை கொழும்புக்கு வரச் சொல்லியிருக்கிறார்" என்றான்.

இதைக் கேட்டவுடன் அவனின் பிரிவு எனக்கு வேதனையாக இருந்தாலும், "வெளிநாட்டுக்குப் போனவை தானே நல்ல வசதி வாய்ப்புகளுடன் இருக்கினம். நீயும் போய் என்னையும் கூப்பிடு" என்று நான் சொல்ல அவனும் சிரித்தபடி தலையாட்டினான்.

அன்றிலிருந்து அவன் கடை வேலைக்கு வரவில்லை. பிறகு அவனைச் சந்திக்கவும் இல்லை. ஒரு கிழமைக்கு பின் அவன் கொழும்புக்கு போய் விட்டார் என அறிந்தேன்.

சரியாக எட்டு ஆண்டுகள் கடந்தபின் அண்மையில் ஒரு நாள் என் வீட்டுக்கு என்னைப் பார்ப்பதற்காக வந்தான். முதலில் என் சுகத்தையும் கடை வேலையைப் பற்றியும் கேட்டான். அதன்பின் எங்கள் ஊர்ப் புதினங்கள், நம்நாட்டுப் பிரச்சினை கள் பற்றியும் கலந்துரையாடினோம். இதன் பிறகு தன்னைப் பற்றியும் தான் செய்த வேலையைப் பற்றியும் சொன்னான்.

"நான் ஜேர்மனிக்குப் போய் ஒரு வருஷம் வரை மொழிப் பிரச்சினையாலை நல்லாய்க் கஷ்டப்பட்டு போனன். பிறகு ஒருமாதிரி தட்டுத்தடுமாறி ஜேர்மன் நாட்டவர்களுடன் பிழையோ சரியோ கதைச்சன். இப்படியே கதைச்சுக்கொண்டு வர கொஞ்ச நாட்களாக அவங்கட மொழியைப் பிடிச்சிட்டன். இப்ப நல்லாய்க் கதைப்பன்.

நான் ஜேர்மனியில உள்ள ஒரு மிருகக்காட்சி பூங்காவிலை தான் வேலை செய்தனான். அங்குள்ள மிருகங்களுக்கு சாப்பாடு வைக்கிறது, கூட்டுறது, துடைக்கிறதுதான் வேலை. நல்ல சம்பளம் கிடைக்கும். வருட முடிவில லாபத்தில் ஒரு பகுதியையும் தருவார்கள்.

ஒரு நாள் அந்தப் பூங்காவின் நிர்வாகி என்னைத் தன் அலுவலகத்துக்கு அழைத்தார். அங்கு நான் போனதும் அவர் என்னைப் பார்த்துச் சொன்னார் "அண்மையில் எங்கடை பூங்காவில் இருந்த கொரில்லா குரங்கு சாவடைந்தது உமக்குத் தெரியும் தானே. அது இல்லாமையால் இங்கு வருவோர் தொகை பெருமளவில் வீழ்ச்சி அடைந்துள்ளது. அந்தக் குரங்கின் தோலை உரித்து சுத்தப்படுத்தி வைத்திருக்கிறோம்.

அந்தத் தோலைப் போர்த்துக் கொண்டு நீர் குரங்கு மாதிரி ஓடியாடி பாய்ந்து செயற்பட்டால் உமது சம்பளத்தை இரண்டு மடங்காக அதிகரித்துத் தரலாம்" என்றார்.

நான் கல்யாணம் கட்டாமல் இருக்கும் மூன்று சகோதரிகளையும் ஒரு கணம் நினைத்து பார்த்துவிட்டு சம்மதம் தெரிவித்தேன். அடுத்த நாள் தொடக்கம் இதற்கான பயிற்சியும் தந்தார்கள். பயிற்சி முடிந்தபின் குரங்கு தோலைப் போர்த்துக் கட்டிக் கொண்டு முன்னர் குரங்கிருந்த கம்பிக் கூட்டுக்குள் நுழைந்து துள்ளிக் குதிச்சன். அதைப் பார்த்தவர்கள் புதுக்குரங்கு ஒன்று வந்திருப்பதாக கதைக்கத் தொடங்கினர். இதை அறிந்து பெருந்தொகையான சனம் வந்தது. இதனால நல்ல வருமானமும் சேர்ந்தது. எனக்குச் சம்பளம் இரண்டு மடங்காக கிடைத்தது. ஒவ்வொரு மாதமும் சம்பளம் கிடைத்தவுடன் அப்பாவின் வங்கிக் கணக்குக்கு அனுப்பிவிடுவேன்.

இப்ப ஜெர்மனியில் கொரோனா வைரஸ் பரவியதால மிருகக்காட்சி பூங்காவைப் பூட்டிவிட்டார்கள். இதனாலை குரங்கு ஆட்டக்காரன் ஆகிய எனக்கு வேலை இல்லை. அங்க வேலை இல்லாமல் அறையில் அடைபட்டு கிடக்குற நேரம் இங்க வர வெளிக்கிட்டு ,பெரிய கரைச்சல் பட்டதோட பலவிதமான சோதனை வேதனைகளுடன் போன கிழமை வீடு வந்து சேர்ந்தன்.

நான் இங்க வந்து கண்டவைகளும், கேட்டவைகளும் எனக்கு மனக்குழப்பத்தை ஏற்படுத்திப் போட்டுது.

நான் அனுப்பிய காசில அப்பா எனக்கென்று ஒரு வீடு கட்டியிருக்கிறார். அதைப் பார்த்தால் அழுகை தான் வருகிறது. அது ஒரு கோயில் மடம் மாதிரித்தானிருக்கு.


சகோதரிகள் மூவருக்கும் தனித்தனி வீடு கட்டியிருக்கு. அவையும் மிகவும் உயரம் குறைந்தவை. காற்றோட்டத்துக்கு இடமில்லை. வெப்பமான காலத்தில் அதனுள் இருந்தால் பல நோய்களுக்கு ஆளாக வேண்டி வரும். ஒவ்வொரு சகோதரிகளுக்கும் 10 லட்சப்படி சீதனம் கொடுத்து திருமணம் நடந்திருக்கு. மூவருக்கும் வந்த கணவர்களில் சில நேரங்களில மதுபான வாசனை வீசுகிறது. இதைவிட பலருக்கு பல லட்சம் ரூபா வரையில் வட்டிக்குப் பணம் கொடுத்து, இப்ப வட்டியும் இல்லை கொடுத்த பணத்தையே அறவிட முடியாமல் அப்பா அலைந்து திரிகிறார் என அறிந்தேன். இதையெல்லாம் யோசித்துப் பார்த்தால் நான் குரங்காட்டம் ஆடித் தேடிய பணம் என்றதால்தான் இப்படி சிந்திச் சிதறி சீரழிந்ததோ என்ற எண்ணமே வருகிறது என சொல்லித் தன் கதையை முடித்தான்.

**சி. காசிப்பிள்ளை**
கொடிகாமம்

**உங்கள் வாழ்வில்**
**சந்தித்த, அனுபவப்பட்ட**
**அழகிய, சுவாரசியமான**
**மறக்க முடியாத,**
**நினைவுகளை**
**எழுதி அனுப்புங்கள். சிறந்த நினைவுப் பகிர்வுகள் 'நீள நினைதல்' பகுதியில் பிரசுரமாகும்.**

**உதயன் சஞ்சீவி**
**இல.361, கஸ்தூரியார் வீதி,**
**யாழ்ப்பாணம்.**
**0773165555**

# கண் கெட்டபின்....!




ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச தலைமையிலான அரசாங்கத்தின் கன்னி பட்ஜெட் மீதான இறுதி வாக்கெடுப்பு டிசெம்பர் 10 ஆம் திகதி நாடாளுமன்றத்தில் நடைபெறவுள்ளது. 2021 ஆம் நிதியாண்டுக்கான வரவு -செலவுத் திட்டம் நவம்பர் 17 ஆம் திகதி நிதி அமைச்சர் மஹிந்த ராஜபக்சவால் சபையில் சமர்ப்பிக்கப்பட்டது.

நவம்பர் 18 ஆம் திகதி முதல் 21 ஆம் திகதிவரை இரண்டாம் வாசிப்புமீதான விவாதம் நடைபெற்று அன்று மாலை வாக்கெடுப்பு நடத்தப்பட்டது.

அரசமைப்பின் 20ஆவது திருத்தச்சட்டத்துக்கு ஆதரவாக வாக்களித்த ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் எம்.பிக்கள் நால்வர்,பட்ஜெட் தொடர்பான வாக்கெடுப்பில் பங்கேற்கவில்லை. கொரோனாத் தொற்றால் உயிரிழக்கும் முஸ்லிம்களின் சடலங்களை அடக்கம் செய்வதற்குத் தொடர்ச்சியாக அனுமதி மறுக்கப்படுவதாலேயே அவ்வாறானதொரு முடிவை முஸ்லிம் காங்கிரஸ் எம்.பிக்கள் எடுத்திருந்தனர். எனினும், 20 ஐ ஆதரித்த ரிஷாத் கட்சி உறுப்பினர்கள் பட்ஜெட்டுக்கும் நேசக்கரம் நீட்டினர். ஆனால் இறுதி வாக்கெடுப்பின்போது ரிஷாத் கட்சி உறுப்பினர்களும் நழுவக்கூடும் என தகவல் வெளியாகியுள்ளது. சடலங்களை எரிக்கும் விவகாரத்தை அடிப்படையாகக்கொண்டே இந்த முடிவு எடுக்கப்படவுள்ளது எனவும் தெரியவருகின்றது. பட்ஜெட்டை நிறைவேற்றிக்கொள்வதற்கு சாதாரண பெரும்பான்மை போதுமானது.

அதாவது (113) வாக்குகள் போதும். எனவே இந்த விடயத்தில் முஸ்லிம் எம்.பிக்களின் ஆதரவு அரசுக்குத் தேவைப்படாது. முஸ்லிம் எம்.பிக்கள் 20 ஐ எதிர்த்திருந்தால் அதனை நிறைவேற்றிக்கொள்வதற்கான பெரும்பான்மை கோத்தா அரசாங்கத்துக்கு கிடைத்திருக்காது. அன்று கை உயர்த்தி விட்டு, இன்று ஒப்பாரி வைப்பது அரசியலில் எந்த டிசைன் என்பது மட்டும் புரியவில்லை.

○ மௌனா

# மணிக்கதை

## வாழையடி வாழை



அது ஒரு பெரிய வாழைத்தோட்டம். அங்கு நூற்றுக்கணக்கில் வாழை மரங்கள் வளர்ந்து உயர்ந்து குலை தள்ளி நின்றன. அந்தத் தோட்டத்துக்கு பலர் வந்து வாழைக் குலைகள் வாங்கிச் சென்று கொண்டிருந்தனர்.

ஒருவன் தோட்டக்காரனிடம் நன்கு குலை தள்ளியிருந்த வாழை மரங்களை முழுமையாக விலைக்கு வாங்கி, வெட்டி பாரவூர்தி ஒன்றில் ஏற்றிச் சென்றான். அதில் இரண்டை ஒரு வீட்டு வாசலில் இறக்கிவிட்டு, அடுத்த இரண்டையும் அடுத்த வீதியில் இருக்கும் இன்னொரு வீட்டு வாசலில் இறக்கிவிட்டுச் சென்றது பாரவூர்தி.

ஒன்று மணவீடு

மற்றதோ பிணவீடு

இரண்டு மூன்று நாள்களின் பின்னர் குலைகள் அகற்றப்பட்ட வாழைகள் நான்கும் அண்மையில் இருந்த குப்பைமேட்டில் தூக்கி வீசப்பட்டிருந்தன. மணவீட்டை அலங்கரித்தாலும் சரி, பிணவீட்டை அடையாளப்படுத்தினாலும் சரி கடைசியில் நமக்கு குப்பை மேடே கதி.... இதுதான் நம் தலைவிதி...."

வாழைகள் தம் தலைவிதியை நொந்து கொண்டிருந்தன. அதேவேளை கோவில் திருவிழா ஒன்றுக்கு கட்டப்பட்டிருந்த வாழை மரங்களும் குலைகள் அகற்றப்பட்ட நிலையில் அதே குப்பை மேட்டுக்குத் தூக்கி வரப்பட்டுக் கொண்டிருந்தன.

# அறிந்தும் அறியாமலும்

○ சூரியன்

## இ.தொ.காவுடன் அனுசா கூட்டணி?



மலையக மக்கள் முன்னணியின் ஸ்தாபகத் தலைவரான அமரர் பெ. சந்திரசேகரனின் புதல்வி அனுசா சந்திரசேகரன் புதியதொரு அரசியல் கட்சியை ஆரம்பிக்கவுள்ளார் என 'அறிந்தும் அறியாமலும்' பகுதியில் ஏற்கனவே நாம் தகவல் வெளியிட்டிருந்தோம். இந்நிலையில் புதிய அரசியல் கட்சி குறித்த அறிவிப்பை அனுசா சந்திரசேகரன் கடந்தவாரம் வெளியிட்டார்.

'சந்திரசேகரன் மக்கள் முன்னணி' என்ற பெயரில் புதிய கட்சி உதயமாகியுள்ளது. அதுமட்டுமல்ல 'அண்ணா சந்திரசேகரன் தொழிலாளர் முன்னணி' எனும் பெயரில் தொழிற்சங்கப் பிரிவும் அமைக்கப்பட்டுள்ளது.

இவ்விரு அமைப்புகளினதும் பொதுச்செயலாளராக அனுசா சந்திரசேகரன் செயற்படும் நிலையில் ஏனைய உறுப்பினர்கள் விபரம் விரைவில் அறிவிக்கப்படவுள்ளது என்பதனை நீங்கள் அறிந்திருக்கலாம். ஆனால் அடுத்த மாகாணசபைத் தேர்தலின்போது இ.தொ.காவுடன் கூட்டணி அமைத்து அனுசா அணி களமிறங்கலாம் என்பதே 'லேட்டஸ்ட்' தகவலாகும்.

தமிழ் முற்போக்குக் கூட்டணிக்கு எதிராக பலமானதொரு கூட்டணியைக் கட்டியெழுப்பத் துடிக்கும் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் அதற்கான அஸ்திரமாக அனுசாவைப் பயன்படுத்தக்கூடும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

எனினும், இது தொடர்பில் இன்னும் அதிகாரப்பூர்வ தகவல் வெளியாகவில்லை. எது எப்படியிருந்தாலும் அடுத்த தேர்தலில் அனுசா போட்டியிடுவது உறுதி என அவருக்கு நெருக்கமானவர்கள் தெரிவித்துள்ளனர்.



## பொன்சேகாவின் இன்னொரு முகம்

2010இல் நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலின்போது பொதுவேட்பாளராகக் களமிறங்கிய சரத் பொன்சேகாவுக்கு, தமிழ் மக்கள் முழுமையான ஆதரவை வழங்கினர். ராஜபக்ச ஆட்சியில் அவர் சிறையில் அடைக்கப்பட்டபோது அவரின் விடுதலைக்காக பல வழிகளிலும் நேசக்கரம் நீட்டினர். இதனால் தமிழ் மக்கள்மீது பொன்சேகாவுக்கு பெரும் மதிப்பு ஏற்பட்டது. தமிழ் மக்களுக்காக அரசியல் ரீதியில் குரல் கொடுக்கவும் ஆரம்பித்தார். புலிகளின் தலைவர் பிரபாகரனின் வீரதீரச் செயல்களையும் வெளிப்படையாகவே பாராட்டினார். தமிழ் அரசியல் கைதிகள் விடுதலை செய்யப்படவேண்டும் எனவும் வலியுறுத்தினார்.

எனினும்,கடந்த பொதுத்தேர்தலின் பின்னர் பொன்சேகாவின் போக்கு முழுமையாக மாறியுள்ளது. அவர் இனவாதம் கக்குவதுடன், இராணுவத்தினருக்கு வெள்ளையடிப்பு செய்யும் முயற்சியிலும் இறங்கியுள்ளார். அதேபோல் படையினருக்கு எதிராக குற்றச்சாட்டுகளை முன்வைக்கும் தமிழ் அரசியல்வாதிகள்மீதும் சீறிப்பாய்ந்து வருகின்றார்.

"மாவீரர் தினத்தன்று புரேவி புயல் வந்திருக்கவேண்டும், புலிகளை அழித்த"பகுதியில்தான் அந்தப் புயல் கரைதொட்டுள்ளது - கடந்துசென்றுள்ளது" என்று நாடாளுமன்றத்தில் அண்மையில் அவர் ஆற்றிய உரை குரோதத்தின் உச்சகட்டமாகும். அவர் தனது உள் மனதில் இருப்பதை வெளிப்படையாகக் கொட்டித் தீர்த்தார். எனினும், புயலால் மக்களுக்கு பாதிப்பு ஏற்படுவதைத் தான் விரும்பவில்லை எனக் குறிப்பிட்டு சமாளித்தார். இவ்வாறான அறிவிப்புகள்மூலம் தனது கோர முகத்தை தமிழ் மக்கள் மத்தியில் காட்ட ஆரம்பித்துள்ளார் பொன்சேகா.



# மாகாணத் தேர்தல் எப்போது?

2021 ஜுன் மாதத்துக்குள் மாகாணசபைத் தேர்தலை நடத்திவிட வேண்டும் என்பதே அரசாங்கத்தின் எதிர்பார்ப்பாக உள்ளது. பழைய முறையிலேயே (விகிதாசார முறை) தேர்தலை நடத்துவதற்கான சட்ட ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ள நிலையில் கொரோனாத் தாக்கத்தால் அவை கிடப்பில் போடப்பட்டுள்ளன. வடக்கு, கிழக்கு உட்பட 9 மாகாண சபைகளின் பதவிக் காலம் முடிவடைந்து அவற்றின் நிர்வாகம் ஆளுநரின் கட்டுப்பாட்டின்கீழ் இருக்கின்றது. கொரோனா நெருக்கடி கட்டுக்குள் வந்ததும் நடக்கும் முதல் தேர்தல் இதுவாகவே இருக்கும்.

மாகாணசபைகள் தேவையில்லை என்ற வாதம் முன்வைக்கப்பட்டாலும் மாகாணசபை முறைமையை சிற்சில மாற்றங்களுடன் தக்கவைத்துக்கொள்வதே அரசாங்கத்தின் நோக்கமும்கூட. எனவே, மாகாணத் தேர்தல் நடக்காது என கூறப்படும் தகவல் உண்மையில்லை. அதேவேளை, பிரதான அரசியல் கட்சிகளின் சார்பில் ஒரு சில மாகாணங்களுக்கான முதலமைச்சர் வேட்பாளர்களாக தற்போது நாடாளுமன்ற உறுப்பினர்களாக இருப்பவர்களே களமிறங்கவுள்ளனர். இது தொடர்பில் கட்சியின் உயர்மட்டத்துடன் ஏற்கனவே பேச்சுகள் நடத்தப்பட்டுள்ளன. மொட்டுக் கட்சியில் இரு எம்.பிக்கள் பதவி துறப்பார்கள் என அறியமுடிகின்றது. அத்துடன், சில மூத்த அரசியல் வாதிகளின் வாரிசுகளும் இந்தத்தேர்தல் ஊடாகவே கன்னி அரசியல் பயணத்தை ஆரம்பிக்கவுள்ளனர்.

# புகழ்வது மட்டுமே புலவர்க்கு தொழிலா?

தருமராசா அஜந்தகுமார்

**பழைய கண்ணாடியில் புதிய விம்பங்கள்**

படைப்பாளியின் முக்கியத்துவம் என்ன? அவன் மிகப்பெரிய பிரம்மாவா? என்றால் அதில் எத்தனையோ கேள்விகள், சர்ச்சைகள் இருக்கவே செய்கின்றன. ஆனால் படைப்பாளியின் ஆற்றல் மட்டுமே ஒரு பேராக்கமாக உருப்பெற்றுவிடுவதில்லை. அக்காலமும் அரசியலும் பண்பாடுகளும் என்று எத்தனையோ புறக்காரணிகளின் விசைகளில் தான் படைப்பு உருக்கொள்கின்றது. படைப்பாளி அறியாமலே ஒரு படைப்பு புதிய அர்த்தங்களில் புதிய தளங்களில் உருக்கொண்டுவிடுகின்றது. எழுதிய படைப்பாளி ஒரு கருவியாக எஞ்சிவிட அப் படைப்பாளிக்கே அது புதிய வாசிப்பனுபவத்தை வழங்கலாம். ஆனால் அப் படைப்பாளிக்கு இன்று சமூகத்தில் என்ன அங்கீகாரம் இருக்கின்றது? படைப்பாளி என்றால் கல்வெட்டு எழுதுவதற்கும் யாருக்கும் காதல் கவிதை எழுதுவதற்கும் உரிய ஒருவன் என்ற மனப்பாங்கு இன்னும் சமூகத்திலே இருக்கவே செய்கின்றது.



இன்று அரசாங்கத்துடன் படைப்பாளிக்கு உரிய தொடர்பு என்ன? கலாசாரத்துக்கு என்று ஒரு அமைச்சுப்பகுதி இருக்கின்றது. திணைக்களங்கள் இருக்கின்றன. எத்தனையோ விருதுகள் இருக்கின்றன. நூல் கொள்வனவு, விருதுகளை, பரிசுகளைப் பெற்றுக்கொள்ளப் படைப்பாளிகளும் அவற்றை வழங்க அரசாங்கமும் இருக்கின்றன. அரசாங்கம் ஏன் கலைஞர்களை ஊக்குவிக்கவேண்டும்? அரசாங்கத்துக்கு அது ஒரு சடங்கா என்ற சிந்தனைக் கிளர்தல் மிக முக்கியமானது. கலைஞர்களின் கருத்துகளை நாடாளுமன்றத்திலே விவாதிக்கின்றார்களா? அரச இயந்திரத்துக்கு ஏதேனும் ஒரு எரிபொருளாகப் படைப்பாளிகளின் சிந்தனைகள் இருக்கின்றனவா?

எழுதும் ஆக்ரோசமும் பரிசும் பாராட்டும் வழங்கும்நிகழ்வும்ஒருசடங்காக முற்றுப்பெறுகின்றனவா? படைப்பாளிக்கு அரசியல் தீண்டாமைக்குரியது என்று சொல்லமுடியுமா? எழுத்து ஒரு சடங்கு எனின் அது தேவையற்றது. வெறும் அறைக்குள் புத்தகத்துக்குள் நூலகத்துக்குள் சிந்தனைகள் சிறை வைக்கப்பட்டு என்ன பயன்?

ஆனால் பழங்காலத்தில் அரசின் தவிர்க்கமுடியாத அங்கமாகப் புலவர்கள் இருந்திருக்கின்றார்கள். அரசனைப் பாடிப் பாடிப் பரிசில் பெற்றிருக்கின்றார்கள். புகழ்ச்சிக்கு அப்பால் அரசனுக்கு அறிவுரை சொல்கின்ற மிகப்பெரிய பொறுப்பினைத் தம்மகத்தே வைத்திருந்தார்கள். புலவர்களின் தொடர்பும் வாழ்த்தும் தமக்கிருப்பதில் அரசனும் புளகாங்கிதம் கொண்டிருந்தான்.

**ஓங்கிய சிறப்பின் உயர்ந்த கேள்வி**
**மாங்குடி மருதன் தலைவன் ஆக**
**உலகமொடு நிலைஇய பலர்புகழ் சிறப்பின்**
**புலவர் பாடாது வரைக என் நிலவரை**

என்று வஞ்சினமொழியாக, தலையாலங்கானத்து செருவென்ற பாண்டியன் நெடுஞ்செழியன் கூறுகின்றான். அங்கு புலவர்கள் பாடாமல் இருப்பதை மிகப்பெரிய தண்டனையான விடயமாக அவன் கருதியிருக்கின்றான். அவன் கூறிய தலைமைக் கவிஞனாகிய மாங்குடி மருதனார் என்ற புலவர் வெற்றி வீரனாக விளங்கிய பாண்டியனை வெறுமனே புகழ்பவராக இல்லாமல் அவனுக்குரிய அறிவுரையை, வாழ்க்கைச் சித்தாந்தத்தை உருவாக்கிக் கொடுப்பவராக இருந்திருக்கின்றார். தன் மக்களைக் காப்பதிலும் அவர்கள் பழிக்கு ஆளாகக் கூடாது என்றும் பயந்திருந்த பாண்டியன் பகையரசர்களிடமோ அவர்களின் குடிமக்களிடமோ இரக்கம் காட்டவில்லை. அவன் செய்த அழிவுகள் ஏராளமானவை. ஆனால் அவற்றைப் புகழாமல் இவையெல்லாம் தேவையற்றவை. இவற்றை விடுத்து ஞானாசிரியன் ஒருவனை அடைந்து பரமபதங்களைக் கேட்டு உய்வாயாக என்று நிலையாமையையும் உறுதிப்பொருளையும் உரைக்கின்றார். இவ்வாறு பாடப்பட்ட நூலே பத்துப்பாட்டு நூல்களுள் நீண்ட வரிகளைக் கொண்டமைந்த மதுரைக்காஞ்சி ஆகும். அரசனைப் புகழ்ந்து பாடியபோதும் அவனுக்குரிய உறுதிப்பொருளைத் தெளிவாக எடுத்துரைத்து நின்றிருக்கின்றார் புலவர்.

இயற்கையை விட்டு நாடு அமைய முடியாது. எத்தனை செயற்கைகள் உருவாக்கப்பட்டாலும் அவை இயற்கையை கையகப்படுத்துவதற்கான செயலூக்கங்களாகவே அமையும். திருகோணமலை இயற்கைத்துறைமுகத்தையும் இந்து சமுத்திரத்தையும் கையகப்படுத்தத்தான் எத்தனை தந்திரங்கள்? எத்தனை நாடுகள்? எத்தனை போட்டிகள்? ஆனால் மக்களைப் போற்றாத அரசு அழிந்துவிடும். எத்தனை உறுதியுடன் இருந்தாலும் அந்த உறுதியெல்லாம் அழிந்து சுவடே தெரியாமல் போய்விடும்.

அரசு அறிய வீற்றிருந்த வாழ்வும் வீழும் என்று நல்வழியிலே இதனையே ஔவை கூறுகின்றாள்.

அரசனை வாழ்த்துகின்றபோது இயற்கையுடன் இணைத்தே அவனைப் புகழ்ந்தார்கள் புற நானூற்றுப் புலவர். அரசனின் பொறுமை, சூழ்திறன், வலிமை, அழித்தல், கொடை என்பவற்றை ஐம்பெரும் பூதத்து இயற்கையோடு ஒப்பிடுகின்றார்கள்.

**மண் திணிந்த நிலனும்**
**நிலம் ஏந்திய விசும்பும்**
**விசும்பு தைவரு வளியும்**
**வளித் தலைஇய தீயும்**
**தீ முரணிய நீரும்**
**என்றாங்கு**
**ஐம்பெரும் பூதத்து**
**இயற்கை போல..**


என்று பாடியுள்ளார்கள். இயற்கையோடு வாழ்ந்ததால் இயற்கையோடு பிணைத்துப் பாடியதால் இயற்கையும் பர்துகாக்கப்பட்டது. சுயபொருளாதாரத்தை நோக்கியும் இயற்கை வேளாண்மை நோக்கியும் இயற்கை வாழ்வை நோக்கியும் நாம் செல்லும் போது புதிய தொரு மலர்ச்சி எம்மை நோக்கிக் கையசைப்பதைக் காணமுடியும். வாழ்த்து மட்டுமல்ல வாழ்க்கையும் இயற்கையாக இருக்கும் போது ஏற்படும் அனுபவம் அலாதியானது. மக்களை இயற்கையை நோக்கி அழைத்துச் செல்லவேண்டியதும் அரசாங்கமே ஆகும்.

**மாரி பொய்ப்பினும் வாரி குன்றினும்**
**இயற்கை அல்லன செயற்கையிற் தோன்றினும்**
**காவலர்ப் பழிக்கும் அக்கண்ணகன் ஞாலம்**

என்று கிள்ளிவளவனை நோக்கி வெள்ளைக்குடி நாகனார் என்ற புலவர் பாடியிருப்பதும் மனங்கொள்ளத்தக்கது. இதன் மூலம் நடக்கும் தவறுகள் அனைத்தும் அரசாங்கத்தின் தலையையே சென்றடைந்துவிடும். இதனை ஔவையார் இன்னொரு வகையில் பாடுகின்றார். எந்த நிலத்தையும் உயிர்ப்பிக்கும் ஆற்றல் ஆள்வோருக்கே உரியது என்கின்றார்.

**நாடாகொன்றோ காடா கொன்றோ**
**அவலா கொன்றோ மிசையா கொன்றோ**
**எவ்வழி நல்லவர் ஆடவர்**
**அவ்வழி நல்லை வாழிய நிலனே(புறம் 187)**

என்று பாடுகின்றார்.
நிலம் முக்கியமல்ல. ஆள்வோரே அதனைத் தீர்மானிக்கின்றார்கள் என்றுள்ளார்.



நெல்லையும் நீரையும் விட மக்களின் உயிர் அரசனே என்று மோசிகீரனார் என்ற புலவர் பாடினார்.

**நெல்லும் உயிரன்று நீரும் உயிரன்று**
**மன்னன் உயிர்த்தே மலர்தலை உலகம்**
**அதனால் யான் உயிர் என்பது அறிகை**
**வேன்மிகு தானை வேந்தர்க்குக் கடனே**
(புறம் 186)"

இயற்கையாகவும் உயிராகவும் விளங்க வேண்டிய பொறுப்புள்ள அரசனை புகழ்ந்து பாடுவது மட்டும் கடமையாக கொள்ளாது செவியறிவுறூஉ(அறிவுரை) சொல்பவனாகப் புலவன் விளங்கி யிருந்திருக்கின்றான். அந்த அறிவுரைகளை அரசனும் செவிமடுத்து இயங்கியிருக்கின்றான். தமிழர்களின் விடுதலைப் போராட்டத்திலும் புலவர்களின் பங்களிப்பும் அளப்பரியதே. இப்போது படைப்பாளிகளின் நிலை என்ன? அரசியல்வாதிகளின் நிலை என்ன? கேள்விகள் துரத்துவதைத் தவிர்க்கமுடியவில்லை. புகழ்பாடுவதும் அறம் பாடுவதும் மட்டுமா படைப்பாளியின் தொழில்?



# கர்ப்பகாலத்தில் கொரோனா சிசுவுக்கு பாதிப்பா?

கொரோனாப் பெருந்தொற்றால் ஏற்பட்டிருக்கும் உளம்சார் பாதிப்புக்களை நிவர்த்தக்கும் நோக்கில் இந்தக் கட்டுரை சாந்திகம் உளவளத் துணை நிறுவனத்தின் சமூக ஒற்றுமை மற்றும் நல்லிணக்க (SCORE) செயற்திட்டத்தின் ஓர் அங்கமாக பிரசுமாகின்றது.

**கலாநிதி.க.கஜவிந்தன்**

முதுநிலை உளவியல் விரிவுரையாளர்.
உளவியல் துறை, யாழ். பல்கலைக்கழகம்.

கொரோனா சமூகத்தில் பல தாக்கங்களை ஏற்படுத்திக் கொண்டிருக்கிறது. இவ்வாறானதொரு காலகட்டத்தில் கர்ப்பவதிகள் தமது உடல் நலத்தையும், உளநலத்தையும் பாதுகாத்துக்கொள்வது மிகவும் அவசியமாகும். இதற்காக குடும்ப அங்கத்தவர்களும் சகல ஒத்துழைப்பையும் வழங்க வேண்டும்.வயிற்றினுள் கரு உருவாகி அது வளர்ந்துவரும் காலகட்டத்தில் பல உடலியல், உளவியல் மாற்றங்கள் சிசுவுக்கு அதன் வளர்ச்சிக் கட்டத்தில் நிகழ்கின்றன.

இந்த மாற்றங்கள் வெறுமனே வளர்ச்சியை மட்டுமல்லாது குழந்தையின் உடல் உளப் பண்புகளையும் தீர்மானிக்கும் காரணிகளாக உள்ளன. இவ்வாறு சிசு வளர்ச்சிக் கட்டத்தில், சிசுவானது தனது அறிகை விருத்தி, உளச்செயற்பாடு, சிந்தனை அமைப்பு, உடல்சார் தொழிற்பாடுகள் என்பவற்றை இயல்பாகக் கொண்டுள்ளது. எனினும் 60 வீத உடல், உளப்பண்புகள் சூழலில் இருந்தே குழந்தைக்குக் கிடைக்கின்றன. இவ்வாறான அறிவானது (புலக்காட்சி) தாயின் சிந்தனை கட்டமைப்பு ஊடாகவும் புலன் வழியாகவும் குழந்தையைச் சென்றடைகின்றது. இவ்வாறு சென்றடையும் அனைத்தும் குழந்தையின் உடல் உள வளர்ச்சியில் செல்வாக்குச் செலுத்துகின்றன.

இதனால் கர்ப்பவதிகள் கொரோனா நோய்த் தாக்கம் பற்றிய அதிகளவு பயத்துடன் இருக்கக்கூடாது. இவ்வாறான பயங்கள் வயிற்றில் உள்ள சிசுவின் உளப்பண்புகளை பாதிக்கும். இதனால் அந்தக் குழந்தை பிறந்து வளரும் காலக்கட்டத்தில் பலவிதமான மனவெழுச்சிப் பிரச்சினைகளுக்கு ஆளாகும். இதனால் கர்ப்ப காலத்தில் அதிகளவு பயம், பீதி, மனஅழுத்தம், கவலை, பதகளிப்பு, மனச்சோர்வு முதலிய உளப்பிரச்சினைகளால் கர்ப்பவதிகள் பாதிக்கப்படாது தம்மை பாதுகாத்துக் கொள்ள வேண்டும். இவ்வாறான உளநலப் பிரச்சினைகள் கர்ப்பவதிகளுக்கு ஏற்பட்டால் பின்வரும் பிரச்சினைகள் குழந்தைகளுக்கு பிற்காலத்தில் ஏற்பட வாய்ப்புள்ளது.

**உளரீதியான பிரச்சினைகள்**

- மனச்சோர்வு
- பயம்
- கவலை
- பதகளிப்பு
- தாழ்வு மனப்பான்மை
- எதிர்மறையான சிந்தனை
- கோபம்
- எரிச்சல்

**நடத்தை ரீதியான பிரச்சினைகள்**

- தூக்கத்தின்போது திடுக்கிட்டு எழுதல்
- அழுதல்
- தேவையற்ற பயம்
- அந்நியர்களை கண்டால் ஓடி ஒளிதல்
- விரக்தி நிலை
- பதட்டத்தோடு காணப்படல்
- அமைதியற்ற தன்மை
- முரண்பிடிக்கும் மனப்பான்மை
- அடிக்கடி சோர்ந்து போதல்
- உடல் ரீதியான பிரச்சினைகள்
- சுவாசம் சம்பந்தமான பிரச்சினை
- இதயத்துடிப்பின் வேகம் மாறுபடும்
- கை, கால், உடல் ரீதியான வலிகள்
- உடலில் சக்தியற்ற தன்மை
- உடலியக்க வினைத்திறன் குறைவு
- அடிக்கடி தொற்றுநோய்களுக்கு உள்ளாதல்.

எனவே கொரோனாத் தொற்றுப் பீதியால் கர்ப்ப காலத்தில் தாய்க்கு ஏற்படும் மனநல பாதிப்பால் இவ்வாறான பிரச்சினைகள் குழந்தைக்கும் ஏற்படும். இதனால் கர்ப்ப காலத்தில் தாயின் மனநலம் என்பது முக்கியமானதொன்றாகும்.

எனவே கொரோனாத் தொற்றுப் பற்றிய தேவையற்ற பயங்களையும் பீதிகளையும் கர்ப்பவதிகள் தவிர்க்க வேண்டும். அத்தோடு பயங்களையும், பீதிகளையும் ஏற்படுத்துபவர் தம்மை அணுகாது அவர்கள் பாதுகாத்துக்கொள்ள வேண்டும்.

## கர்ப்பவதிகளுக்கான சில ஆலோசனைகள்

1. பெற்றுக்கொள்ளும் தகவல்களை நேர்முகமானதாக பெற்றுக்கொள்ள வேண்டும்.
2. பதற்றமான சூழ்நிலைகளை உருவாக்கும் இடங்களுக்குச் செல்வதையும், அத்தகைய சூழ்நிலைகளையும் தவிர்த்துக்கொள்ள வேண்டும்.
3. நேர்முகமான சிந்தனைப் போக்கைக் கொண்டிருக்க வேண்டும். எதிர்மறையான எண்ணங்களைக் கொண்டிருக்கக்கூடாது.
4. நல்ல விடயங்களைப் பார்த்தல், நல்ல விடயங்களைச் சிந்தித்தல், நல்ல விடயங்களைக் கேட்டல், என்கின்ற புலன் தரவுகளையும் புலக்காட்சிகளையும் ஏற்படுத்திக்கொள்ள வேண்டும்.
5. இனிமையான இசைகளைக் கேட்க வேண்டும்.
6. ஆன்மீகச் சிந்தனையில் - செயற்பாட்டில் மனதை ஈடுபடுத்த வேண்டும்.
7. சூழலைச் சுத்தமாகவும் சுகாதாரமாகவும் வைத்துக்கொள்ள வேண்டும்.
8. மனஅழுத்தத்தை உருவாக்கும் தொடர் நாடகம், சினிமாப் படம் போன்றவற்றில் வரும் உணர்வுபூர்வமான காட்சிகளைப் பார்ப்பதைத் தவிர்ப்பது நன்று.
9. கொரோனாத் தொற்றுப் பற்றிய செய்திகளையும் அதன் தாக்கத்தையும் நினைத்துப்பார்ப்பதையும் அது தொடர்பான செய்திகளை படிப்பதையும் அறிவதையும் தவிர்த்துக்கொள்ள வேண்டும்.
10. சிறு சிறு உடல் உபாதைகளான தடிமன் ,காய்ச்சல் உடையவர்களின் அருகில் இருப்பதைத் தவிர்த்துக்கொள்ள வேண்டும்.
11. புகைத்தல் ,மதுபானம் பாவிப்பவர்களிலிருந்து விலகியிருத்தல் வேண்டும்.
12. மனதுக்கு இன்பத்தை தரும் கதைகளைப் படிப்பது நன்று.
13. வீட்டில் உள்ளவர்களுடன் தேவையற்ற சண்டை பிடிவாதம் கடந்த கால பிரச்சினைகள் என்பவற்றுக்காக சண்டைபோடுதலையும், கோபப்படுவதையும் தவிர்க்க வேண்டும்.
14. இயற்கையாகக் கிடைக்கப்பெறும் சத்துள்ள ஆகாரங்களை உண்ணுதல் சிறந்தது.
15. 1மருத்துவரின் பரிந்துரையின்றி மருந்துகளை உட்கொள்வதைத் தவிர்க்க வேண்டும்.

குழந்தையின் பிறப்பு பற்றிய பயமோ குழந்தையின் எதிர்காலம் பற்றிய எதிர்மறையான எண்ணமோ (Negaitve Thoughts) கர்ப்பவதிகளை மனஅழுத்தத்துக்கு உள்ளாக்குவதால், அவற்றில் இருந்து அவர்கள் தங்களைத் தற்காத்துக்கொள்ளவேண்டும்.

குடுப்ப உறுப்பினர்களும் சமூகத்தவர்களும் இக்காலகட்டத்தில் அவர்களுக்கு பக்கபலமாக இருந்து இவ்வாறான பிச்சினைகளிலிருந்து விடுபடவும் தேவையற்ற பிரச்சினைகள் அணுகாதவாறும் பாதுகாத்துக் கொள்ள வேண்டும்.

